# எரிமலை (ஜூவாலாமுகி) யோகம்

# மற்றும்

# நிராகாரி, பரிஸ்தா சொரூப டிரில்

# முன்னுரை

அவ்யத்த பாப்தாதா அவர்கள் முதலில் நம்மை நிராகாரி, தேவதை, பூஜைக்குரியவர், பிராமணர், பரிஸ்தா என முழு நாடகச் சக்கரத்தில் நமது ஐந்து சொரூபங்களின் பயிற்சி செய்யச் சொல்லியிருந்தார், பிறகு நம்மை நமது நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தை பயிற்சி செய்யச் சொல்லியிருந்தார். பாபா அவர்கள் நமக்கு நிராகாரி, சாகாரி, பரிஸ்தா சொரூப டிரில்லையும் சொல்லியிருக்கிறார். பாபா அவர்கள் முழு உலக நாடகச் சக்கரத்தின் பல்வேறு சிறப்பம்சங்களின் ஞானத்தைக் கொடுத்ததோடு அவற்றை டிரில் செய்யவும் சொன்னார், அதில் பாபா அவர்கள் நமக்கு நமது பரந்தாமத்தில் மின்னிக்கொண்டிருக்கும் நட்சத்திர ரூபத்தில் ஞானசூரியன் பாபாவோடு இருக்கக்கூடிய, சத்தியயுகத்தில் அனைத்து சதோபிரதான சுக சாதனங்களால் நிறைந்த தேவதை சொரூபத்தை, துவாபர யுகத்தின் பூஜைக்குரிய சொரூபத்தை, பின்னர் அனைத்திலும் உத்தம பிராமண சொரூபத்தை மற்றும் கடைசியில் திரும்பும் பயணத்தில் அதாவது பரிஸ்தா சொரூபத்தையும் டிரில் செய்யச் சொல்லியிருந்தார். இப்படியாக பாபா நம்மை நமது பல்வேறு சொரூபங்களை அனுபவம் செய்ய வைத்தார் மேலும் அந்த அனுபவங்களின் அதிகாரமுடையவராக இருக்க பிரேரணையும் தந்தார். எனவே நமக்கு இந்த எல்லா விசயங்களைப்பற்றிய ஞானம் இருப்பதோடு அவற்றின் அனுபவம் இருப்பதும் மிகவும் அவசியமாகும், அப்போதே இந்த அனைத்தையும் நல்லபடியாக டிரில் செய்து அதன் உண்மையான சுகத்தை பெறமுடியும். எனவேதான் இங்கு இந்த விசயங்களைப்பற்றி சில சிந்தனைகள் முன்வைக்கப்படுகிறது.

## எரிமலை யோகம்

### ஜுவாலாரூப தேவி

சினேகத்தை பார்க்கும்போது டிராமா நினைவிற்கு வருகிறது. நாடகம் நடுவில் வரும்போது அமைதி வந்து விடுகிறது. சினேகத்தில் வந்தீர்கள் என்றால் என்ன நிலை ஏற்படுகிறது. நதியாகி விடுகிறீர்கள். ஆனால் அப்படி அல்ல, டிராமா. நாம் எதைச் செய்கிறோமோ அதை மற்ற எல்லோரும் செய்வார்கள், எனவே அமைதியாக இருங்கள். ஒருவேளை எல்லோரும் ஒன்றாக இருந்திருந்தால் எது கடைசி கர்மாதீத நிலையின் அனுபவமாக இருந்ததோ அது நாடகப்படி வேறாக இருந்திருக்கும். ஆனால் அப்படித்தான் இருந்தது அதனால் கொஞ்சம்பேர் மட்டுமே முன்னால் இருந்தனர். முன்னால் இருந்தபோதும் முன்னால் இருக்கவில்லை. சினேகம் வதனத்திலும் இருக்கிறது மேலும் இருக்கும். அழியாததல்லவா. ஆனால் சினேகத்தை டிராமா அமைதிக்கு கொண்டுவருகிறது என கேட்டிருக்கிறீர்கள். மேலும் இந்த அமைதியே, சக்தியைக் கொண்டுவரும். பிறகு அங்கே சாகாரத்தில் சந்திப்பு ஏற்படும். இப்போது அவ்யக்த ரூபத்தில் சந்திக்கிறீர்கள், பிறகு சாகார ரூபத்தில் சத்தியயுகத்தில் சந்திப்பீர்கள். அந்தக் காட்சி நினைவிற்கு வருகிறதல்லவா. விளையாடுவீர்கள், பள்ளிக்கூடத்திற்கு வருவீர்கள், சந்திப்பீர்கள். கண்ணின் மணிகளாகிய நீங்கள் சத்யுகத்தின் காட்சிகளை வதனத்தில் பார்த்துக்கொண்டே இருந்தீர்கள் அல்லவா. எதை பாபா பார்த்தாரோ அதை குழந்தைகளும் பார்த்துக்கொண்டே இருந்தீர்கள் மேலும் பார்த்துக்கொண்டே இருப்பீர்கள்.

இப்போதோ ஜுவாலாரூபமாக இருக்க வேண்டும். ஜுவாலாரூப நினைவுநிலை உங்களுடையதே. தெரியுமா, ஜுவாலாதேவிகூட இருக்கிறார்கள், அது யார்? சக்திகள் நீங்கள் அனைவரும் ஜுவாலாரூப தேவிகளாக வேண்டும். அந்தமாதிரி ஜுவாலையை வெகுண்டெழச் செய்ய வேண்டும். அந்த ஜுவாலையில் இந்த கலியுக உலகம் எரிந்து சாம்பலாக வேண்டும். (02.02.69)

### காட்சிதரும் மூர்த்தி – ஆகாரி மற்றும் அலங்காரி

சக்திசாலி ஆவதற்கான முதலாவது குணம் பயமின்மை அடுத்தது விரிவை ஒரு நொடிக்குள் சுருக்கும் உத்தி இரண்டையும் இந்த குருப்பிற்கு கற்பிக்க வேண்டும். ஒற்றுமை மற்றும் ஒருநிலை. அனேக சமஸ்காரங்களை எ ப் படி ஒரு சுத்த சமஸ்காரமாக மாற்றுவது என்பதையும் இந்த பட்டியில் கற்பிக்க வேண்டும். குறைந்த நேரம், குறைந்த பேச்சு ஆனால் வெற்றி அதிகமாக இருக்க வேண்டும். இதற்கான வழிமுறைகளையும் கற்பிக்க வேண்டும். கேட்டவுடன் சொரூபமாகிவிடவேண்டும். கேட்பது அதிகமாகவும் சொரூபமாவது குறைவாகவும் இருக்கக்கூடாது. கேட்டுக்கொண்டு இருக்கும்போதே சொரூபமாகிக்கொண்டிருக்க வேண்டும். இப்போது காட்சிதரும் மூர்த்தியாகிச் செல்ல வேண்டும், பேச்சு மூர்த்தியாக அல்ல. உங்கள் அனைவரையும் யார் பார்த்தாலும் ஆகாரி மற்றும் அலங்காரியாகத் தெரியவேண்டும். அறிவு நிறைய இருக்கிறது ஆனால் இப்போது என்ன செய்ய வேண்டும்? ஞானத்தின் சாரமாக இருப்பது எதுவோ அதில் இருக்க வேண்டும். அறிவை, சாரமாக இருப்பதற்கு ஈடுபடுத்த வேண்டும். அப்போதுதான் பாப்தாதா வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தி காட்ட முடியும். சாரத்தை அறிந்திருக்கிறீர்கள்தானே. எவைகள் இந்த ஞானத்திற்கு அவசியமான விசயங்களாக இருக்கிறதோ அவைகளே சாரம். ஒருகால் அந்த அவசியமான விசயங்களை கடைப்பிடித்தீர்கள் என்றால் அனைத்து அவசியமானவைகளும் பூர்த்தியாகிவிடும். இப்போது ஏதாவது அவசியமாக இருக்கிறது. ஆனால் இந்த அவசியமானவைகள் எல்லாம் சதா காலத்திற்கு பூர்த்தியாவதற்காக இரண்டு அவசியமான விசயங்கள் இருக்கிறது. சொன்னபடி ஆகாரி மற்றும் அலங்காரி ஆகவேண்டும். ஆகாரி மற்றும் அலங்காரி ஆவதற்காக ஒரு சொல்லை மட்டும் தாரணை செய்ய வேண்டும். அந்த சொல்லில் ஆகாரி மற்றும் அலங்காரி இரண்டும் வரவேண்டும், அது என்ன சொல்? அந்த ஒரு சொல் லைட். லைட் என்பதன் ஒரு அர்த்தம் ஜோதியாகவும் மற்றொன்று லேசு என்றும் உள்ளது. எனவே லேசாகவும் இருக்க வேண்டும் பிரகாசமாகவும் இருக்க வேண்டும். அலங்காரியாகவும் அதேவேளை ஆகாரியாகவும் இருக்க வேண்டும். ஜோதி சொரூபம் என்றால் ஜுவாலா சொரூபம் பின்னர் இலேசாக இருப்பதென்றால், ஆகாரியாக இருப்பது. எனவே

ஒரே ஒரு லைட் என்ற சொல்லில் இரு விசயங்களும் வந்துவிட்டது. இதில் செயல்களும் வந்துவிட்டது. செயல் எது? லைட் ஹவுஸ் ஆக வேண்டும். லைட்டில் சொரூபமும் வருகிறது, செயலும் வருகிறது.

மனம், சொல், செயலில் சரளம் மற்றும் சகிப்பு இரண்டுமே அவசியமானது. ஒருவேளை சரளம் இருக்கிறது ஆனால் சகிப்பு இல்லை என்றாலும் சிறப்பில்லை. எனவே சரளத்தோடு சகிப்பும் கூடவே இருக்க வேண்டும். ஒருவேளை சகிப்பு இல்லாமல் சரளம் வந்ததென்றால் அதை வெகுளித்தனம் என்று சொல்லப்படும். சரளத்தோடு சகிப்பும் இருந்தால் அதை சக்தி சொரூபம் என்று சொல்லப்படும். சக்திகளில் சரளம், சகிப்பு இந்த இரண்டும் இருக்க வேண்டும். தற்போதய ரிசல்டைப் பார்த்தால் சில இடங்களில் சகிப்பு அதிகமாகவும், சில இடங்களில் சரளம் அதிகமாகவும் தெரிகிறது. இப்போது இரண்டையும் சமமாக்க வேண்டும். மதுரமும் வேண்டும். சக்தி ரூபமும் வேண்டும். நிறைய தேவிகளுடைய சித்திரங்களைப் பார்க்கிறீர்கள் அவைகளில் தெரிவது எது? எவ்வளவு ஜுவாலையோ அவ்வளவு குளிர்ச்சி. செயல் ஜுவாலையாக இருக்கிறது. முகம் குளிர்ச்சியாக இருக்கிறது. இதுவே கடைசி சொரூபம் 05.04.70

**எல்லையற்ற உயாந்த உணர்வு அல்லது வைராக்கிய உணர்வு**

என்ன தடல்புடலாக ஏற்பாடு செய்கிறீர்களா? அல்லது உலகில் உள்ளோர் சொல்வதைப்போல என்ன நடக்குமோ அப்போது பார்த்துக் கொள்ளலாம் என இருக்கிறீர்களா? ஏற்பாடுகளைச் செய்ய பொறுப்புள்ள ஆத்மாக்கள்கூட என்ன நடக்குமோ அப்போது பார்த்துக்கொள்லலாம் என யோசிப்பதில்லைதானே? இதற்குத்தான் அக்கரையின்மை என்று சொல்லப்படுகிறது. தற்போது இவ்வளவு பெரிய காரியத்தை செய்வதற்காக தீவிர ஏற்பாடு செய்ய வேண்டி இருக்கிறது, என்ன ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது தெரியுமா? சங்கரர் வந்து காரியத்தை செய்யவைக்க வேண்டுமா என்ன? சங்கரர் எப்போது அழிவைச் செய்யவைப்பார் என அவரைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லையே? வினாச ஜுவாலை எப்போது எப்படி தோன்றியது? யார் அதற்குப் பொறுப்பாக இருந்தார்கள்? சங்கர் பொறுப்பாக இருந்தாரா என்ன? அல்லது யாகத்தைப் படைக்கக்கூடிய பாபா மற்றும் பிராமணக் குழந்தைகள் பொருப்பாக இருந்தார்களா? எப்போது புதிய உலகைப் படைப்பதற்காக யாகசாலை உருவாக்கப்பட்டதோ அப்போதிருந்து ஸ்தாபனைகூடவே யாக குண்டத்திலிருந்து வினாசத்தீயும் புறப்பட ஆரம்பித்துவிட்டது. எனவே வினாசத்தை வேகப்படுத்தக்கூடியவர்களாக இருப்பவர்கள் யார்? பாபா மற்றும் நீங்கள் இருவரும் சேர்ந்துதானே? எனவே யார் புறப்படச் செய்தார்களோ அவர்களே அதை நிறைவேற்றியும் வைக்க வேண்டும், இல்லையெனில் அதைச் சங்கரர் செய்ய வேண்டுமா? சங்கரருக்குச் சமமாக ஜுவாலை ரூபமாகி வெகுண்டெழுந்திருக்கும் வினாசத் தீயை முழுமை பெறச் செய்ய வேண்டும். யாராவது சிதையை எரியவிடும்போது எரியத் தொடங்கியவுடன் இடையிடையே அந்தத் தீயை தீவிரப்படுத்துவார்கள், அப்படியிருக்க இந்த வினாசத் தீ என்பது எவ்வளவு பெரிய நெருப்பு. இதையும் முழுமை பெறச் செய்ய,பொறுப்பேற்றுள்ள ஆத்மாக்கள் நீங்கள் வேகப்படுத்துவதற்காக நன்கு கிளரிவிடவேண்டும்—எப்படி கிளறுவீர்கள். கையாலா அல்லது குச்சியாலா? எண்ணத்தின் மூலமாக இந்த வினாசத் தீயை தீவிரப்படுத்த வேண்டும், என்ன அப்படிப்பட்ட ஜுவாலை ரூபமாகி, வினாசத் தீயை தீவிரப்படுத்தும் எண்ணம் தோன்றுகிறதா அல்லது இது என்னுடைய வேலை இல்லை என நினைக்கிறீர்களா?

நாடகப்படி நிச்சயம் நடக்க இருக்கிறபோதும் பொறுப்பேற்றிருக்கும் ஆத்மாக்கள் முயற்சி செய்து தான் ஆகவேண்டும். அதேபோல இப்போது இந்த முக்தி மற்றும் ஜீவன்முக்தியின் கதவுகளைத் திறப்பதற்கான பொறுப்பு, பாபாவோடுகூட உங்கள் எல்லோருக்கும் இருக்கிறது. இந்த அழிவு அனைத்து ஆத்மாக்களின் அனைத்து ஆசைகளையும் பூர்த்தி செய்வதற்குரிய சாதனமாக இருக்கிறது. இந்த சாதனம் உங்களது ஆன்மீக சாதனைகளால் நிறைவேறும். இப்போது எல்லா ஆத்மாக்களுக்கும் நன்மை ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தாக வேண்டும். துடித்துக்கொண்டிருக்கும், துக்கம் மற்றும் அமைதியற்ற ஆத்மாக்கள் எல்லோரும் வரமளிக்கும் வள்ளலாகிய பாபா மற்றும் அவரது குழந்தைகள் மூலமாக வரதானங்களைப் பெற்று நிரந்தரமான அமைதி மற்றும் சுகமுடையவர்கள் ஆவதோடு இப்போது வீடு திரும்பவும் வேண்டும். இந்த

நினைவு, நேரம் நெருங்கி வருவதற்குத் தக்கபடி தீவிரமடைய வேண்டும். ஏனெனில் இந்த எண்ணங்களின் மூலமாகவும் இந்த உணர்வுகள் மூலமாகவும் வினாச நெருப்பு வேகமாகப் பரவும், அப்போது அனைவருக்கும் நன்மை உண்டாகும்.

இப்போது எந்த அளவு, எல்லையற்ற பரந்த விரிந்த சேவையை தீவிரரூபத்தில் செய்து வருகிறீர்களோ, அதே அளவு எல்லையற்ற விலகிய உணர்வு தீவிரமாக இருக்க வேண்டும். உங்களது எல்லையற்ற விலகிய உணர்வு அல்லது வைராக்கிய உணர்வு, உலக ஆத்மாக்களிடம் அற்ப கால வைராக்கியத்தை ஏற்படுத்தும். அப்போது தமது சுகத்தின்மீது வைராக்கியம் வரும். அந்த வைராக்கியத்திற்குப் பிறகு முடிவு ஏற்படும். என்ன எனக்குள் எல்லையற்ற வைராக்கிய உணர்வு வந்திருக்கிறதா என தன்னைத்தானே கேளுங்கள்? செய்தும் செய்யாதவராக இருப்பவர், உற்றார் உறவினரோடு இருந்தபோதும் பந்தபாசங்களைக் கடந்து இருப்பவர் என்று பாடப்பட்டு ள்ளது, என்ன அப்படிப்பட்ட நிலை இருக்கிறதா? எந்தவித ஈர்ப்பும் இருக்கவே கூடாது மேலும் சேவைகூட ஆசையோடு செய்யக்கூடாது ஆனால் பொறுப்புணர்வோடு செய்ய வேண்டும், அதன்மூலமாகவே கர்மாதீத் ஆவீர்கள். தற்போது தமது காரியத்தை முடிக்கத் துவங்குங்கள். எப்போது இப்போதிருந்தே முடிக்கத் தொடங்குகிறீர்களோ அப்போதுதான் சீக்கிரமாக முடிக்க முடியும். முடிக்கவும் நேரம் பிடிக்கிறது. எப்போது ஏதாவது காரியம் அல்லது கடை ஆகியவற்றை காலிசெய்ய வேண்டும் என்றால் என்ன செய்கிறார்கள்? தள்ளுபடி செய்கிறார்கள். எப்போது தள்ளுபடி என எழுதிவிடுகிறார்களோ அப்போது சாமான் வெகுசீக்கிரம் தீர்ந்துபோய்விடுகிறது. எனவே இந்த கண்காட்சிகூட என்ன? இதுகூட தள்ளுபடி விற்பனைதானே, அதாவது வெகுவிரைவில் அனைவருக்கும் செய்தி கிடைக்க வேண்டும். யாருக்கு வாங்க வேண்டுமோ, வாங்கிக்கொள்ளட்டும், இல்லை என்றாலும் புகார் இல்லாமல் போய்விடும். இப்போது என்ன செய்ய வேண்டும்? காரியத்தை முடிக்க வேண்டும் அதாவது தன்னை ஆசையிலிருந்து உள்ளிழுத்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை தன்னை எல்லாப் பக்கங்களில் இருந்தும் உள்ளிழுத்து எவரெடி ஆக்கிவிட்டீர்கள் என்றால், நீங்கள் எவரெடி ஆவதன்மூலம் வினாசமும் ரெடியாகிவிடும். எப்போது தீயை எரியவைப்பவர்கள் எதுவும் செய்யாமல் இருக்கிறார்களோ அப்போது தீ என்னவாகும்? தீ மந்தமாகும் அல்லவா? எனவே இப்போது ஜுவாலா ரூபம் கொண்டு தான் எவரெடி ஆகவேண்டும் என்ற சக்திமிக்க எண்ணத்தின் மூலம் வினாசத் தீயை தீவிரமாக்குங்கள். எப்படி இப்போது அழிவுவர வேண்டும் என துக்கமுடைய ஆத்மாக்களின் மனதில் சப்தம் எழ ஆரம்பித்து விட்டதோ, அதேபோல உலகநன்மை செய்யும் ஆத்மாக்கள் உங்கள் மனதில் இருந்து இப்போது சீக்கிரமாக எல்லோருக்கும் நன்மை உண்டாகவேண்டும் என்ற எண்ணம் உற்பத்தி ஆகவேண்டும் அப்போதே முடிவு வரும், புரிந்ததா?

பராமரித்திருக்கிறீர்கள், இப்போது நன்மைசெய்பவராகுங்கள் மேலும் எல்லோருக்கும் விடுதலை தாருங்கள். வினாசம் செய்பவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஆத்மாக்களின் உதவி தேவைப்படுகிறது. அவர்களுக்கு எண்ணத்தின் சமிஞ்கை தேவைப்படுகிறது. எதுவரை நீங்கள் ஜுவாலா ரூபமாகவில்லையோ, அதுவரை சமிஞ்கை கொடுக்க முடியாது. எனவே இப்போது தன்னை தயார் படுத்துவதோடுகூடவே உலக மாற்றத்தையும் தயார் செய்யுங்கள். இதுதான் உங்கள் கடைசி வேலை, ஏனெனில் இது சக்தி சொரூபத்தின் செயல். நீங்கள் தாமே பயப்படுவதில்லைதானே? வினாசம் ஆகுமா ஆகாதா, என்னவாகும், எப்படியாகும்? இவற்றையெல்லாம் புரிந்து கொள்ள முயற்சிப்பதற்குப் பதிலாக, இவைகள் எல்லாம் இப்போது நம் மூலமாக நடக்க வேண்டியவைகள் என புரிந்துகொள்ளுங்கள். இதையறிந்து இப்போது தன்னை சக்தி சொரூபமாக்குங்கள், தன்னை லைட் ஹவுஸ் மற்றும் பவர் ஹவுஸாக ஆக்குங்கள். நல்லது, என்ன ஒவ்வொரு விசயத்திலும் நீங்கள் நிச்சய புத்தி உடையவரா? 03.02.74

**ஜுவாலா தேவியின் பார்ட்**

உங்களிடத்தில் இப்போது இந்த புதுமை தெரிய வேண்டும். பார்ப்பதற்கு சாதாரண பேச்சாகத் தெரியக்கூடாது, மேலிருந்து ஆகாஷவாணி வந்துகொண்டிருக்கிறது என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். இது எரிமலை ஆவதற்கான நேரம் என்று சொல்லப்படுகிறது. இப்போது உங்களுடைய விளையாட்டுப் பருவம் முடிந்துவிட்டது. மகாரதி யாரெல்லாம் முன்னேறிச் சென்று

கொண்டிருக்கிறீர்களோ அவர்களுக்கு, இப்படி சேவை செய்யும் பாகமும் தானாகவே மாறிக்கொண்டு இருக்கும். முதலில் நீங்கள் சொற்பொழிவெல்லாம் செய்துகொண்டிருந்தீர்கள், கோர்ஸ் கொடுத்துக்கொண்டிருந்தீர்கள். இப்போது சேர்மேன் ரூபத்தில் கொஞ்சம் பேசுகிறீர்கள், கோர்ஸ் எல்லாம் உங்கள் உடன் இருப்பவர்கள் கொடுக்கிறார்கள். தற்போது இந்த நேரத்தில், யாரையும் கவர்ந்து இழுப்பது, ஊக்க உற்சாகமடையச் செய்வது, இந்த சேவை மிச்சமிருக்கிறது, எனவே வித்தியாசம் வருகிறதல்லவா? இதையும் கடந்து முன்னேறி ஆகாசவாணி நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லும்படியான அனுபவம் ஏற்படும். இவர் ஏதோ அவதார புருஷர் மேலும் இவர் ஒன்றும் சாதாரண சரீரதாரி அல்ல எனச் சொல்வார்கள். அவதார புருஷர் தோன்றி இருக்கிறார். எப்படி தெய்வீக காட்சியில் அனுபவம் செய்து செய்து கடைசியில் தேவி தோன்றி விடுகிறார். மகாவாக்கியம் சொன்ன பிறகு தோற்றம் மறைந்து விடுகிறது. தற்போதய நிலை அல்லது முயற்சியின் இலட்சியம் இப்படி இருக்க வேண்டும். ஆரம்பத்தில் சீதளா தேவியின் பாகம் உங்களுடையதாக இருந்தது. இப்போது இருப்பது ஜுவாலா தேவியின் பாகம். முதலில் சினேகத்தால் சமீப சம்பந்தத்திற்கு வந்தீர்கள் பிறகு இப்போது சக்தி சொரூபம் ஆகவேண்டும். இப்போது குணம் மற்றும் சினேகத்தின் பிரபாவம் அல்லது ஞானத்தின் பிரபாவம் மட்டும் இருக்கிறது, ஆனால் இவர் ஒன்றும் சாதாரண சக்தி அல்ல காட்சி தரும் மூர்த்தி என மற்றவர் அனுபவம் செய்ய வேண்டும். எப்படி சூரியனின் கிரணங்கள் பரவுகிறதோ, அதுபோல மாஸ்டர் சர்வசக்திவான் நிலையில் இருந்து சக்திகள் மற்றும் விசேசங்களுடைய கிரணங்கள் நாலாபுறமும் பரவுவதை பிறர் அனுபவம் செய்ய வேண்டும். 'நான் விக்ன–வினாசகர்' என்ற நினைவின் இருக்கையில் நிலைத்திருந்து காரியங்களை செய்துவந்தால் விக்னங்கள் முன்னால்வரைகூட வராது. நல்லது. 15.09.74

### வீடுதிரும்புவதென்றால் மேல்நிலை அதாவது சாட்சி

உலகை மாற்றும் ஆதாரமூர்த்திகளான நீங்கள், தமக்குள் மாற்றத்தைக் கொண்டுவந்து விட்டதை அனுபவம் செய்கிறீர்களா? ஒருவேளை ஆதார மூர்த்திகள் முழுமையாக மாறுவதில் தம்மிடம் இப்போது குறைவிருப்பதாக உணரும் பட்சத்தில் உலக மாற்றம் என்பது எப்படி ஏற்படும்? ஆதார மூர்த்திகள் தாமே தமக்காக கொஞ்சம் நேரம் தேவைப்படுவதாக உணர்கிறீர்களா அல்லது உலக மாற்றத்திற்காகவே இப்போது நேரம் தேவைப்படுகிறது என்ற எண்ணம் தோன்றுகிறதா? ஆதார மூர்த்திகளின் எண்ண உறுதியில் எப்போதாவது தடுமாற்றம் ஏற்படுமாயின் அது வினாசத்திற்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய ஆத்மாக்களிடத்தில் சிலநேரம் வேகத்தையும் சிலநேரம் மறதியையும் கொண்டுவருகிறது. **ஆதாரமூர்த்தி ஆத்மாக்களின் எண்ணங்களே வினாசத்திற்குப் பொறுப்புள்ள ஆத்மாக்களிடம் பிரேரணை தர ஆதாரமாக இருக்கிறது.** எனவே பிரேரணை தரும் சக்தி சேனையின் எண்ணங்கள் திடமான நிச்சய புத்தியோடு இருக்கிறதா? அதோடு சுயம் எவரெடியாக இருக்கிறீர்களா? எப்படி யாகத்தை உருவாக்குவதில் பிரம்மா பாபாவோடு பிராமணர்களும் பொறுப்பேற்றீர்களோ, அதுபோல யாகத்திலிருந்து இந்த வினாச ஜுவாலை புறப்பட்டிருக்கிறது, இதற்காகவும் எதுவரை நீங்கள் ஜுவாலை ரூபமாகவில்லையோ, அதுவரை இந்த வினாசத்தின் தீயும் முழுமையான பெருந்தீயாக வடிவெடுக்காது. இது பரவுகிறது பின்னர் அணைந்துவிடுகிறது. காரணம்? ஜுவாலா மூர்த்தி மற்றம் பிரேரணை தரும் ஆதாரமூர்த்தி ஆத்மாக்கள் தற்போது தாமே நிரந்தர ஜுவாலா ரூபமாகவில்லை. ஜுவாலா ரூபமாவதற்கான திடமான எண்ணம் நினைவில் இருப்பதில்லை.

ஜுவாலா ரூபமாவதற்கு முக்கியமான மற்றும் எளிய முயற்சி எது? (எனக்கு ஒரேயொரு சிவபாபா). இந்த நினைவு எப்போதும் இருக்க வேண்டும், இதற்காகவும் செய்ய வேண்டிய முயற்சி எது? இப்போது எந்த கடைசி விசேச முயற்சி பாக்கி இருக்கிறது? (மேல்நிலை (உபராம் அவஸ்தா)). இதுவோ ரிசல்ட். ஆனால் அதற்காகவும் செய்ய வேண்டிய முயற்சி எது? (விலகியிருத்தல்) விலகியிருப்பதுகூட எதனால் வரும்–எதில் மூழ்கி இருப்பதன்மூலம் வரும். இப்போது வீட்டிற்குப் போகவேண்டும் என்ற உணர்வில் மூழ்கி இருக்க வேண்டும். போகவேண்டும் என்றால் மேல்நிலை. போக வேண்டும் – எங்கு போக வேண்டுமோ அதற்குரிய முயற்சி தானாகவே இருக்கும். தமது நிராகாரி வீட்டிற்குப் போகவேண்டுமென்றால் அதற்குத் தக்கபடி தனது வேகத்தை உருவாக்க வேண்டியிருக்கிறது. அப்படியென்றால் திரும்பப் போக வேண்டும்,

அனைவரையும் அழைத்துச் செல்லவும் வேண்டும் என்பதே இந்த புது வருடத்திற்கான விசேச முயற்சியாக இருக்க வேண்டும். இந்த நினைவின் மூலமாக தாமாகவே அனைத்து சம்மந்தங்கள், அனைத்து இயற்கையின் கவர்ச்சிகளில் இருந்து மேல்நிலை, அதாவது சாட்சியாகி விடுவீர்கள். சாட்சியாவதன் மூலமாக சகஜமாகவே பாபாவிற்குத் துணையாகி விடுவீர்கள் அல்லது பாபாவிற்குச் சமமாகிவிடுவீர்கள். அப்போது எல்லோருக்கும் எப்போதும் ஜுவாலா ரூபம் பார்ப்பதற்குத் தெரிய வரும், அப்போது இந்த வினாச ஜுவாலை, உங்களுடைய ஜுவாலா ரூபத்தோடு கூடவே தெளிவாகத் தெரியவரும். எந்த அளவு ஸ்தாபனைக்கு பொறுப்பேற்று ஜுவாலா ரூபமாகிறீர்களோ அந்த அளவு வினாச ஜுவாலையும் ரூபத்தில் வெளிப்படும். இந்த உறுதியான எண்ணத்தைப் பற்ற வையுங்கள் அப்போது வினாச நெருப்பு விரிந்து பரவும். இப்போது அணைந்திருக்கிறது, ஏனெனில் ஆதரமூர்த்திகளும் தங்கள் முயற்சியில் அணைந்திருக்கிறார்கள். குழு வடிவிலான ஜுவாலா ரூபம் உலகை அழிக்கும் காரியத்தை நிறைவு செய்யும்.

அற்ப ஆத்மாக்களின் உறுதியான எண்ணங்கள் அற்ப காலத்திற்கு ஆங்காங்கே வினாசத் தீயை பரப்புவதற்கு பொறுப்பாக இருக்கிறது. ஆனால் மகாவினாசமும் உலகமாற்றமும் குழுவின் உயர்ந்த ஒருமித்த எண்ணமில்லாமல் நிறைவேற முடியாது. எனவே இந்த வருடத்தில் தமது கடைசி நிலையான எல்லா கர்மபந்தனங்களில் இருந்தும் விடுபட்ட, கர்மாதீத் நிலை, அன்பு மற்றும் பற்றற்ற நிலையின் சமநிலை எல்லாம் எப்போதும் சரியாக இருக்க வேண்டும். அந்தமாதிரி நிராகாரி நிலையை குழு வடிவில் உருவாக்குங்கள். அப்போது வினாசத்தின் காட்சிகளோடு புதுஉலகின் காட்சிகளும் தெளிவாகத் தென்படும். எல்லோரும் இந்த வருடம் இந்த முயற்சி செய்ய வேண்டும். இந்த கடைசி முயற்சியின் மூலமாகத்தான் சுயத்தினுடைய மற்றும் வினாசத்தினுடைய வேகம் அதிகமாகும். 16.01.75

**ஜுவாலையால் ஜுவாலை ஏற்றப்படும்.**

குழு வடிவில், அந்தமாதிரி முயற்சிக்கான கொடுக்கல்–வாங்கல் மற்றும் நினைவு யாத்திரைக்கான புரோகிராம் இருக்க வேண்டும். விசேச முயற்சி அல்லது விசேச அனுபவங்களை உங்களுக்குள் பரிமாறிக்கொள்ளுங்கள். அந்தமாதிரி குழு பாண்டவர்களிடையே இருக்க வேண்டும். அப்படி விசேசமான யோகத்தின் நிகழ்ச்சிகள் நடந்துகொண்டே இருக்கட்டும் பின்னர் அது வினாசத்தீயை எப்படி விசிறிவிடுகிறது என்பதைப் பார்ப்பீர்கள். யோக நெருப்பால் அழிவு நெருப்பு எரியும். அது வினாச ஜுவாலை இது யோக ஜுவாலை. எனவே ஜுவாலையால் ஜுவாலை எரியவைக்கப்படும். உங்கள் யோகம் சாதாரண ரூபத்தில் இருந்தால் வினாச ஜுவாலையும் சாதாரணமாகவே இருக்கும். குரூப் சக்திமிக்கதாக இருக்க வேண்டும். எப்படி ஒரு பொருளை தயாரிக்க வேண்டும் என்றால் அதற்கு தண்ணீர் தேவை, எண்ணெய் தேவை, உப்பு தேவை, இல்லையென்றால் அந்தப்பொருளை செய்யமுடியாது. அதேபோல ஒவ்வொருவரிடமும் அவரவருக்குரிய விசேசம் இருக்கிறது ஆனால் இங்கே அனைவருடைய விசேசங்களின் இணைவு வேண்டும். ஏனெனில் நேரமும் இப்போது சவால் விடுகிறது அல்லவா. நல்லது. 09.12.75

**கொடுப்பவர் கொடுத்துக்கொண்டிருக்க, பெறுபவர் களைத்து விட்டார்.**

பிரேரணை பெறக்கூடியவர்கள் தயாராக இருக்கிறார்கள் ஆனால் பிரேரணை தரக்கூடியவர்கள் எப்படி இருக்கிறார்கள்? 'கொடுப்பவர் கொடுத்துக்கொண்டிருக்க, பெறுபவர் களைத்துவிட்டார்' என பழமொழி சொல்கிறது. ஆனால் இந்த விசயத்தில் பெறக்கூடியவர்கள் கிடைக்காத காரணத்தால் களைத்து விடுகிறீர்கள். பெறுபவர் பெறத்தயாராக இருக்கிறார்கள் ஆனால் தரக்கூடியவர் சுயத்தின்மீதே இதுவரை ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள். எனவே பிரம்மா முக வம்சாவளி பிராமணர்களுடைய கணக்கு எப்படி இருக்கிறது? அது தெரியுமா அல்லது சொல்லவா? பிராமணர்களுடைய ரிஜிஸ்டரில் என்ன விசேசம் காணப்படுகிறது? உலக மாற்றம் அல்லது உலக நன்மைக்கான சுபபாவனை பெரும்பாலோரிடம் வெளிப்படையாக உள்ளது, ஆனால் போகப்போக எப்படி யாதவர்களின் வேகத்தில் கேள்விக்குறியின் காரணத்தால் தீவிரமிருப்பதில்லையோ, அதேபோல பிராமணர்களுடைய சிறந்த பாவனைக்கு வெளிப்படையான பலன் கிடைத்தே தீரும் எனினும் இடையே ஏதாவது ராயல் வடிவ ஆசைகள் சுப ஆசைகளை

அடக்கி வைத்துவிடுகிறது. எனவே பிராமணர்களின் நடவடிக்கைகளில் சுபபாவனை மற்றும் ராயல் வடிவ ஆசைகள் இந்த இரண்டின் வித்தை நடக்கிறது. எப்படி பழுத்த பழங்களை பறவைகள் அழித்து விடுகிறதோ அப்படி பாவனையால் கிடைத்த பழங்களை ஆசைகள் வடிவ பறவைகள் அழித்து விடுகிறது. எனவே பிராமணர்களுடைய மாற்றத்தை கொண்டுவரும் விதி, வெற்றி சொரூபம் ஆகாத காரணத்தால் பாவனை மாறி 'ஆசை' ஆகிவிடுகிறது. அதனால் முயற்சி ஜுவாலை ரூபம் ஆவதில்லை. பிராமணர்களுடைய ஜுவாலை ரூபம் வினாச – ஜுவாலையை மூட்டிவிடும். எனவே பிராமணர்களுடைய கணக்கில் இப்போது லாஸ்ட் சோ பாஸ்ட் முயற்சியான ஜுவாலா ரூபம் மட்டுமே பாக்கி இருக்கிறது. யாதவர்களுடைய காரியம் முடிந்துவிட்டதைப்போல இருக்கிறது, பாண்டவர்களுடைய காரியம் நிறைவேறப் போகிறது. பாண்டவர்களின் காரணத்தால் யாதவர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். பாண்டவர்களுடைய சிறந்த பெருமை, ஆன்மீகப் பெருமையான நிலை யாதவர்களுடைய சிக்கலான பிரச்சினைகளை முடித்து வைத்துவிடும். எனவே தனது பெருமையின் மூலமாக சிக்கலில் இருக்கும் ஆத்மாக்களுக்கு அமைதியையும் நிம்மதியையும் வரமாகக் கொடுங்கள். 02.02.76

### ஜுவாலா ரூபம் என்றால் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் நிலை

வெளிப்படுத்தும் வருடத்தை கொண்டாடுகிறீர்கள் அல்லவா. பாபாவை வெளிப்படுத்துவதற்கு முன்பாக தனக்குள் (தனது புகழாக எதையெல்லாம் கேட்டிருக்கிறீர்களோ) இந்த எல்லா விசயங்களையும் வெளிப்படுத்துங்கள், அப்போது பாபாவை வெளிப்படுத்த முடியும். இந்த வருடம் விசேசமாக ஜுவாலா ரூபம் அதாவது லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் நிலையை புரிந்து கொண்டு அதே முயற்சியில் இருங்கள். விசேசமாக நினைவு யாத்திரையை பவர்புல் ஆக்குங்கள், ஞான சொரூபத்தின் அனுபவி ஆகுங்கள். இப்படி தனது முன்னேற்றத்திற்காக விசேச திட்டமிடுங்கள். அதன்மூலமாக சிறந்த ஆத்மாக்களாகிய உங்களது சுப உணர்வுகள் அல்லது நன்மைசெய்யும் உணர்வுகள் மேலும் சக்திசாலி சூழ்நிலைகளின் மூலமாக துடித்துக் கொண்டிருக்கும், அலைந்து கொண்டிருக்கும், புகார் காண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஆனந்தம், அமைதி மற்றும் சக்தியின் அனுபவம் உண்டாகும். புரிந்ததா? இப்போது என்ன செய்ய வேண்டும்? சொல்ல மட்டும் கூடாது, அனுபவம் செய்ய வேண்டும். அனுபவம் செய்ய வைப்பதற்காக முதலில் தான் அனுபவ மூர்த்தி ஆகவேண்டும். இந்த வருடத்திற்காக விசேச எண்ணங்களை தேர்ந்தெடுங்கள். தனக்குள் மாற்றம் கொண்டுவந்து உலகை மாற்றம் செய்தே ஆகவேண்டும். புரிந்ததா? உறுதியான எண்ணத்தின் முடிவு எப்போதும் வெற்றியாகவே இருக்கும். நல்லது. 07.0276

### இயல்பான நிலையில் எப்போதும் சுதந்திரமாக இருப்பீர்கள்.

உலகத்தின் பெரும்பாலான ஆத்மாக்கள் பாபா மற்றும் இஷ்ட தெய்வங்களான உங்களுடைய வெளிப்பாட்டை அதிகம் நினைவு செய்கிறார்கள் ஆனால் இஷ்ட தெய்வங்கள் அவர்களை குறைவாக நினைவு செய்கிறார்கள். இதற்கான காரணம் என்ன? தனது சாதாரண சுபாவ, சமஸ்காரங்களின் செயல்பாடுகளுக்கு அதிக நேரத்தை செலவிடுகிறீர்கள். எப்படி அஞ்ஞானி ஆத்மாக்களுக்கு ஞானம் கேட்க நேரம் இருப்பதில்லையோ அதேபோல அதிகமான பிராமணர்களுக்கும் இந்த பவர்புல் நிலையில் நிலையாக இருப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. எனவே ஜுவாலை ரூபமாவது அவசியமாகும்.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையுடைய செயல்பாடுகளையும் பார்த்து எப்படி இந்த அளவு (டூ மச்) பிஸியாக இருக்கிறார்களே என சிரித்துக்கொண்டிருக்கிறார். மிகவும் பிஸியாக இருக்கிறீர்கள் அல்லவா? இயல்பான நிலையில் எப்போதும் சுதந்திரமாக (free) இருப்பீர்கள். வெற்றியும் கிடைக்கும் சுதந்திரமாகவும் இருப்பீர்கள்.

அறிவியல் சாதனத்தின் மூலம் பூமியில் அமர்ந்துகொண்டே ஆகாயத்திற்குச் சென்றுவிட்ட இயந்திரத்தை கட்டுப்படுத்த முடிகிறது, எங்கு வேண்டுமோ எப்படி வேண்டுமோ அப்படி திருப்ப முடிகிறது, அப்படி இருக்க அமைதி சக்தி சொரூபமாகிய நீங்கள், இந்த மனித உலகில், சிறந்த எண்ணங்களின் ஆதாரத்தில் எந்த சேவை செய்ய விரும்புகிறீர்களோ, எந்த ஆத்மாவிற்கு

சேவை செய்ய விரும்புகிறீர்களோ அதை செய்ய முடியாதா? அதற்கு தத்தமது செயல்பாடுகளை கடந்து அதாவது மேல்நிலையில் இருங்கள்.

கேட்டு வைத்திருக்கும் எல்லா பொக்கிஷங்களையும் தனக்காக மட்டும் அல்லாமல், உலக நன்மைக்காக பயன் படுத்துங்கள். இப்போது என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா? சப்தத்தின் மூலமான சேவை, ஸ்தூல சாதனங்கள் மூலமான சேவை மற்றும் சப்தம் கடந்த எண்ணம் என்ற சிறந்த சூட்சும சக்தி மூலமான சேவை இவைகளின் சமநிலையை பிரத்தியட்ச ரூபத்தில் காட்டுங்கள் அப்போது வினாசத்தின் முரசு ஒலிக்கும். புரிந்ததா? 07.01.77

குமார் ஜ்வாலா ரூபம் கொண்டு ஜ்வாலையை மூட்டினால் விரைவில் வினாசம் வந்துவிடும். அந்தமாதிரி யோக நெருப்பை தீவிரப்படுத்துங்கள் அப்போது வினாச ஜ்வாலை தீவிரமாகிவிடும். 30.11.79

**கேள்வி—பாபாவை அன்போடு நினைப்பது தீயின் வேலையைச் செய்கிறது, எப்படி?**

பதில்—எப்படி தீயில் எந்தப் பொருளைப் போட்டாலும் பெயர், உருவம், குணம் முதலிய எல்லாம் மாறிவிடுகிறது, அதேபோல எப்போது பாபா நினைவு தீயாகிறதோ அப்போது மாற்றம் வந்துவிடுகிறது. மனிதனில் இருந்து பிராமணன் ஆகிவிடுகிறீர்கள், பின்னர் பிராமணனில் இருந்து பரிஸ்தாவாக பின்னர் தேவதையாக ஆகிவிடுகிறீர்கள். எனவே எப்படி மாற்றம் வந்தது? கடுந்தவம் என்ற நெருப்பு மூலம். தனதென்று எதுவும் இல்லை. மனிதன், மனிதனாக இருக்கவில்லை பரிஸ்தாவாக மாறிவிட்டார். எப்படி களிமண்ணை அச்சில் வார்த்து அதனை நெருப்பில் போட்டால் அது செங்கல் ஆகிவிடுகிறது, அதுபோல இதுவும் மாறிவிடுகிறது. எனவே இந்த நினைவிற்குத்தான் ஜ்வாலா ரூபம் என்று சொல்லப்படுகிறது. எரிமலைகூட எல்லோருக்கும் தெரியும், அதேபோல ஜ்வாலாதேவி அல்லது தேவர்களும்கூட எல்லோரும் அறிந்தவர்களே. 12.10.81

**சைதன்ய லைட் ஹவுஸ் ஆகுங்கள்**

தற்போது ஒவ்வொரு ஆத்மாவும் சக்தி சொரூபம் ஆகிவிட வேண்டும். யாருடைய அருகில் வந்தாலும் அவர்கள் அலௌகீகத்தை அனுபவம் செய்ய வேண்டும். இப்போது அந்த பார்ட் நடக்க வேண்டும். இப்போது நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது எனச் சொல்வதை கேட்கிறீர்கள், ஆனால் நல்லவராக ஆகவேண்டும் என்ற பிரேரணை கிடைப்பதில்லை. அதை செய்ய வைப்பதற்கான ஒரே சாதனம் – குழு வடிவில் ஜ்வாலா சொரூபமாவது. ஒவ்வொருவரும் சைத்தன்ய லைட் ஹவுஸ் ஆகுங்கள். சேவாதாரியாக இருந்தாலும், சிநேகியாக இருந்தாலும், ஒரே நம்பிக்கை ஒரே பலமுடையவராக இருந்தாலும், இது எல்லாம் சரிதான், ஆனால் மாஸ்டர் சர்வ சக்திவான் நிலை, மேடையில் வந்துவிட்டதென்றால் அப்போது உங்கள் முன்பாக விட்டில் பூச்சிகளைப்போல சுற்றிவர ஆரம்பித்துவிடுவார்கள். இப்போது பாபா விளக்கின் கவர்ச்சி மட்டும் இருக்கிறது, அனைத்து விளக்குகளின் கவர்ச்சி ஏற்படுமாயின் என்னவாகும்? விளக்காகவே இருக்கிறீர்கள் ஆனால் மேடைக்கு இன்னும் வரவில்லை. மேடைக்கு வந்துவிட்டீர்கள் என்றால் அபுவைச் சேர்ந்தவர்கள் எப்படி உங்கள் பின்னால் ஓடிவருகிறார்கள் என்பதைக் காண்பீர்கள். உங்களுக்குப் போகவேண்டிய அவசியம் இருக்காது, அவர்கள் தாமே வந்து ஐயா வந்திருக்கிறேன், ஏதேனும் சேவை கொடுங்கள் என்பார்கள்.

**ஜ்வாலையின் கோட்டை கட்டுங்கள்**

மாயா வரட்டும் ஆனால் நீங்கள் மாயாவிற்கு வசமாகக்கூடாது. மாயாவுடைய வேலை வருவது உங்களுடைய வேலை அதை ஜெயிப்பது. அதன் பிரபாவத்திற்கு ஆளாகக்கூடாது. தனது பிரபாவத்தின் மூலமாக மாயாவை துரத்த வேண்டும், மாயாவுடைய பிரபாவதிற்குள் வரக்கூடாது. அதனால் என்ன பரிசு வாங்க வேண்டும் என்பது புரிந்ததா. ஒருவருக்கு தடை வந்தாலும் பரிசு கிடைக்காது ஏனெனில் அவர் கூட்டாளி அல்லவா. எல்லோரும் ஒருவர் பிறருக்கு உதவி செய்து தமது வீட்டிற்குச் செல்ல வேண்டும். அதற்காக சேவாகேந்திரத்தின் சூழ்நிலை அப்படி சக்திசாலியாக இருக்க வேண்டும், அதனால் அந்த சூழ்நிலையே எல்லா ஆத்மாக்களுக்கும்

சதா உதவிசெய்வதாக இருக்க வேண்டும். சக்திமிக்க சூழ்நிலை பலவீனமானவர்களையும் சக்திசாலிகளாக்க உதவி செய்கிறது. எப்படி கோட்டை கட்டினார்கள் அல்லவா. எதற்காக கோட்டை கட்டினார்கள், பிரஜைகளும் கோட்டைக்குள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஒரு ராஜாவிற்காக மட்டும் பாதாள அறை கடடப்படுவதில்லை, கோட்டை கட்டினார்கள். நீங்கள் எல்லோரும்கூட தனக்காகவும், உடன் இருப்பவர்களுக்காகவும், மற்ற ஆத்மாக்களுக்காகவும் ஜுவாலையின் கோட்டை கட்டுங்கள். நினைவின் சக்திதான் ஜுவாலையாகும். 14.01.84

**பாப்சமான் பாவத்தை அழிக்கும் சொரூபம்**

அனேக பக்தர்கள் தரிசனம் பெற விருப்பமுடயவராக இருக்கிறார்கள், அப்படி தரிசனம் பெற விருப்பமுடைய ஆத்மாக்களின் முன்பாக நீங்கள் தெய்வீக தரிசனம் தரும் மூர்த்திகளாக தாமே தோன்றுவீர்கள், அப்போது எல்லா ஆத்மாக்களும் தரிசனம் செய்து மகிழ்ச்சி அடைவார்கள். அப்படி மகிழ்ச்சி அடைகிற காரணத்தால் தெய்வீக தரிசனம் தரும் ஆத்மாக்கள் உங்கள்மீது மகிழ்ச்சியின் மலர்களை மழைபோல் பொழிவார்கள். ஒவ்வொரு ஆத்மா மூலமாகவும் இந்த மகிழ்ச்சியின் வார்த்தை வெளிப்படும், முக்திபெற வேண்டும் அல்லது கண நேரமாவது காட்சி காண வேண்டும் என்ற ஜென்ம ஜென்ம தாகம் அல்லது ஆசை இருந்து வந்தது, இன்று முக்தி அல்லது மோட்சத்தின் அனேக ஜென்ம ஆசை நிறைவேறிவிட்டது. அல்லது தரிசனத்திற்குப் பதிலாக தரிசனம்தரும் மூர்த்தியே கிடைத்துவிட்டார். எமது இஷ்ட தேவி/தேவன் எமக்குக் கிடைத்து விட்டார். இந்த கொஞ்ச நேர பிராப்தியின் போதை மற்றும் குஷியில் ஜன்ம ஜன்மத்தின் துக்க வலிகளை மறந்துவிடுவார்கள். கொஞ்ச நேர இந்த சக்திசாலி நிலை ஆத்மாக்களுக்கு அவர்களின் சக்திக்கேற்ற பாவனையின் பலன்சொரூபமாக சில பாவங்களில் இருந்தும் விடுபட வைத்துவிடும். எனவே ஆத்மாக்கள் தம்மை அவரவர் சக்திக்குத் தக்கபடி இலேசாக அனுபவம் செய்வார்கள். அதனால்தான் பாவத்தை போக்கும் தேவா அல்லது பாவத்தை அழிக்கக்கூடிய தேவி, சக்தி, ஜகத் மா என்ற சொற்களை கட்டாயம் சொல்வார்கள். எந்தவொரு தேவி அல்லது தேவரிடம் சென்றவுடனேயே இவர் எனது பாவத்தை அழித்தே தீருவார் என்ற பாவனை அல்லது நம்பிக்கை வைக்கிறார்கள். மேலும் கடைசியில் தேவதைகளோடு கூட குருமார்களும் நான் உங்கள் பாவத்தை அழித்துவிடுவேன் என்ற இந்த உணர்வைத் தோற்றுவிக்கிறார்கள். பக்தர்களும் இந்த நம்பிக்கையில்தான் குருவிடம் செல்கிறார்கள். ஆனால் இந்தப் பழக்கம் தெய்வீக தரிசனம் தரும் ஆத்மாக்கள் உங்கள் மூலமாக வெளிப்படையான ரூபத்தில் நடக்கவிருப்பதன் நினைவாக நடந்து வருகிறது. அப்படி சீக்கிரமாக இந்த தெய்வீக காட்சிகள் உலகின் முன்பாக வந்தே வந்துவிட்டது. தெய்வீக தரிசனம் தரும் ஆத்மாக்களாகிய நாம் தரிசனம் தரத் தகுதியுடையவராக, எல்லா அலங்காரங்களும் நிறைந்தவராக ஆகிவிட்டோமா? என்று இப்போது தன்னைத்தானே கேளுங்கள். பாப்சமான் பாவத்தை அழிக்கும் சொரூபத்தில் உறுதியாக இருக்கிறேனா? எப்போது நினைவின் ஜுவாலை ரூபமாகிறீர்களோ அப்போதே பாவகடேஷ்வர் அல்லது பாவத்தை அழிப்பவராக ஆக முடியும், அப்படி ஆகிவிட்டீர்களா? தரிசனத்திற்காக திரையை விலக்குகிறார்கள், திரை விலகியவுடன் தரிசனம் கிடைக்கிறது. அப்படி முழுமையான தரிசனம் தரும் சொரூபமாகிவிட்டீர்களா? சமயத்தின் திரை விலகிவிட்டால் உங்கள் தெய்வீக தரிசன மூர்த்தி நடைமுறையில் வெளிப்பட வேண்டும். அல்லது தரிசனம் தரும் மூர்த்திகள் இதுவரை நிறைந்தவராக சகஜமாக இருக்கிறீர்களா? நிறைந்த சொரூபத்தையே எப்போதும் தரிசனமாகக் காட்டப்படுகிறது. எனவே அப்படி தயாராக இருக்கிறீர்களா அல்லது ஆக வேண்டுமா? அல்லது சமயம் வரட்டும் அப்போது தயாராக்கிக்கொள்ளலாம் என்று இருக்கிறீர்களா? யார் நேரம் வரும்போது தயாராகிறார்களோ அவர்கள் தம்மை தயார் செய்வதில் இருப்பார்களா அல்லது தரிசனம் தரும் மூர்த்தி ஆவார்களா? அவர்கள் தமக்காக இருப்பார்கள், உலகத்திற்காக இருக்க மாட்டார்கள். அவர்கள் சுய கல்யாணகாரியாக இருப்பார்கள், அவர்கள் விஷ்வ கல்யாணகாரியாக இருக்க மாட்டார்கள், கடைசி பட்டம் விஷ்வ கல்யாணகாரிதான், வெறும் சுய கல்யாணகாரி அல்ல. சுய கல்யாணகாரியில் இருந்து விஷ்வ கல்யாணகாரி, இரட்டை காரியம் செய்பவர்களே இரட்டை கிரீடதாரி ஆகமுடியும். வெறும் சுய கல்யாணகாரி இரட்டை கிரீடதாரியாக ஆக முடியாது. ராஜ்ஜியத்திற்கு வரமுடியும் ஆனால் ராஜ்ஜிய அதிகாரி ஆகமுடியாது. எனவே நேரத்திற்குத் தக்கபடி இப்போது முயற்சியின் வேகம் தீவிரமாக இருக்க வேண்டும். இப்போது நினைவின் சக்தியை இன்னும் தீவிரமாக அதிகப்படுத்துங்கள். இப்போது சாதாரண

ரூபத்தில் இருக்கிறீர்கள். எனவே எப்போது வேண்டுமானாலும் பிரச்சினையின் வசத்தில் ஏமாற்றம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. சக்திசாலி நினைவின் பட்டியில் இருந்தீர்கள் என்றால் பாதுகாப்பாக இருக்க முடியும். சேவையின் சச்சரவுகளில் இருந்தும் தூர விலகி இருங்கள். எப்போது சேவையில் ஏன்–என்ன, நீ–நான், எனது–உனது என்பதெல்லாம் வருகிறதோ அப்போது சேவையும் பிரச்சினையாகி விடுகிறது. எனவே இந்த சிக்கல்களையும் தாண்டி சென்றுவிடுங்கள். சேவையின் பின்னால் சுயமரியாதையை மறக்காதீர்கள். எந்த சேவையில் சக்திசாலி நினைவு இல்லையோ அந்த சேவையில் வெற்றி குறைவு மேலும் தனக்கும் மற்றவருக்கும் சிக்கல் அதிகம். பெயருக்காக சேவை செய்யாதீர்கள், ஆனால் செயலுக்காக சேவை செய்யுங்கள். அதைத்தான் சக்தி நிறைந்த சேவை என்று சொல்லப்படுகிறது. அந்தமாதிரி நாசூக்கான நேரம் வரப்போகிறது, அதில் நினைவின் சக்தி மட்டுமே பாதுகாப்பிற்கான சாதனமாக இருக்கும். அந்தமாதிரி நினைவின் சக்தி உங்களுக்கு நாலாபுறமும் எல்லா சக்திகளின் பாதுகாப்பு சாதனமாக இருக்கும். எனவே சதா தன்னையும், சேவைநிலையத்தையும், அல்லது செயல்படும் இடத்தையும் மேலும் வரக்கூடிய எல்லா சென்டர்களின் மாணவர்களுக்கும் நினைவின் சக்தி சொரூப உணர்வை வாயுமண்டலத்தில் கொண்டுவாருங்கள். இப்போது சாதாரண நினைவின் நிலை பாதுகாப்பு சாதனமாக முடியாது.

எல்லா டீச்சர்களும் ஜ்வாலா சொரூபத்தில்தான் இருக்கிறீர்கள். இந்த ஜ்வாலா சொரூபத்தின் மூலமாக அனேக ஆத்மாக்களின் பலவீனத்தை தூர விலக்கக்கூடியவர்கள். டீச்சர்கள் என்றால் சிவ–சக்தி இணைந்திருப்பவர்கள். சிவனில்லாமல் சக்தியில்லை, சக்தியில்லாமல் சிவனில்லை. ஒவ்வொரு நொடி, ஒவ்வொரு சுவாசம் பாபா மற்றும் நீங்கள் இணைந்து இருக்கிறீர்கள். எனவே அப்படிப்பட்ட சிவசக்தி சொரூப பொருப்பான ஆத்மாக்கள்தானே. எந்த நேரத்திலும் சாதாரண நினைவு இருக்கக்கூடாது. ஏனெனில் மேடைமீது இருக்கிறீர்கள். மேடையில் ஒவ்வொரு முறையும் எப்படி அமர்கிறீர்கள்? எப்படி காரியங்களைச் செய்கிறீர்கள்? விழிப்பாக இருந்து செய்கிறீர்கள் இல்லையா. சாதாரண நடவடிக்கை இருக்காது. சதா விழிப்போடு இருந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்கள். சேவாகேந்திரம் மேடையாக இருக்கிறது, அது வீடு கிடையாது, மேடை. மேடையில் இருக்கும்போது எப்போதும் கவனம் இருக்கிறது மற்றபடி வீட்டில் இருக்கும்போது விருப்பம் போல் இருப்பீர்கள். எனவே இந்த சேவாகேந்திரம் சேவையின் மேடையாக இருக்கிறது. எனவே எப்போதும் ஜ்வாலா சொரூபம், சக்தி சொரூபம். அன்பானவராகவும் இருக்கிறீர்கள் எனினும் அன்பு தனியாக இல்லை. அன்போடு கூடவே சக்தி சொரூபமும் இருக்கட்டும். ஒருவேளை அன்பு சொரூபம் மட்டும் தனியாக இருக்கிறது, சக்தி ரூபம் இல்லை என்றால் எப்போது வேண்டுமானாலும் ஏமாற்றம் கிடைக்க முடியும். எனவே அன்பு மற்றும் சக்தி ரூபம் இரண்டும் இணைந்தே இருக்க வேண்டும். இரண்டும் சமமாக இருக்க வேண்டும். இப்படி இருப்பவரைத்தான் நம்பர்ஒன் யோக்கிய டீச்சர் என்று சொல்லப்படுகிறது. 21.11.84

**அஞ்சாமை சக்தி**

வினாச ஜ்வாலையின் நெருப்பில் இருந்து தப்பிப்பதற்கான சாதனம்–அஞ்சாமை என்ற சக்தி. அஞ்சாமை, வினாச ஜ்வாலையின் பிரபாவத்தினால் குழப்பத்தை ஏற்படுத்தாது. தடுமாற்றத்தை கொண்டுவராது. அஞ்சாமையின் ஆதாரத்தில் வினாச ஜ்வாலையின் பிரபாவத்தால் பயபீதி அடைந்த ஆத்மாக்களுக்கு பொறுமையின் சக்தியைத் தரமுடியும். ஆத்மா பயத்தின் நெருப்பில் இருந்து தப்பித்து குளிர்ந்திருப்பதன் காரணத்தால் குஷியில் ஆடும். அழிவை பார்த்தபோதும் ஸ்தாபனை கண்ணுக்குத் தெரியும். அவர்களுடைய கண்களில் ஒரு கண்ணில் முக்தி – ஸ்வீட்ஹோம் மற்றொரு கண்ணில் ஜீவன் முக்தி அதாவது சொர்கம் கலந்திருக்கும். அவருக்கு தனது வீடு, தனது ராஜ்ஜியம் மட்டுமே தென்படும். ஐயோ போய்விட்டார்களே, ஐயோ செத்துவிட்டார்களே என மக்கள் கதறுவார்கள் ஆனால் தனது இனிமையான வீட்டிற்கு, தனது இனிமையான ராஜ்ஜியத்திற்கு சென்றிருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்வீர்கள். எதுவும் புதிதல்ல என்ற மோதிரத்தை அணிந்திருப்பீர்கள். நமது வீடு நமது ராஜ்ஜியம்–இந்த குஷியில் ஆடிப்பாடி கூடப்போவீர்கள். அவர்கள் கதறுவார்கள் நீங்கள் கூட செல்வீர்கள். கேட்கும்போதே எல்லோருக்கும் குஷி ஏற்படுகிறது என்றால் அந்த நேரம் எவ்வளவு குஷியில் இருப்பீர்கள். எனவே

நான்குவிதமான தீயில் இருந்தும் குளிர்ந்துவிட்டீர்கள் அல்லவா? வினாச ஜ்வாலையில் இருந்து தப்பிப்பதற்கான சாதனம் என்னவென்று கேட்டீர்களா? அதுதான் பயமின்மை. அதேபோல விகாரங்களின் நெருப்பின் அம்சங்களில் இருந்தும் தப்பிப்பதற்கான சாதனம் – தனது ஆதி மற்றும் ஆதிஅந்தமில்லா நிலையின் வம்சத்தை நினைவு செய்வதாகும். ஆதியந்தமில்லா பாபாவின் வம்சம் நான் சம்பூரண சதோபிரதான ஆத்மா. ஆதி வம்சம் – நான் தேவ ஆத்மா. தேவ ஆத்மா 16 கலைகள் நிறைந்த, முற்றிலும் விகாரமற்றவர்கள். எனவே ஆதியந்தமில்லா மற்றும் ஆதி வம்சத்தை நினைவு செய்தீர்கள் என்றால் விகாரங்களின் அம்சமும் முடிந்து போய்விடும். 2102.85

**இப்போது மாதவம் புரியும் ஆத்மா ஆகுங்கள்**

தற்போதய நேரத்திற்குத் தக்கபடி அனைத்து சினேகி, அனைத்து சிறந்த குழந்தைகளிடம் பாப்தாதா இன்னும் என்ன விசேசத்தை பார்க்க விரும்புகிறார்? சீசன் முழுவதும் அவ்வப்போது சைகை காட்டி வருகிறார். இப்போது அந்த சைகைகளின் விளைவை வெளிப்படையான ரூபத்தில் பார்க்க நேரம் வந்துகொண்டிருக்கிறது. சினேகி ஆத்மாவாக இருக்கலாம், உதவிசெய்யக்கூடிய ஆத்மாவாக இருக்கலாம். சேவாதாரியாகக்கூட இருக்கலாம். யாராக இருந்தாலும் இப்போது மாதவம் புரியும் ஆத்மாக்கள் ஆகுங்கள். தமது குழு சொரூப தபஸ்யாவின் ஆன்மீக ஜ்வாலை மூலம் எல்லா ஆத்மாக்களையும் துக்க–அசாந்தியில் இருந்து விடுவிக்கும் மகத்துவம் வாய்ந்த காரியத்தை செய்வதற்கான நேரமிது. எப்படி ஒருபுறம் தேவையற்ற இரத்த விளையாட்டின் அலைகள் அதிகமாகிக்கொண்டே போகிறது, எல்லா ஆத்மாக்களும் தமக்கு எந்த ஆதரவும் இல்லாததை உணர்கிறார்கள், அப்படிப்பட்ட நேரத்தில் எல்லா ஆதரவையும் அனுபவம் செய்யவைக்க பொறுப்பானவர்கள் மாதவம் புரியும் ஆத்மாக்கள் நீங்களே. நாலாபுறமும் இந்த தபஸ்வி சொரூபத்தின் மூலமாக ஆத்மாக்களுக்கு ஆன்மீக நிம்மதியை அனுபவம் செய்ய வைக்க வேண்டும். முழு உலகில் உள்ள ஆத்மாக்களும் இயற்கையால், வாயுமண்டலத்தால், மனித ஆத்மாக்களால், தமது மனதின் பலவீனத்தால், உடலால் நிம்மதி இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு நிம்மதி நிலையை ஒரு நொடியாவது உணர வைத்தீர்கள் என்றால் உங்களுக்கு உளமாற அடிக்கடி நன்றி தெரிவிப்பார்கள். இந்த நேரம் குழுவாக ஜ்வாலா ரூபத்தில் இருப்பது அவசியமாகும். இப்போது வள்ளலின் குழந்தைகள் வள்ளலின் ரூபத்தில் நிலைத்திருந்து, ஒவ்வொரு நேரமும் கொடுத்துக்கொண்டே இருங்கள். இடைவிடாத பெரிய தருமசாலையை உருவாக்குங்கள். ஏனெனில் ராயல் பிச்சைக்காரர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். பணத்தின் பிச்சைகாரர்கள் மட்டும் பிச்சைக்காரர்களா இருப்பதில்லை ஆனால் மனதின் பிச்சைக்காரர்கள் அனேகவிதமாக இருக்கிறார்கள். பிராப்தியற்ற ஆத்மாக்கள் பிராப்தியின் துளியாவது கிடைக்காதா என தாகமாக இருப்பவர்கள் அனேகம். எனவே இப்போது குழுவில் வள்ளலின் அலைகளைப் பரப்புங்கள். எந்த பொக்கிஷத்தை சேர்த்தீர்களோ அதை மாஸ்டர் வள்ளலாகி எவ்வளவு கொடுத்துக்கொண்டே செல்கிறீர்களோ அவ்வளவு அது நிறைந்துகொண்டே இருக்கும். எவ்வளவு கேட்டிருக்கிறீர்கள். இப்போது செய்வதற்கான நேரம். தபஸ்வி மூர்த்தியினுடைய அர்த்தம் என்னவென்றால் தபஸ்யா மூலமாக அமைதி சக்தியின் கிரணங்களை நாலாபுறமும் பரப்பக்கூடிய அனுபவத்தைப் பெறுவது. தனக்காக மட்டும் நினைவு சொரூபமாகி சக்திசேனைகளோடு கலந்திருப்பது தனி விசயம். ஆனால் தபஸ்வி சொரூபம் பிறருக்கு கொடுப்பதற்கான சொரூபம். எப்படி சூரியன் உலகிற்கு வெளிச்சம் தருவதோடு அனேக அழியக்கூடிய பலன்களையும் பெற வைக்கிறது. அதேபோல சிறந்த தபஸ்வி ரூபத்தின்மூலம் பிராப்திகளின் கிரணங்களை அனுபவம் பெறச் செய்யுங்கள். அதற்காக முதலில் சேமிப்பை அதிகமாக்குங்கள். நினைவால் அல்லது ஞான சிந்தனையால் தன்னை சிறந்தவர் ஆகிவிட்டேன், மாயாஜீத் வெற்றியாளன் ஆகிவிட்டேன் என்று இதில் மட்டும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டாம். ஆனால் அனைத்துப் பொக்கிஷங்களையும் கொண்டு முழு நாளில் எத்தனைப் பேருக்கு வள்ளலாக இருந்தேன் எனப் பாருங்கள். எல்லாப் பொக்கிஷங்களையும் ஒவ்வொரு நாளும் காரியத்தில் கொண்டுவந்தீர்களா அல்லது சேமிப்பை மட்டும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்களா? குஷியின் பொக்கிஷம், அமைதியின் பொக்கிஷம், சக்திகளின் பொக்கிஷம், ஞானத்தின் பொக்கிஷம், குணங்களின் பொக்கிஷம் ஆகியவைகளை உதவி செய்வதற்கு எவ்வளவு கொடுத்தீர்கள் அதாவது எவ்வளவு அதிகமாக்கினீர்கள்

என்பதற்கான சார்ட் இப்போது வையுங்கள். இதன்மூலமாக பொதுவான சார்ட் எதை வைக்கிறீர்களோ அது தானே சிறந்ததாகிவிடும். இப்போது என்ன சார்ட் வைக்க வேண்டும் என்பது புரிந்ததா? உலக நன்மை செய்பவர் ஆகவேண்டும் இதுதான் தபஸ்வி சொரூபத்தின் சார்ட். எனவே எத்தனை பேருக்கு நன்மை செய்திருக்கிறீர்கள். அல்லது சுய நன்மையிலேயே நேரம் சென்றுகொண்டிருக்கிறதா? தனக்கு நன்மை செய்துகொள்வதற்கான நேரம் நிறைய கடந்துவிட்டது. இப்போது வள்ளலாவதற்கான நேரம் வந்துவிட்டது. எனவேதான் பாப்தாதா மீண்டும் நேரத்தின் சமிஞ்கை கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஒருகால் இதுவரைக்கும் வள்ளலின் நிலையை அனுபவம் செய்யவில்லை என்றால் அனேக ஜென்மத்திற்கு உலக ராஜ்ஜிய அதிகாரி ஆகும் கோடிமடங்கு பாக்கியத்தை பெற முடியாது, ஏனெனில் விஷ்வ–ராஜன் உலகிற்கு தாய் தந்தை அதாவது வள்ளலாக இருப்பவர். இப்போதய வள்ளலின் சமஸ்காரம் அனேக ஜென்மத்திற்கு பலனை கொடுத்துக்கொண்டே இருக்கும். ஒருவேளை இப்போது பெறுவதற்கான சமஸ்காரம், எந்த ரூபத்தில் இருந்தாலும் பெயர் விரும்புவது, மரியாதை விரும்புவது அல்லது எந்தவிதமான பெறுவதற்கான சமஸ்காரம் இருந்தாலும் அது உங்களை வள்ளலாக விடாது 07.04.86

**அதிவேக சேவை–நினைத்தவுடன் நடந்தது**

ஹோலி என்றால் எப்போதும் புனித சக்தி மூலமாக புனிதமாற்றதை நொடியில் விரட்டக்கூடியவர். தனக்காக மட்டுமல்லாமல் மற்றவருக்காகவும் செய்பவர். ஏனெனில் முழு உலகையும் மாற்ற வேண்டும் அல்லவா. புனிதத்தின் சக்தி எவ்வளவு மகத்துவம் வாய்ந்தது என்பது தெரியுமல்லவா! புனிதம் என்பது அப்படிப்பட்ட நெருப்பு அது நொடியில் உலகத்தின் குப்பைகளை சாம்பலாக்கக்கூடியது. முழு புனிதம் அப்படிப்பட்ட சிறந்த சக்தியாக இருக்கிறது. கடைசியில் எப்போது எல்லோரும் முழுமை அடைந்து விடுகிறீர்களோ அப்போது உங்கள் உயர்ந்த எண்ணங்களின் ஒருமித்த தீயால் இந்த எல்லா குப்பைகளும் எரிந்து சாம்பலாகிவிடும். யோகம் ஜுவாலையாகும். கடைசியில் இப்படி மெது மெதுவாக சேவை நடக்காது. நினைத்தவுடன் நடந்தது–அதையே அதிவேக சேவை எனச் சொல்லப்படுகிறது. தற்போது தனக்குள் நிறைத்துக்கொண்டிருக்கிறீர்கள், பிறகு காரியத்தில் ஈடுபடுத்துவீர்கள். ஜுவாலையால் அசுரர்களை அழித்ததாகத் தேவிகளின் நினைவுச் சின்னங்களில் காண்பிக்கிறார்கள். அசுரர்களை அல்ல, ஆனால் அசுர சக்திகளை அழித்தீர்கள். அது எந்த நேரத்தின் நினைவுச் சின்னம்? இப்போதயதுதானே. எனவே அப்படிப்பட்ட எரிமலையாகுங்கள். நீங்கள் ஆகவில்லை என்றால் வேறு யார் ஆவார்கள். எனவே இப்போது எரிமலையாகி அசுர சமஸ்காரம், அசுர சுபாவம் அனைத்தையும் அழித்துவிடுங்கள். தன்னுடையதை முடித்துவிட்டீர்கள் அல்லவா அல்லது தன்னுடையதையும் செய்துகொண்டிருக்கிறீர்களா, நல்லது.

பயமற்றவர் ஆகிவிட்டீர்கள். பயப்படுபவர்கள் இல்லைதானே? எரிமலையாக இருக்கிறீர்கள் எனவே பயமேன்? ஏற்கனவே இறந்துவிட்டீர்கள், பிறகு எதைக்கண்டு பயப்டுகிறீர்கள்? எனவே எப்போதும் புதிய இராஜ்ஜியத்தின் நினைவு இருக்கட்டும். எல்லோரும் பயமற்ற எரிமலைகளாகி இயற்கை மற்றும் ஆத்மாக்களின் உள்ளே இருக்கும் அவலங்களை எல்லாம் எரித்து சாம்பல் ஆக்கக்கூடியவர்கள் ஆகுங்கள். இது மிகப்பெரிய செயல், வேகமாகச் செய்யவேண்டும் அப்போதுதான் முடிவடையும். இப்போது மனிதர்களுக்கே இன்னும் செய்தி சென்று சேரவில்லை, இயற்கையின் விசயம் அப்புறம். எனவே வேகத்தை அதிகப்படுத்துங்கள். எல்லாத் தெருக்களிலும் சென்டர் இருக்க வேண்டும். ஏனெனில் சூழ்நிலைப்படி ஒரு தெருவிலிருந்து இன்னொரு தெருவிற்குப் போக முடியாது, ஒருவர் பிறரை பார்க்கவும் முடியாது. எனவே வீட்டுக்குவீடு தெருவிற்குத்தெரு இருக்க வேண்டும் அல்லவா. நல்லது. 21.12.1989

**தபஸ்யா என்றால் ஜுவாலா சொரூபம்**

சென்றேயாகவேண்டும் என்ற திடமான நம்பிக்கை வைத்தீர்கள் அப்போது வந்து சேர்ந்து விட்டீர்கள் அல்லவா? போகலாமா வேண்டாமா – என யோசித்தவர்கள் இருந்துவிட்டார்கள். இப்போது இது ஒன்றுமே இல்லை, இப்போது இன்னும் நடக்கப் போகிறது. இப்போது

இயற்கையானது தனது முழு வேக ஆட்டத்தை இன்னும் ஆரம்பிக்கவில்லை. செய்கிறது ஆனால் உங்களைப் பார்த்தபிறகு கொஞ்சம் மந்தமாகிவிடுகிறது. எனது எஜமான் இன்னும் தயாராகவில்லையே என அதுவும் பயப்படுகிறது. யாருக்கு பணியாள் ஆவது? பயமில்லைதானே? பயப்படுபவர்களாக இல்லையே? மரணத்தைக் கண்டு மக்கள் பயப்படுகிறார்கள் ஆனால் நீங்கள் இறந்தவர்களாக இருக்கிறீர்கள். பழைய உலகத்திலிருந்து இறந்து விட்டீர்கள்தானே? புதிய உலகத்தில் வாழ்பவர்கள், பழைய உலகத்தில் இருந்து இறந்து விட்டவர்கள், அப்படி இருக்க இறந்து விட்டவர்களுக்கு மரணத்தைப்பற்றி என்ன பயம் இருக்கும்? மேலும் நீங்கள் டிரஸ்டியாக இருக்கிறீர்கள் அல்லவா? ஓருவேளை தன்னுடையது என்று ஏதாவது இருக்குமானால் மாயா பூனை நான் வரவா நான் வரவா எனக் கேட்கும். நீங்களோ டிரஸ்டிகளாகவே இருக்கிறீர்கள். உடல்கூட தன்னுடையதல்ல. மக்களுக்கு மரணத்தைப்பற்றிய கவலை இருக்கிறது அல்லது பொருட்களைப்பற்றிய அல்லது குடும்பத்தைப்பற்றிய கவலை இருக்கிறது. நீங்களோ டிரஸ்டிகளாகவே இருக்கிறீர்கள். பற்று இல்லை அல்லவா, அல்லது கொஞ்சம் கொஞ்சம் ஈர்ப்பு இருக்கிறதா? தேக உணர்வு இருக்குமானால் கொஞ்சம் கொஞ்சம் ஈர்ப்பு இருக்கும். எனவே தபஸ்யா என்றால் ஜுவாலா சொரூபம், பயமற்றநிலை. நல்லது 13.02.1991

**ஒரு புறம் எரிப்பீர்கள் மறுபுறம் குளிர்விக்கவும் செய்வீர்கள்.**

பாப்தாதாவிடம் 15 நாள் சார்ட்டுக்கான பல குழந்தைகளின் ரிசல்ட் வந்தது. பெரும்பாலான குழந்தைகளிடம் கவனம் இருந்தது என்ற ஒரு விசயத்தை நாலா பக்கமும் உள்ள ரிசல்டில் பாப்தாதா பார்த்தார். எத்தனை சதவீதம் இருக்க வேண்டும் என்று தான் விருப்பப்பட்டீர்களோ அத்தனை இல்லை, எனினும் கவனம் இருந்தது. அதோடு யார் உளமாற தீவிர முயற்சியுடைய குழந்தைகளோ அவர்கள் தங்கள் வாக்குருதியை நிறைவேற்ற வேண்டும் ஏற்ற இலட்சியத்தோடு முன்னேறிக்கொண்டும் இருக்கிறார்கள். அதோடு மேலே முன்னேறி முன்னேறி இலக்கை அடைந்தும் விடுவார்கள். கொஞ்சம்பேர் இப்போதும் சிலவேளை சோம்பேறித்தனம் சிலவேளை அலட்சியத்தியத்திற்கு வசமாகி குறைந்த அளவே கவனம் கொடுக்கிறார்கள். அவர்களுடைய விசேச சுலோகம் என்னவென்றால் – சென்று சேரத்தானே வேண்டும், செல்வோம்... போக வேண்டாமா, போவோம். சென்று சேர்ந்து விடுவோம் என்று சொல்வது சோம்பேறித்தனமாகும். சென்றேயாக வேண்டும் என்பது தீவிர முயற்சியாக இருக்கிறது. கூடவே தீவிர முயற்சியின் ஈடுபாட்டை அக்கினி ரூபமாக்குங்கள். எரிமலையாகுங்கள். தற்போதய நேரப்படி மிச்சமிருக்கும் மனதின், உற்றார் – உறவின் கணக்குகளை எல்லாம் ஜுவாலா சொரூபமாகி சாம்பலாக்கி விடுங்கள். ஈடுபாடு இருக்கிறது, அதை பாப்தாதாவே பாஸ் என்கிறார் ஆனால் இப்போது ஈடுபாட்டை அக்கினி ரூபமாக்குங்கள்.

உலகில் ஒருபுறம் குற்றங்கள் மற்றும் கொடுமைகளின் தீ பற்றி எரியும், மறுபுறம் குழந்தைகள் உங்களுடைய சக்திமிக்க யோகம் அதாவது ஈடுபாட்டின் அக்கினி ஜுவாலா ரூபமாக அவசியம் இருக்க வேண்டும். இந்த ஜுவாலை ரூபம் இந்த குற்றங்கள் கொடுமைகளின் தீயை முடிப்பதோடு அனைத்து ஆத்மாக்களுக்கும் உதவியும் செய்யும். உங்கள் ஈடுபாடு ஜுவாலா ரூபமாக இருக்க வேண்டும் அதாவது சக்திமிக்க யோகமாக இருக்க வேண்டும், அப்போது இந்த நினைவின் தீயானது அந்த தீயை முடித்துவிடும் மேலும் இன்னொருபுறம் ஆத்மாக்களுக்கு பரமாத்மாவின் செய்தியை, குளிர்ந்த சொரூபத்தின் அனுபவத்தை ஏற்படுத்தும். எல்லையற்ற வைராக்கிய உணர்வை தோற்றுவிக்கும். ஒருபுறம் எரிக்கும் மறுபுறம் குளிர்விக்கும். எல்லையற்ற வைராக்கியத்தின் அலைகளைப் பரப்பும். ஒரு பாபாவைத் தவிர வேறு யாருமில்லை என எனது யோகம் இருக்கிறது என குழந்தைகள் சொல்கிறீர்கள், இது மிகவும் நல்லதே. எனினும் நேரத்திற்குத் தக்கபடி இப்போது ஜுவாலா ரூபமாகுங்கள். எப்படி நினைவுச் சின்னத்தில் சக்திகளை சக்தி ரூபமாக, மகா சக்தி ரூபமாக, அனைத்து ஆயுதங்களையும் உடையவராகக் காட்டி இருக்கிறார்களோ, இப்போது அந்த மகா சக்தி ரூபத்தை வெளிப்படுத்துங்கள். பாண்டவர்களாக இருந்தாலும் சரி, சக்திகளாக இருந்தாலும் சரி, அனைவரும் கடலில் இருந்து உருவான ஞான நதிகளாக இருக்கிறீர்கள், கடலாக இல்லை, நதிகளாக இருக்கிறீர்கள். ஞான கங்கைகளாக இருக்கிறீர்கள். எனவே ஞான கங்கைகள் இப்போது ஆத்மாக்களை தனது

ஞானத்தின் குளிர்ச்சி மூலமாக பாவத்தீயில் இருந்து விடுவியுங்கள். இதுவே தற்போதய நேரத்தில் பிராமணர்கள் செய்ய வேண்டிய காரியமாக இருக்கிறது.

கூடவே பிராமண ஆத்மாக்களிடம் இன்னும் நெருக்கத்தில் கொண்டுவருவதற்கு, ஒவ்வொரு பக்கமும் அல்லது மதுவனத்தில் நாலாபுறமும் ஜுவாலா சொரூபத்தின் வாயுமண்டலத்தை உருவாக்குவதற்கு, விரும்பினால் எதை பட்டி என்று சொல்கிறீர்களோ அதைச் செய்யுங்கள், அல்லது தங்களுக்குள் குழுவாக கலந்துபேசி ஜுவாலா சொரூபத்தின் அனுபவத்தை ஏற்படுத்துங்கள் பிறகு மேலும் முன்னேறிச் செல்லுங்கள். எப்போது இந்த சேவையில் ஈடுபடுகிறீர்களோ அப்போது சின்னச் சின்ன விசயங்கள் – அதற்கு நேரம் கொடுக்கிறீர்கள், முயற்சி செய்கிறீர்கள், மனம் உடைந்து போகிறீர்கள், இவை எல்லாம் எப்படி தோன்றும் என்றால், எரிமலை நிலை எவ்வளவு உயர்ந்த நிலை அதற்கு முன்னால் இப்படி நேரத்தை செலவழிப்பது, முயற்சி செய்வது எல்லாம் ஒரு பொம்மை விளையாட்டு போல அனுபவமாகும். தானாகவே எளிதாகவே பாதுகாப்பாக இருப்பீர்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் குழந்தைகள் சின்னஞ்சிறிய விசயங்களுக்காக முயற்சி செய்வதைப் பார்க்கும்போது பாப்தாதாவிற்கு மிக அதிகமாக இரக்கம் வருகிறது என்று பாப்தாதா சொல்லி இருக்கிறார். அன்பான எரிமலை ரூபம் குறைவாக இருக்கிறது அப்போது முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. எனவே இப்போது முயற்சியில் இருந்து விடுபடுங்கள், சோம்பேறியாக வேண்டாம் ஆனால் முயற்சியில் இருந்து விடுபடுங்கள். முயற்சியோ செய்ய வேண்டியதில்லை எனவே ஓய்வாகத் தூங்கலாம் என நினைக்காதீர்கள். ஆனால் அன்பினால் முயற்சியை முடித்துவிடுங்கள். சோம்பேறித்தனத்தால் அல்ல. புரிந்ததா – என்ன செய்ய வேண்டும்? 30.031999

**மாஸ்டர் சூரியனாகி அனுபூதியின் கதிர்களைப் பரப்புங்கள்.**

இப்போது துக்கம் மிக மிக அதிகமாகிறது, அதிகமாகிக்கொண்டே இருக்கும். எனவே மாஸ்டர் சூரியனாகி அனுபூதியின் கதிர்களை பரப்புங்கள். சூரியன் எப்படி ஒரே நேரத்தில் எத்தனை பிராப்திகளை கொடுக்கிறது, ஒன்றை மட்டும் தருவதில்லை. வெறும் வெளிச்சம் மட்டும் தருவதில்லை, சக்தியும் தருகிறது. அனேக பிராப்திகளைத் தருகிறது. அதேபோல நீங்கள் எல்லோரும் இந்த ஆறு மாதத்தில் ஞான சூரியனாகி சுகத்தின், மகிழ்ச்சியின், அமைதியின், உதவியின் கதிர்களைப் பரப்புங்கள். அனுபூதி கொடுங்கள். உங்கள் முகத்தைப் பார்த்தவுடன் துக்கத்தின் அலைகளுக்கு இடையே குறைந்தது புன்னகை தோன்ற வேண்டும். உங்கள் பார்வையால் தைரியம் வரவேண்டும். எனவே இதற்கு கவனம் கொடுங்கள். படைப்பவர் ஆகவேண்டும் தபஸ்வி ஆகவேண்டும். அப்படி தபஸ்யா செய்யுங்கள் அதன்மூலம் தபஸ்யாவின் ஜுவாலை ஏதாவது அனுபூதி செய்ய வேண்டும். வார்த்தைகளை மட்டும் கேட்கக்கூடாது, அனுபவத்தை ஏற்படுத்துங்கள். அனுபூதி நிலையாக இருக்கும். வெறும் வார்த்தைகள் கொஞ்ச நேரத்திற்கு நன்றாக இருக்கும், எப்போதும் நினைவில் நிற்காது. அதனால் அனுபவத்தின் அதிகாரியாகி அனுபவத்தை ஏற்படுத்துங்கள். யாரெல்லாம் உங்கள் உறவு தொடர்பில் வருகிறார்களோ அவர்களுக்கு தைரியம், ஊக்க உற்சாகத்தை தனது உதவியால், பாப்தாதாவோடு இணைப்பதால் கொடுங்கள். அதிகம் சிரமப்படாதீர்கள். தானும் சிரமப்படாதீர்கள் பிறரையும் சிரமப்பட விடாதீர்கள். பொறுப்பு இருக்கிறதா! அப்போது அப்படிப்பட்ட ஊக்க உற்சாகத்தின் அலைகளை உருவாக்குங்கள் அதன்மூலம் கடுமையானவர்களும் ஊக்க உற்சாகமுடையவராக வேண்டும். மனம் மகிழ்ச்சியில் நடனமாட வேண்டும். 25.03.2005

**ஜுவாலா ரூப யோகி நீங்கள்**

சில குழந்தைகள் பாபாவிடம் உரையாடும்போது அமிர்தவேளையில் சோம்பலின் அலைகள் கொஞ்சம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவசியம் எழுகிறார்கள் ஆனால் பவர்புல் சக்திசாலி ரூபத்தில் தனக்குள் சக்தியை நிரப்புவதில் அல்லது உலகத்திற்கு சக்தி கொடுப்பதில் கொஞ்சம் களைப்பின் ரேகைகள் தோன்றுகின்றன. அந்த நேரத்தில் நான் எனது சென்டரின் தியான அறையில் அமர்ந்திருக்கிறேன், பாபா ரூமில் அமர்ந்திருக்கிறேன், வகுப்பறையில் அமர்ந்திருக்கிறேன் என்றெல்லாம் நினைக்காதீர்கள், ஆனால் உலக மேடையின் மீது

அமர்ந்திருக்கிறேன் என உணருங்கள். ஹீரோ நடிகராக இருக்கிறேன் மேலும் மேடைமீது அமர்ந்திருக்கிறேன் என உணருங்கள். ஒருவேளை ஹீரோ நடிகர் களைத்துப்போய் நடிப்பாரானால் எப்படி நடிப்பார்? எப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகும். எனவே அமிர்தவேளையையும் பவர்புல் ஆக்குங்கள். நியமத்தை நன்கு கடைப்பிடிக்கிறீர்கள் எனினும் இப்போது கேட்டீர்கள் அல்லவா, யோகத்தை சர்வ சக்திகளால் பவர்புல் ஆக்குங்கள். யோகம் அக்கினியாக இருக்க வேண்டும். எரிமலையாக இருக்க வேண்டும். எனவே இந்த மூன்று மாதங்கள் விசேசமாக அமிர்தவேளையையும் சிறப்பாக கவனியுங்கள். மிக நல்லபடியாக பேசுகிறீர்கள், அன்பு சொரூபமாகவும் இருக்கிறீர்கள் ஆனால் ஜுவாலா சொரூபம் குறைவாக இருக்கிறது. இப்போது சமஸ்காரத்தின் அம்சம்கூட மிச்சமிருக்கக்கூடாது அப்போதுதான் உங்களை ஜுவாலா ரூப யோகி ஆத்மா என சொல்ல முடியும். அதோடு கூடவே இந்த புத்தாண்டில் கஜானா எதெல்லாம் இருக்கிறதோ, ஞான கஜானா, சக்திகளுடைய, குணங்களுடைய, சிறந்த எண்ணங்களுடைய கஜானாக்கள் ஆகியவைகளை ஒன்று வெற்றிகரமாக்குங்கள் மற்றபடி சேமியுங்கள். சேர்த்தும் வையுங்கள், வெற்றிகரமாகவும் ஆக்குங்கள். ஏனெனில் வெற்றி நட்சத்திரம் என்பது உங்கள் பட்டமாகவும் வரதானமாகவும் இருக்கிறது. வெற்றி நட்சத்திரம் என்பது உங்கள் பட்டம் தானே? வெற்றி என்பது எங்கள் கழுத்து மாலை, வெற்றி எங்கள் பிறப்புரிமை என எல்லோரும் உற்சாகமாகச் சொல்கிறீர்கள். எனவே வெற்றி மூர்த்திகளாக இருக்கிறீர்கள், வெற்றிகரமாக்குங்கள் மேலும் சேமித்தும் வையுங்கள். 31.12.2005

### ஆசை, டென்சன் மற்றும் சுபாவம்

சுய முன்னேற்றத்திற்கு திட்டமிடவேண்டும், இதில் இந்த ராயலான நான் என்பது வரவில்லையா என தன்னை சோதிப்பவராகி சோதிக்க வேண்டும், ஏனெனில் இன்று ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்கள். எனவே பாப்தாதா இந்த எண்ணங்களைத் தருகிறார், எனவே இன்று தேக – அபிமானம் மற்றும் அவமானத்தில் எந்த நான் என்பது வருகிறதோ, மனம் உடைந்துபோன நான் என்பது வருகிறதோ, அதை எரித்துவிட்டுத்தான் போக வேண்டும், கூட எடுத்துச்செல்லக்கூடாது. எதையாவது எரிப்பீர்கள்தானே. தீ மூட்டுவீர்களா என்ன? எரிமலை யோகத்தின் அக்கினியை எரியவிடுங்கள். எரிக்கத் தெரியுமா? எரிமலையோகம் வருகிறதா? அல்லது சாதாரண யோகம் வருகிறதா? எரிமலையாகுங்கள். லைட் மைட் ஹவுஸ். என்ன இது பிடித்திருக்கிறதா? அட்டென்சன் ப்ளீஸ், நான் என்பதை எரியச் செய்யுங்கள். பாப்தாதா எப்போது நான் நான் என்ற பாட்டைக் கேட்கிறாரோ அப்போது ஒலியை குறைத்து விடுகிறார். ஆஹா ஆஹா என்ற பாட்டு பாடும்போது சப்தத்தை அதிகமாக்குகிறார். ஏனெனில் நான் நான் என்பதில் இழுவை அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு விசயத்திலும், இது இல்லை, இது இல்லை, இப்படி இல்லை, அப்படி இல்லை என இழுபறி செய்கிறார்கள். எனவே இழுபறியாக இருப்பதால் டென்சன் வருகிறது. பாப்தாதாவிற்கு ஆசை, டென்சன் மற்றும் சுபாவம், தலைகீழ் சுபாவம். சொல்லப்போனால் சுபாவம் என்ற வார்த்தை மிக நல்ல வார்த்தை. சுபாவம் என்றால் சுயத்தின் உணர்வு. ஆனால் அதை தலைகீழாக்கி விட்டீர்கள். எந்த விசயத்தையும் இழுபறியாகச் செய்யாதீர்கள், எதையும் தன்பக்கமும் இழுக்காதீர்கள். அதுவும் மிகுந்த தொல்லை தருகிறது. ஒருவர் என்னதான் உங்களைச் சொல்லட்டும், ஆனால் தன்பக்கமாக இழுக்காதீர்கள். விசயத்தையும் இழுக்காதீர்கள், தன்பக்கமும் இழுக்காதீர்கள், இழுத்தடிப்பை முடித்து விடுங்கள். பாபா, பாபா மற்றும் பாபா. பிடித்திருக்கிறதுதானே! மூன்று விசயங்கள் மற்றும் ஒரு நான் என்பதை இங்கே விட்டுவிட்டுப் போக வேண்டும், கூட எடுத்துச் செல்லக்கூடாது, ட்ரெயினில் சுமையாகிவிடும். நான் பாபாவுடையவன், பாபா என்னுடையவர் என உங்கள் பாட்டு இருக்கிறதல்லவா. இருக்கிறதா. எனவே ஒரு நான் என்பதை வைத்திருங்கள், இரு நான் என்பது முடிந்துவிட்டது. 14.032006

### 'நான்' என்ற வாலை எரித்துவிடுங்கள்

பாப்தாதாவிற்கு ஒரு விசயத்தின் மீது மிகுந்த சிரிப்பு வருகிறது. எந்த விசயம்? இருப்பதோ மகாவீரன் ஆனால் சாஸ்திரத்தில் எப்படி ஹனுமானை மகாவீரன் என்றும் சொல்கிறார்கள் ஆனால் வாலையும் காட்டியிருக்கிறார்கள். 'நான்' என்பதை இந்த வாலாகக் காட்டி

இருக்கிறார்கள். எது வரை மகாவீரன் இந்த வாலை எரிக்க வில்லையோ அதுவரை இலங்கை அதாவது பழைய உலகை முடிக்க முடியாது. எனவே இப்போது இந்த நான் நான் என்ற வாலை எரித்துவிடுங்கள் அப்போது முடிவு நெருங்கி வரும். எரிப்பதற்காக தேவை எரிமலை தபஸ்யா, சாதாரண நினைவு கூடாது. எரிமலை நினைவு அவசியமாகும். அதனால்தான் ஜுவாலா தேவிக்கும் நினைவுச் சின்னம் இருக்கிறது. சக்திசாலி நினைவு. எனவே என்ன செய்யவேண்டும் என்று கேட்டீர்களா? சமமாகியே தீர வேண்டும், முடிவை நெருக்கத்தில் கொண்டுவரவேண்டும் என்ற ஆர்வம் இப்போது மனதில் ஏற்பட்டு இருக்கிறது. சங்கமயுகம் நல்லதென்று நீங்கள் சொல்கிறீர்கள் அப்படி இருக்க இதை ஏன் முடிக்க வேண்டும். நீங்கள் பாபா சமமாக தயை உடையவர், கிருபை காட்டக்கூடியவர், கருணை உள்ளம் உடையவர், எனவே இன்றைய துக்கமுடைய ஆத்மாக்கள் மற்றும் பக்த ஆத்மாக்கள் மீது கருணை உள்ளம் உடைய ஆத்மாக்களே கருணை காட்டுங்கள். மெர்சிபுல் ஆகுங்கள். துன்பம் அதிகமாகிக்கொண்டே போகிறது, துன்பப்படுபவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களை முக்திதாமத்திற்கு அனுப்பி வையுங்கள். வெறும் வார்த்தையின் சேவை மட்டுமல்ல ஆனால் இப்போது மனம் மற்றும் வார்த்தையின் சேவை கூட கூடவே இருக்க வேண்டியது அவசியமாகும். ஒரே நேரத்தில் இரண்டின் சேவையும் ஒன்றாக இருக்க வேண்டும். சேவைக்கு வாய்ப்பு கிடைக்கும்போது மட்டும் என நினைக்காதீர்கள், போனாலும் வந்தாலும் தனது முகம் மற்றும் நடத்தையால் பாபாவின் அறிமுகத்தை கொடுத்துக் கொண்டே இருங்கள். உங்கள் முகம் பாபாவின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். உங்கள் நடத்தை பாபாவை வெளிப்படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். எனவே அப்படிப்பட்ட சதா சேவாதாரி பவ. நல்லது. 30.11.2006

**அமைதியின் ஜுவாலை**

வந்தே ஆகவேண்டும் என்று குழந்தைகள் சொன்னீர்கள் பாபாவும் சரி என்று சொன்னார். அதேபோல ஒருவர் பிறருடைய விசயங்களை, சுபாவங்களை, உணர்வுகளை புரிந்துகொண்டு சரி சரி என சொல்வதன் மூலம் குழுவின் சக்தி அமைதியின் ஜுவாலையை தோன்றச் செய்யும். எரிமலையைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா. எனவே இந்தகுழுவின் சக்தி அமைதியின் சக்தியை பிரகடனம் செய்யும். நல்லது. 18.02.2008

**ஒரு குடும்பம்**

பாப்தாதா இன்று அமிர்தவேளையில் நாலாபுறமும், வெளிநாட்டிலும் உள்நாட்டிலும், எல்லாப் பக்கமும் சுற்றிவர சென்றார். அப்போது எதைப் பார்த்தார். பெரும்பாலானோர் அமிர்தவேளை யோகத்தில் அமர்கிறார்கள், அன்பாக அமர்ந்திருக்கிறார்கள், பாப்தாதாவிடம் பேசவும் செய்கிறார்கள், ஆன்ம உணர்விலும் அமர்ந்திருக்கிறார்கள், பாப்தாதாவிடமிருந்து சக்திகளையும் பெறுகிறார்கள் ஆனால் இப்போது பாப்தாதா வரவிருக்கும் புதிய வருடத்தில் புதுமையை விரும்புகிறார் ஏனெனில் இப்போது நேரம் நாளுக்குநாள் மோசமாகியே தீரவேண்டும். எனவே அப்படிப்பட்ட சமயத்தில் இப்போது எரிமலையாக யோகம் தேவைப்படுகிறது. அந்த முக்கியமான எரிமலையோகம் இப்போதுஅவசியமாக இருக்கிறது. எரிமலையோகம் என்றால் லைட் மைட் சொரூப சக்திசாலி, ஏனெனில் நேரத்திற்குத் தக்கபடி இப்போது துக்கம், அசாந்தி, பிரச்சனைகள் அதிகமாகியே தீரவேண்டும் எனவே தனது துக்கத்தில், வேதனையில் இருக்கும் ஆத்மாக்களுக்கு விசேச எரிமலையோகத்தின் மூலம் சக்திகளைக் கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. துக்க அசாந்திக்கு பதிலாக ஏதாவது சக்தி, சாந்தியை தனது மனசேவை மூலமாக கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. இப்போது நீங்கள் இந்த நேரத்திற்கு ‘ஒருகுடும்பம்’ என்ற தலைப்பு கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா. அதன்படி எப்போது ஒரு குடும்பமோ அப்போது அமைதியில்லா ஆத்மாக்களுக்கு கொஞ்சம் நிம்மதி கொடுங்கள். எனவே பாப்தாதா வரும் வருடத்திற்காக விசேசமாக கவனத்தை ஈர்க்கிறார் அதாவது இப்போது எரிமலை யோகம் அவசியமாக இருக்கிறது. எரிமலை யோகத்தின் மூலமாக மிச்சமிருக்கும் சமஸ்காரங்கள் எல்லாம் சாம்பலாகவேண்டும்.

இப்போது நேரத்தை, முடிவு நேரத்தை முன்னால் கொண்டுவர வேண்டும் என்று உங்கள் அட்வான்ஸ் பார்ட்டியின் துணைவர்கள் உங்கள் அனைவரிடமும் விரும்புகிறார்கள். இப்போது வீடு திரும்ப வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். 'இப்போது வீடு திரும்ப வேண்டும்', 'இப்போது வீடு திரும்ப வேண்டும்' என்ற நினைவு எனக்கு எப்போதும் இருந்து கொண்டே இருந்தது என உங்கள் தீதி நினைவூட்டுகிறார். இப்போது நிறைவாக வேண்டும், முழுமையாக வேண்டும் என்ற விடா முயற்சி என் நினைவில் இருந்துகொண்டே இருந்தது என உங்கள் தாதி நினைவூட்டுகிறார். எனவே பிறருக்கு சக்தி தருவதாக இருந்தாலும் சரி அல்லது தனது பிராமண குடும்பத்தை நிறைவாக்குவதாக இருந்தாலும் சரி இப்போது எரிமலையோகம் மிகவும் அவசியமாக இருக்கிறது என யாரெல்லாம் தாதிகள் சென்றிருந்தார்களோ அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இன்று விசேசமாக அமிர்தவேளையில் வதனத்தில் பாப்தாதாவை சந்தித்தபோது தங்கள் சார்பாக சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது நேரத்தை நெருக்கத்தில் கொண்டுவர பொறுப்புடைய ஆத்மாக்கள் நீங்களே. எனவே வரும் வருடத்தில் என்ன செய்வீர்கள்? சிறப்பாக என்ன செய்வீர்கள்? ஒருவர் பிறருக்கு உதவி செய்பவராகி ஒவ்வொரு சென்டர், சேவை நிலையத்தில் எரிமலை யோகத்தின் அலைகளை தோற்றுவிப்பதோடு செயலில் ஒருவர் பிறருக்கு சினேகி மற்றும் உதவக்கூடியவராகி ஒவ்வொருவரையும் கருத்தில் கொண்டு குறை எது இருக்கிறதோ அதை நீக்க உதவி செய்யுங்கள். மனதின் மூலமாக மற்ற ஆத்மாக்களுக்கு சேவை செய்யுங்கள் மேலும் தனது உதவியின் மூலமாக பிராமண துணைவர்களுக்கு பணி செய்யுங்கள், அப்போதே எங்களுடைய உள்ளத்தின் ஆசை நிறைவேறும் என அவர்கள் சொன்னார்கள்.

ஒவ்வொருவரும் தனக்குள் தனக்காக எந்த நாளில் தன்னை பாபாவுக்கு சமமாக்குவேன் என்பதை உறுதி செய்யுங்கள் என இதையும் பாப்தாதா சொன்னார். தனக்குள் தனக்காக நிச்சயம் செய்யுங்கள். எனவே உறுதி செய்ய வருகிறதா? வரும் வருடத்தில் 'ஒவ்வொரு குழந்தையும் தீவிர முயற்சி செய்பவராகுக' என பாப்தாதா அவர்கள் இன்று ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து வரதானம் தந்து கொண்டிருக்கிறார். அமிர்தவேளையில் எப்போது நினைவில் அமர்கிறீர்களோ மேலும் எப்போது எழுவதற்கான நேரம் வருகிறதோ அந்த நேரத்தில் பாப்தாதாவின் இந்த வரதான மான 'தீவிர முயற்சி செய்பவர் ஆகுக' என்பதை தனது உள்ளத்தில் நினைவு கூருங்கள். பாப்தாதா அவர்கள் இரண்டு விசயங்களை முன்னமேயே கவனம் கொடுக்கச் சொல்லியிருக்கிறார். ஏனெனில் **சங்கமயுகத்தின் நேரம் திடீரென முடிந்துபோகும்.** எனவே ஒன்று நேரம், மற்றது எண்ணம், இரண்டின் மீதும் ஒவ்வொரு நொடியும் கவனம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் இந்த வருடத்தில் என்ன ஆவார்கள்? என்ன ஆவார்கள்? யார் உங்கள் முகத்தைப் பார்த்தாலும், உங்கள் முகத்தில் பரிஸ்தா ரூபம் தெரியவேண்டும் என பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தை மீதும் சுப பாவனை இருக்கிறது. இவர் இன்னார் என தெரியக்கூடாது. பரிஸ்தா அனுபவமாக வேண்டும். அதற்காக தேவை எரிமலை யோகம், வீணானது எதுவும் இருக்கக் கூடாது. லைட் மற்றும் மைட் சொரூப யோகத்தால் வீணானவைகளை எரித்துவிடுங்கள். யாரைப் பார்த்தாலும் சக்தியுள்ள பரிஸ்தா பிறர் கண்களுக்குத் தெரிய வேண்டும். ஏனெனில் பாபாவால் கண்டெடுக்கப்பட்ட குழந்தை அல்லவா. பாபா அவர்கள் குறிப்பாக உங்களை எங்கெங்கிருந்தோ தேடி கண்டுபிடித்து தன்னுடையவர் ஆக்கியிருக்கிறார். எனவே நான் பிராமண நிலையில் இருந்து பரிஸ்தாவாகி இருப்பவன் என்ற இலட்சியத்தை கொள்ளுங்கள். எனவே அமிர்தவேளை மற்றும் தனது தினசரி நடவடிக்கைகளின்போது நான் பிராமண நிலையில் இருந்து பரிஸ்தாவானவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நடக்கும்போதும், சுற்றிவரும்போதும் பரிஸ்தா ரூபம், பரிஸ்தா சொரூபம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதல்லவா. பிரம்மா பாபா பரிஸ்தாவாகி இருக்கிறார், தந்தையைப் பின்பற்றுங்கள்.

பாப்தாதாவிற்கும் வெளிநாட்டை சுற்றிவர நேரம் கிடைக்கிறது. எந்த நேரம் கிடைக்கிறது? அமிர்தவேளை. வெளிநாடுகளிலும் சென்டர்களை பாப்தாதா வலம் வருகிறார் ஆனால் இப்போது கூடுதலாக இருப்பது எரிமலை யோகம். இந்த எரிமலை யோகம் எல்லோரையும் அருகில் கொண்டுவருகிறது ஏனெனில் சக்தி கிடைக்கிறதல்லவா. நீங்களும் லைட் மைட் ரூபம் பெறுவீர்கள். நடக்கும் போதும் வலம்வரும்போதும் லைட் மைட் சொரூபம் இருக்கும் அப்போது

மக்களுக்கும் அந்த வைப்ரேஷன் வரும். பிறகு குறைந்த முயற்சியில் அதிக பலன் கிடைக்கும். 31.12.2011

### முயற்சிக்கு முன்னால் தீவிரம் என்ற வார்த்தையைச் சேருங்கள்.

எல்லோரிடத்திலும் சினேகம் இருப்பதை பாப்தாதாவும் பார்க்கிறார் ஆனால் சினேகத்தோடு சக்தியும் தேவை. அதற்காக அமிர்தவேளையை பவர்புல் ஆக்குங்கள், உட்காருகிறீர்கள், பாப்தாதா உட்காருவதற்கு வாழ்த்து தருகிறார் ஆனால் அமர்வதற்கான வாயுமண்டலம் எப்படி சக்திசாலியாக இருக்க வேண்டும், ஒருவர் ஒருமாதிரி, ஒருவர் ஒருமாதிரி உட்காருகிறீர்கள். அதை நீங்கள் போட்டோ எடுத்தீர்கள் என்றால், இன்னும் நல்லபடியாக இருக்க வேண்டும் என்பது உங்களுக்கே புரியும். எரிமலை யோகம் என்று எதை பாப்தாதா சொல்லியிருந்தாரோ, அதன்மீது இப்போது ஆழமான கவனம் கொடுக்க வேண்டும். எல்லோரும் முயற்சி செய்கிறீர்கள் ஆனால் முயற்சிக்கு முன்னால் தீவிரம் என்ற வார்த்தையைச் சேருங்கள். இப்போது பாப்தாதா அவர்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த இரண்டு மாதங்கள் கொடுத்திருக்கிறார், இதில் அவ்வளவு கவனம் கொடுத்தீர்கள் என்றால் கவனத்தின் கூடவே பாப்தாதாவும் உங்களுக்கு எக்ஸ்ட்ரா உதவி தருவார். மனதின் அதிபதி, எப்படி கை, கால்களை நடத்துகிறீர்களோ அப்படி மனதை நடத்துங்கள். எதை விரும்புகிறீர்களோ அதை செய்கிறீர்கள். இப்போது நீங்கள் இங்கே இல்லை இங்கே வைக்க வேண்டும் என்றால் வைக்க முடியும் அல்லவா. அதேபோல மைன்ட் கண்ட்ரோல், எதை விரும்புகிறீர்களோ அதை மனம் நினைக்க வேண்டும். இன்று மனதின் ரூலிங் பவர், கன்ட்ரோலிங் பவர் எந்த அளவு இருந்தது? என தினசரி இரவில் ரிசல்டைப் பாருங்கள். இப்போது வீணானவைகளை சீக்கிரம் சீக்கிரமாக முடிக்க வேண்டும், இப்போது சக்திசாலிகளாகி வாயுமண்டலத்தில் சாமர்த்தியத்தின் சக்தியை பரப்புங்கள். பாப்தாதா அவர்கள் குழந்தைகளின் துன்ப, வேதனைகளின் புகார்களைக் கேட்டு குழந்தைகள் மூலமாக இப்போது சீக்கிரம் முடித்து வைக்க விரும்புகிறார். கேட்டீர்களா, எல்லோரும் முயற்சி செய்கிறீர்கள் ஆனால் இப்போது தீவிரம் என்பதை சேருங்கள். செய்தேயாக வேண்டும் செய்வோம், பார்ப்போம் ... என்ற போம் போம் செயலுக்கு உதவாது. 18.01.2012.

### ஆதிகாலத்தில் இருந்து திரும்பப் போகும்வரை

எல்லோரும் கவனம் வைத்திருக்கிறீர்கள் என்பதை பாப்தாதா பார்த்தார் ஆனால் நியம ரூபத்தில் தினசரி நடவடிக்கைகளை முறைப்படுத்துங்கள். இடையிடையே இந்த தனது சுயநிலையின் சொரூபத்தில் நிலைத்திருங்கள். எப்படி டிராபிக் கண்ட்ரோல் செய்கிறீர்களோ அதேபோல இந்த சுயநிலையின் நினைவு ஆதிகாலத்தில் இருந்து திரும்பப்போகும் வரை உள்ள பல நிலைகளை நினைவுகூற இடையிடையே நேரத்தை பிக்ஸ் செய்யுங்கள். இதை நடக்கும்போதும் வலம்வரும்போதும் செய்ய முடியும் ஏனெனில் மனதை இருக்கையில் அமர வைக்க வேண்டும். பாப்தாதா அவர்கள் பார்த்ததும், ஏற்கனவே சொல்லி இருப்பதும் என்னவென்றால் எல்லோரும் யோகம் செய்கிறீர்கள் ஆனால் இப்போது அவசியமாக இருப்பது எது? நேரத்தின் நிலைமையைப் பார்த்து இப்போது எரிமலை யோகம் அவசியமாக இருக்கிறது என்று முன்னமேயே சொல்லி இருக்கிறார், அதன் மூலம் இரண்டு காரியங்கள் நடைபெறும். ஒன்று தனது பழைய சமஸ்காரங்கள் அழிந்து போய்விடும், இப்போது சமஸ்காரங்களை அடிக்கிறீர்கள் ஆனால் எரிப்பதில்லை. அடித்து வீழ்த்திய பிறகும் சில சமயங்களில் அது விழித்து எழுந்து விடுகிறது. எப்படி ராவணனை வெறுமனே அடிக்க மட்டும் செய்யாமல் எரிக்கிறார்கள். அதேபோல நீங்களும் தங்களது பழைய சமஸ்காரங்கள் எது இடையிடையே தீவிர முயற்சி செய்வதை குறைத்து விடுகிறதோ, அதற்கு எரிமலையோகம் அவசியமாக இருக்கிறது. ஒன்று தனக்காக இன்னொன்று எரிமலை யோகத்தின் மூலம் லைட் ரூபமாக இருக்கும் காரணத்தால், மைட் ரூபமாக இருக்கும் காரணத்தால் மற்றவர்களுக்கும் தமது கிரணங்களின் மூலமாக உதவி செய்ய முடியும். எனவே இப்போது எல்லோரும் யோகத்தை எரிமலை யோகமாக மாற்றிவிட்டீர்களா? நேரத்தின்படி இப்போது ஆத்மாக்களுக்கு உங்கள் உதவி அவசியமாக இருக்கிறது. மற்றபடி பாப்தாதாவோ அமர்த வேளையில் ஒவ்வொரு குழந்தைக்கும் சினேகம் தருகிறார்.

இன்று பாப்தாதா குழந்தைகளின் ரெக்கார்டை பார்த்துக்கொண்டிருந்தார். எரிமலை யோகத்தின் மீது இன்னும் அதிக கவனம் கொடுங்கள் அதன்மூலம் சமஸ்கார மாற்றங்களுக்கு உதவி கிடைக்கும். 02.02.2012

**நிராகாரி—பரிஸ்தா ரூப டிரில், ஜுவாலாமுகி யோகம் மற்றும் அனுபவத்தின் அத்தாரிட்டி**

"பாப்தாதா அவர்கள் 24 தடவைகள் செய்வதற்கு ஹோம் வொர்க் தந்திருந்தார் (12 முறை நிராகாரி நிலையிலும் 12 முறை பரிஸ்தா நிலையிலும் நிலைத்திருக்கும் பயிற்சி செய்ய வேண்டும் மேலும் ஒரு முறை செய்யும் போது குறைந்த பட்சம் பத்து நிமிடமாவது நிலையாக இருக்க வேண்டும்) அந்த பத்து நிமிடம் சில குழந்தைகளுக்கு சிரமமாக இருக்கிறது. ... எந்த அளவு முடியுமோ அந்த அளவு பழக்கப் படுத்துங்கள் ஏனெனில் நீண்ட காலத்திற்கான வரதானத்தை இப்போது நீங்கள் நடைமுறையில் கொண்டு வர முடியும். ... பத்து நிமிடங்கள் இருந்தால் நல்லது. அப்படிப்பட்ட நேரம் வரும் அப்போது நீங்கள் உங்களுக்காகவும் உலகத்திற்காகவும் கிரணங்களை கொடுக்கும்படி இருக்கும்." அ.பாப்தாதா 31.12.09

நாளுக்குநாள் நேரம் மோசமாகியேத்தீரும். எனவே, அப்படிப்பட்ட நேரத்தை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே ஜுவாலாமுகி யோகம் தேவைப்படுகிறது. ... ஒவ்வொரு குழந்தையும் பரிஸ்தா அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும். அதற்காக ஜுவாலாமுகி யோகம் தேவையாக இருக்கிறது, வீணானவைகள் எதுவும் இருக்கக்கூடாது. லைட் மற்றும் மைட் சொரூப யோகத்தினால் வீணானவைகளை எரியுங்கள். ... எப்போதும் பரிஸ்தா சொரூபத்திலேயே இருக்க வேண்டும், இதைத்தான் தீவிர முயற்சி என்று சொல்லப்படுகிறது. அ.பாப்தாதா 31.12.11

அமிர்தவேளை நினைவில் அமர்கிறீர்கள் ஆனால் நினைவு சொரூபத்தின் அனுபவம் இருக்க வேண்டும். அனுபவ அத்தாரிட்டியின் ஆனந்தம் மிகக் குறைந்த நேரமே ஏற்படுகிறது. ... ஆனால் சொரூபத்தில் நினைவு சொரூபத்தின் அனுபவி ஆக்க வேண்டும், அனுபவத்தில் மூழ்க வைக்க வேண்டும், அதை இப்போது இன்னும் அதிகமாக்க வேண்டும் ஏனெனி ல் அனுபவத்தின் அத்தாரிட்டியே அனைத்திலும் பெரியது. நினைவு சொரூபத்தில் இருப் தையே அனுபவம் என்று சொல்லப்படுகிறது. எனவே சொரூபத்தை நினைவின் அனுபவத்தில் கலக்க வேண்டும். அ.பாப்தாதா 02.02.12

**சங்கமயுகத்தில் முயற்சியே பலனாக இருக்கிறது.**

நிராகாரி—பரிஸ்தா ரூபத்தின் டிரில், ஜுவாலாமுகி யோகத்தின் பயிற்சி, தனது சுயமரியாதையின் நினைவு மேலும் அவைகளில் நிலையாக இருப்பது வெறும் சாதாரண முயற்சி மட்டும் அல்ல ஆனால் அது மிகப்பெரிய பலனாகும். ஏனெனில் இந்த தேகத்தில் இருந்துகொண்டே இந்த தேகத்தை கடந்த நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலையில் இருப்பதானது ஆத்மாவிற்கு பேரமைதியையும், பெருஞ்சக்தியையும் பரமானந்தத்தையும் தரக்கூடியது. அதைப்போலவே ஜுவாலாமுகி யோகமானது ஆத்மாவிடம் பேரமைதியையும், பெருஞ்சக்தியையும் தோற்றுவிக்கிறது, ஒவ்வொரு தருணத்திலும், ஒவ்வொரு பிரச்சினையிலும் ஆத்மாவிற்கு உதவி செய்கிறது. சுயமரியாதையின் நினைவு மேலும் அதில் நிலையாக இருப்பதன் மூலம் ஆத்மாவிற்கு பரமசுகத்தின் அனுபவம் கிடைக்கிறது, அது இந்த சங்கமயுகத்தில் மட்டுமே கிடைக்கக்கூடியது. இந்த கல்ப முழுவதிலும், மூன்று உலகத்திலும்கூட இந்த அனுபவத்தைப் பெற முடியாது. சங்கம யுகத்தில் முயற்சியே பலனாக இருக்கிறது ஏனெனில் முயற்சியினாலேயே பரமானந்தம் கிடைக்கிறது.

**நிராகாரி மற்றும் அவ்யக்த பரிஸ்தா சொரூபத்தை பயிற்சி செய்வதற்கான டிரில்**

பாப்தாதா அவர்கள் எந்த நிராகரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தை டிரில் செய்ய வேண்டும் என்று சொன்னாரோ, அதை வெற்றிகரமாக பயிற்சி செய்ய வேண்டுமென்றால், அதற்கான வழிமுறைகள்

மூலம் நமது வாழ்வில் உண்மையான லாபம் வரவேண்டும் மேலும் நாம் அந்த டிரில்லை பயிற்சி செய்வதில் வெற்றி பெற வேண்டும்.

“நீண்ட கால இந்தப்பயிற்சி நீண்டகால பயனுக்கு ஆதாரமாக இருக்கிறது. … பத்து நிமிடம் முடியவில்லை என்றால் அதற்காக பத்து நிமிடத்தைப் பற்றிய நினைவிலேயே ஐந்து நிமிடங்கள் போய்விட வேண்டாம். ஐந்து நிமிடமாவது செய்யுங்கள் பின்னர் எவ்வளவு அதிகரிக்க முடியுமோ அவ்வளவு அதிகப்படுத்துங்கள்.” அ.பாப்தாதா 31.12.09

**கேள்வி. பாபா அவர்கள் 12 முறை நிராகாரி மற்றும் 12 முறை பரிஸ்தா சொரூபத்தை டிரில் செய்யச் சொல்லியிருந்தார் அதை எப்படி பயிற்சி செய்வது?**
ஒவ்வொரு ஆத்மாவும் அவர்கள் மதுவனத்தில் இருந்தாலும், சென்டரிலோ அல்லது இல்லற விவகாரத்தில் இருந்தாலும், அனைவரும் தமது தினசரி நடவடிக்கைகளுக்குத் தக்கபடி யோசனை செய்து ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு முன்னதாக 5 அல்லது 10 நிமிடங்கள் இந்த டிரில்லைச் செய்யும்போது தமது தினசரி நடவடிக்கைகளுக்குத் தக்கபடி எளிதாக இந்த டிரில்லைச் செய்ய முடியும்.

**நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தின் நிலை மற்றும் அதன் அடையாளங்கள்**

நிராகாரி நிலை மற்றும் பரிஸ்தா நிலை எப்படி இருக்கும், அதன் அடையாளங்கள் யாவை?
நிராகார நிலை சிவபாபாவின் நிலை மற்றும் சாகார பிரம்மா பாபாவின் புருஷார்த்த வாழ்வு நிலை மற்றும் அவரது தற்போதய பரிஸ்தா நிலையைப் பற்றி சிந்திக்கும்போது எளிதாக இந்த நிலைகள் நம்முன்னே தெளிவாகிவிடும் மேலும் எப்போது நிலைகள் தெளிவாகி விடுகிறதோ அப்போது அதனை நமது தினசரி நடவடிக்கைகளுக்குத் தக்கபடி வெற்றிகரமாக பயிற்சி செய்வதோடு அதனை அனுபவம் செய்யவும் முடியும்.

நிராகார நிலை என்றால் சிவபாபாவிற்குச் சமமான நிலை அதாவது எண்ணம் எதுவுமற்ற விதை ரூப நிலை, அதன்மூலம் ஆத்மாவிற்கு ஆழ்ந்த அமைதியும் அளவில்லாத சக்தியும் கிடைக்கிறது, உலகநாடக ஞானத்தை மனதில் கொள்வதன் மூலம் ஆத்மா சாட்சி நிலையில் நிலைத்திருந்து இந்த உலக நாடகத்தைப் பார்க்கும்போது பரமசுகத்தின் அனுபவம் கிடைக்கிறது. நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலை கவலையற்ற நிலை, சூரியனுக்குச் சமமான லைட்–ஹவுஸ் மற்றும் மைட்–ஹவுஸ் நிலை, சுக–துக்கத்திற்கு அப்பாற்பட்ட நிலை, தன்னுடைய–பிறருடைய, நல்ல–கெட்ட முதலிய அனைத்திலிருந்தும் விடுபட்ட நிலை. இந்த நிலையைத்தான் “அங்கே உயிர் இருக்கிறது ஆனால் உணர்வில்லை” அதாவது ஆத்மா உடலில் இருக்கிறது ஆனால் எண்ணம் எதுவும் இல்லாமல் இருக்கிறது என ஒரு மகா புருஷர் சொல்லியிருக்கிறார். இதைத்தான் ஹடயோகத்தில் எண்ணமற்ற சமாதி நிலை என்று வர்ணிக்கப் படுகிறது, ஏனெனில் எண்ணமற்ற சமாதி நிலையில் ஆத்மாவிற்கு பேறாற்றலும் பேரமைதியும் கிடைத்து விடுகிறது. ஹடயோகத்தில் சரியான ஞானமில்லாத காரணத்ததால் சொற்ப காலத்திற்கு இந்த அனுபவம் ஏற்படுகிறது மேலும் காலம் செல்லச் செல்ல குறைந்து கொண்டே போகிறது. ஞான மார்கத்தில் சரியான ஞானம் இருப்பதால் இந்த நிலையும் அனுபவமும் நீண்ட காலத்திற்கு ஏற்படுவதோடு காலம் போகப்போக வளர்ந்துகொண்டே இருக்கிறது ஏனெனில் ஞான மார்கம் வளரும் கலைக்கான மார்கமாக இருக்கிறது.

சிவபாபா நிராகார நிலையின் அடையாளமாக இருக்கிறார். நான் வகுப்பிற்கு சென்று எதை சொல்ல வேண்டும் அல்லது நான் போக வேண்டுமா அல்லது என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் சிவபாபா எப்போதாவது யோசனை செய்கிறாரா என்ன? என்பது சிந்தனை செய்ய வேண்டிய விசயமாக இருக்கிறது. நாடகப்படி தானகவே எல்லா காரியங்களும் அவர் மூலமாக தக்க சமயத்தில் நடைபெறுகிறது. நான் எதையும் யோசனை செய்வதில்லை, நாடகப்படி தக்க சமயத்தில் தானாகவே முரளி நடைபெற்று வருகிறது என்று இது சம்மந்தமாக பாபாவே முரளியில் சொல்லி இருக்கிறார். இதன் காரணமாகவே சிவபாபாவை யோசனையற்றவர் (அசோச்தா) என்று சொல்லப்படுகிறது.

பரிஸ்தா நிலை என்றால் பிரம்மா பாபாவிற்குச் சமமான நிலை அதாவது பிரம்மா பாபா அவர்கள் சாகாரத்தில் இருந்த போதும் எப்போதும் ஞானத்தின் சிந்தனையிலும் உலக நன்மையைப் பற்றியுமே சிந்தனை உடையவராக இருந்தார், ஆனால் தற்போதோ உண்மையான பரிஸ்தா ரூபத்தில் இருந்து வருகிறார் அதாவது அவர் இப்போது ஞானம் மற்றும் உலக நன்மைக்கான சிந்தனையில் இருந்து விடுபட்டு எப்போதும் உலக நன்மையின் காரியத்திலேயே தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார், உலகத்தின் அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்தி கொடுப்பதற்காக, அவர்களுடைய துன்பங்களையும் வேதனைகளையும் களைவதற்காக அவரிடமிருந்து லைட்–மைட் கிரணங்கள் தானாகவே பரவிக்கொண்டிருக்கிறது. எந்தவொரு காரியத்தையும் செய்வதற்கு முன்னதாக அதைக் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கிறது, செய்யும்போது அதை செய்ய முடியாது. காரியம் செய்யும் நேரத்தில் காரியம் செய்வதில் ஈடுபட்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. பிரம்மா பாபா அவர்கள் இந்த சாகாரத்தில் இருந்தபோது சிந்தனை செய்தார், அதற்குரிய நிலையை உருவாக்கினார் ஆனால் இப்போது அவர் பரிஸ்தா ரூபத்தில் எப்போதும் உலக நன்மைக்கான பணியில் இருந்து வருகிறார். பரிஸ்தா நிலை என்றால் வீண் எண்ணங்களில் இருந்து விடுபட்ட தூயநிலை அதாவது எப்போதும் உலகிற்கு நன்மை செய்துகொண்டே இருக்கும் நிலை, உலக நன்மைக்கான எண்ணங்களால் நிறைந்த நிலை.

பரிஸ்தாக்களின் பாதங்கள் பூமியில் படாது என்று சொல்லப்படுகிறது ஏனெனில் அவர்கள் தேகஉணர்வு மற்றும் தேகாபிமானம் இரண்டில் இருந்தும் விலகி இருக்கிறார்கள், எனவே பரிஸ்தாக்கள் எப்போதும் பறந்துகொண்டே இருக்கிறார்கள், பரிஸ்தாக்களுக்கு யாரிடமும் எந்தவிதமாக உறவோ தொடர்போ இருப்பதில்லை அதாவது அவர்கள் எல்லோருக்கும் பொதுவானவராக இருக்கிறார்கள் மேலும் எல்லோரும் அவர்களுடையவர்களாக இருக்கிறார்கள், எனவே பரிஸ்தாக்கள் ஒருபோதும் எங்கும் நிற்பதில்லை, எப்போதும் பறந்துகொண்டே இருக்கிறார்கள், சாகார தேக உணர்வு மேலும் சுமைகளில் இருந்து விலகி இருப்பார்கள், அவர்கள் எதையும் தனக்கு ஆதரவாக பற்றி இருக்க மாட்டார்கள். எப்படி விண்ணில் இருக்கும் பொருட்கள் இருக்கிறதோ அப்படி.

சிவபாபா மற்றும் பிரம்மா பாபாவின் நிலை குறித்து சிந்தனை செய்து அந்த நிலையில் நாம் நிலையாக இருப்பதற்கு எப்படி டிரில் செய்ய வேண்டும் என்பதை முடிவெடுக்க வேண்டும். சிவபாபாவோ எதையும் சிந்திப்பதும் இல்லை யோசிப்பதும் இல்லை, பிரம்மா பாபா சாகாரத்தில் இருந்தபோது ஞானத்தைக் குறித்து சிந்தனை செய்து வந்தார் மேலும் உலக நன்மைக்காகவும் யோசனை செய்து வந்தார். ஆனால் இப்போதோ அவரும் சிந்தனை செய்வது மற்றும் யோசிப்பதில் இருந்து விலகி இருக்கிறார். உலக நன்மைக்கான காரியம் அவர் மூலமாக தானாகவே நடந்து வருகிறது. சிவபாபா மற்றும் பிரம்மாபாபா இருவரும் இணைந்து உலக நன்மைக்கான காரியங்களை செய்து வருகிறார்கள். எனவே சாஸ்திரங்களில் நர–நாராயணனுக்கு புகழ் பாடப்படுகிறது, அவர்கள் எப்போதும் கூடவே இருந்து வந்தார்கள். எனவே பரிஸ்தா சொரூபமுடையவர்கள் எப்போதும் பாப்தாதாவுடன் இருப்பதை அனுபவம் செய்து வருகிறார்கள் அதாவது அவருடன் கூடவே இருக்கிறார்கள்.

நிராகார நிலை என்றால் பரந்தாமத்தில் ஆத்மாக்கள் நாம் சிவபாபாவுடன் இருப்பது, எனினும் உடன் இருப்பதற்கான அனுபவம் எதுவும் கிடைப்பதில்லை, உணர்வு எதுவும் இருப்பதில்லை, அங்கே பலன் எதுவும் கிடைப்பதில்லை. ஆனால் இப்போதைய விஷேசம் என்னவென்றால், எப்போது நாம் தேகத்தில் இருந்து கொண்டு தேகத்தை கடந்த நிராகாரி நிலையில் அதாவது தனது மூல சொரூபத்தில் நிலையாக இருக்கிறோமோ அப்போது நமக்கு பேரமைதியும் பேராற்றலும் கிடைக்கின்றது. ஆத்மா இயல்பில் சத்–சித்–ஆனந்த சொரூபமானது, அதன் அனுபவம் ஏற்படுகிறது.

அதேபோல தேகத்தில் இருந்துகொண்டே பரிஸ்தா நிலை அதாவது சூட்சும வதனத்தில் பரிஸ்தா சொரூப பாப்தாதாவின் கூட இருக்கும் நிலை, அவருக்கு சமமாக உலகிற்கு நன்மை செய்யும் நிலை, அப்படி இருக்கும்போது ஆத்மாவிற்கு பரமானந்தத்தின் அனுபவம் ஏற்படுகிறது, அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஏற்படுகிறது. சொல்லப்போனால் எப்போது ஆத்மா பரிஸ்தா சொரூபத்தில் இருக்கிறதோ அங்கே ஆனந்தம் அல்லது அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தைப் பற்றிய கேள்வியே இருக்காது. இந்த தேகத்தில் இருக்கும்போது மட்டுமே ஆத்மாவிற்கு அனைத்து விதமான அனுபவங்களும் ஏற்படுகிறது. தற்போது, எப்போது இந்த தேகத்தில் இருந்துகொண்டே தேகத்தைக் கடந்த பரிஸ்தா நிலையில் நிலையாக இருக்கிறோமோ அப்போதே நமக்கு ஆனந்தம் அல்லது அதீந்திரிய சுகத்தின் அனுபவம் ஏற்படுகிறது. தற்போதய பரிஸ்தா சொரூபத்தின் அனுபூதி, பரிஸ்தாவாகும்போது கிடைக்கும் அனுபூதியை விட சிறந்தது. எனவே பாப்தாதா எப்போதுமே பிரம்மா பாபாவின் ஜீவன் முக்தி நிலையை அதாவது நிறைந்த – முழுமையான பரிஸ்தா சொரூப நிலையை உதாரணமாகக் காட்டி, நம்மை அந்த நிலையில் நிலைக்கச் செய்து, அதன் அனுவத்தில் இருக்க வைப்பதற்காக ஊக்கம் தருகிறார்.

பரிஸ்தா சொரூபத்திற்காக மரியாதைக்குரிய சகோதரர் தாதா விஸ்வரத்தன் அவர்களுடைய ஒரு விசயம் நினைவிற்கு வருகிறது, அதை அவர் அடிக்கடி எல்லோருக்கும் சொல்லிக்கொண்டே இருந்தார். பிரம்மா பாபாவிற்குச் சமமாக வேண்டும் என்றால் அவ்யக்த பாப்தாதா அவர்கள் வரும்போது அவர்களை கவனமாக உற்று நோக்கினால் பரிஸ்தா நிலை என்றால் என்ன? என்பதை எளிதாக புரிந்து கொள்ள முடியும் என்றும் அப்போதே நாம் பரிஸ்தா சொரூப அவ்யக்த பாபாவை பின்பற்ற முடியும், அதாவது பரிஸ்தாவாக முடியும் என்று தாதா அவர்கள் சொல்லி வந்தார்கள. பாப்தாதா எப்படி பேசுகிறார், எப்படி பார்க்கிறார், எப்படி புன்னகைக்கிறார். ஹாலில் மற்றும் மேடையில் எல்லாம் நடந்தபோதும் அவைகளைப் பார்த்துக் கொண்டேயும் பாபாவின் நிலை எப்படி இருக்கிறது அதாவது பாபா அவர்கள் ஒவ்வொரு காட்சியையும் சாட்சியாக இருந்து பார்ப்பதோடு அவைகள் எதனாலும் பாதிக்கப்படாமல் இருக்கிறார்.

விதைரூப நிலை, டெட்சைலன்ஸ் நிலை, நிராகாரி நிலை எல்லாம் ஒரே நிலையின் வெவ்வேறு பெயர்களாக இருக்கின்றன. அதனை ஹடயோகத்தில் எண்ணமற்ற (நிர்சங்கல்ப) சமாதிநிலை என்று சொல்கிறார்கள். அதைப்போலவே பரிஸ்தா நிலையை ஹடயோகத்தில் விருப்பமற்ற (நிர்விகல்ப) சமாதிநிலை என்று சொல்லப்படுகிறது. பாபா குழந்தைகள் நம்மை எப்போதும் முழுமையாகவும் நிறைவாகவும் அதாவது எப்போதும் அமைதியாகவும், சக்தி சொரூபத்திலும், பரமானந்தத்திலும், பரமசுகத்திலும் இருப்பதை பார்க்க விரும்புகிறார், அந்த சொரூபத்தில் நிலையாக இருப்பதன் மூலமாக உயிரற்ற, உயிருள்ள மற்றும் உணர்வுடைய ஆத்மாக்களுக்கு தானாகவே சேவை நடந்து கொண்டே இருக்கிறது அதாவது நம் மூலமாக மனம் சொல் செயலால் எது நடந்தாலும் மேலும் அவைகளில் இருந்து எந்த அலைகள் (வைப்ரேசன்) பரவினாலும் அவைகள் தாமாகவே சேவை செய்து வருகின்றன.

இந்திரியங்களின் ரசனை, சுபாவ – சமஸ்காரங்கள், தேக சம்பந்தங்களின் கவர்ச்சி முதலியவைகள் ஆத்ம சக்தியை கட்டுப் படுத்தி விடுகின்றன. பரிஸ்தா சொரூபம் இந்த எல்லா பந்தனங்களையும் கடந்து இருக்கிறது. அப்படி அனைத்தையும் கடந்த ஆத்மா ஒரே நேரத்தில் அனேக ஆத்மாக்களுக்கும் அனேக இடங்களிலும் எந்தவித பந்தனமும் இல்லாமல் சேவை செய்ய முடியும், காரியம் செய்ய முடியும். எப்படி நிராகார் சிவபாபாவும், அவ்யக்த பரிஸ்தா பிரம்மா பாபாவும் செய்கிறார்களோ அதுபோல. நிராகாரி சொரூபம் மற்றும் பரிஸ்தா சொரூபமானது சர்வ சக்திகளாலும் நிறைந்த தடைகள் எதுவும் வரமுடியாத நிலையாக இருக்கிறது. தேகத்தில் இருந்துகொண்டே இந்த நிலையில் இருந்து இந்த சேவையைச் செய்ய வேண்டும். பாபா அவர்கள் நம்மை நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தில் நிலையாக இருக்க வேண்டும் என்பதற்காக பயிற்சி தந்திருக்கிறார்கள் மற்றபடி அந்த நிலையை நினைவில் கொள்வதற்காக இல்லை என்பதை சற்றே சிந்தித்துப் பாருங்கள். நினைவு செய்வது என்பது முதல்படி, பாபா இப்போது குழந்தைகள் நம்மை முடிவு நிலையில் அதாவது பாபாவிற்குச் சமமான நிலையில் பார்க்க விரும்புகிறார் ஏனெனில் நேரமானது இப்போது நிறைவை நோக்கி சென்று

கொண்டிருக்கிறது. எனவே நினைவிற்கும் நிலைக்கும் உள்ள வேறுபாட்டையும் கூட நாம் புரிந்து கொள்ள வேண்டும். நினைவு செய்வது என்பது முயற்சியாக இருக்கிறது, அந்த நிலையில் நிலைத்து இருப்பது நமது இலக்காக இருக்கிறது. சரியான அனுபூதி, நிலையில் இருப்பதாலேயே கிடைக்கிறது, நினைவில் அதை பெறவேண்டும் என்ற ஈர்ப்பு மட்டுமே இருக்கிறது.

நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபமானது எல்லா குணங்களாலும் சக்திகளாலும் நிறைந்த முழுமையான சூரியனுக்குச் சமமான லைட்–ஹவுஸ், மைட்–ஹவுஸ் நிலையாக இருக்கிறது. எனவே நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தில் நிலைத்த ஆத்மா ஒரே நேரத்தில் அனேக இடங்களில் காரியங்களைச் செய்ய முடியும். எனவேதான் பாப்தாதா அவர்கள் ஒருவராக இருந்தபோதும் ஒரே நேரத்தில் அனேக குழந்தைகளுக்கு கூடவே இருக்கும் அனுபவத்தைத் தருகிறார்கள், அவர்களுக்கு உதவிபுரியும் அனுபவத்தைத் தருகிறார்கள், அனேக பக்தர்களின் மன ஆசைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். அனேக குழந்தைகளும் பக்தர்களும் அதை அனுபவம் செய்து வருகிறார்கள்.

**கேள்வி. நான் நிராகார ஆத்மாவாக இருக்கிறேன், நிராகார சிவபாபாவின் சக்திரூப கிரணங்கள் என்மீது விழுகிறது, அவரது குடைநிழல் என்னை சூழ்ந்திருக்கிறது – என இப்படி நினைவு செய்வது அல்லது இந்த அனுபூதியை மனதில் கற்பனை செய்வது நிராகார நிலையா? அதேபோல பாப்தாதாவின் கரங்கள் எனது தலையின் மீது இருக்கிறது, அவரது கரத்தில் இருந்து எனக்கு சக்திகள் … கிடைத்துக்கொண்டிருக்கிறது என மனதில் கற்பனை செய்வது பரிஸ்தா நிலையா?**

இல்லை, நிராகார நிலை என்பது எண்ணங்களையும் கடந்த எண்ணமில்லாத அதாவது விதைரூப நிலையாக இருக்கிறது, அதில் எந்தவிதமான விருப்பத்தைப் பற்றிய கேள்வியே இல்லை மேலும் பரிஸ்தா சொரூபம் பாப்தாதாவிற்குச் சமமான எல்லாம் நிறைந்த முழுமையான வள்ளல்–வரமளிக்கும் சொரூபம், எனவே அதிலும் எந்தவிதமான வேண்டலுக்கும் அல்லது பெறுவதற்குமான கேள்வியே எழுவதில்லை. இரண்டு நிலைகளுமே மாஸ்டர் சர்வசக்திவான், மாஸ்டர் அறிவு நிறைந்த, வள்ளல்–வரவள்ளலின் நிலையாக இருக்கிறது. எதுவரை பெறவேண்டும் என்ற இச்சை இருக்கிறதோ அதுவரை வள்ளல்–வரவள்ளலாக ஆகவே முடியாது. பாபா அவர்கள் குழந்தைகளை தனக்கு சமமாக, அனைத்தும் நிறைந்த முழுமைபெற்றவராக ஆக்குவதற்காக இந்தப் பயிற்சியைச் செய்யச் சொல்லியிருக்கிறார். நாம் பாபாவிடம் இருந்து பெற்றுக்கொண்டிருக்கிறோம் அவைகளை மற்ற ஆத்மாக்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்ற இந்த நிலையானது பிராமணனுடையதாக இருக்கிறது, அது பரிஸ்தா நிலையோ அல்லது நிராகாரி நிலையோ அல்ல. நினைப்பது மற்றும் மனதில் கற்பனை செய்வதெல்லாம் நிலையாகாது. நிலையில் அதன் குணங்கள் தானாகவே அனுபவமாகும். எப்போது நாம் நிராகாரி அல்லது பரிஸ்தா நிலையில் இருக்கிறோமோ அப்போது நாம் எல்லாம் நிறைந்தவராக, முழுமைபெற்றவராக, வள்ளலாக, வரமளிப்பவராக, விதியை மாற்றி அமைப்பவராக எல்லாம் உணர்வோம், மற்ற நேரங்களில் எல்லாம் பிராமணனாக அதாவது பாபாவிடம் இருந்து பெற்று மற்றவர்களுக்கு கொடுத்து வருகிறோம், அந்த அனுபூதி இருக்கும். இந்த இரண்டு நிலைகளுமே ஒன்றுக்கொன்று உதவி செய்யக்கூடியதாக அதாவது ஈடு செய்வதாக இருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியமாகும்.

இந்த இரண்டு நிலைகளையும் வெற்றிகரமாக பயிற்சி செய்து அனுபவம் பெறுவதற்காக எந்த அளவு நிராகார் சிவபாபா மற்றும் பரிஸ்தா சொரூப பிரம்மா பாபாவிடம் அன்பு இருக்கிறதோ, சம்பந்தம் நெருக்கமாக உள்ளதோ, அவர்களைப் பற்றிய சரியான ஞானம் இருக்கிறதோ அந்த அளவு அனுபூதி ஏற்படும். சிவபாபாவின் மீது அன்பு மற்றும் அவரது நெருக்கத்தின் மூலமாக நாம் நம்மை எப்போதும் அவருக்குச் சமமான மாஸ்டர் விதைரூபம், மாஸ்டர் சர்வ சக்திவான், மாஸ்டர் ஞானக்கடல், சதா சாட்சியாக இருப்பது முதலியவைகளை அனுபவம் செய்யலாம். பிரம்மா பாபாவிடம் காட்டும் அன்பு மற்றும் நெருக்கத்தின் காரணமாக நாம் அவருக்குச் சமமாக

முயற்சி செய்து பரிஸ்தாவாகி அவரோடு உலக நன்மை செய்யும் சேவையில் இருக்கலாம், அவருக்குச் சமமாக மகாதானி, வரதானி யாகி உலக நன்மை செய்யும் சேவை செய்யலாம், அவருக்குச் சமமான ஜீவன்முக்தி நிலையின் அனுபவத்தில் இருக்கலாம். துன்பத்தோடும் அமைதியிழந்தும் இருக்கும் ஆத்மாக்களின் துன்பத்தையும் வேதனையையும் உணர்ந்து, அவற்றின் நிவாரணத்திற்கான சரியான முயற்சியை செய்யலாம்.

**கேள்வி: வெளியில் எந்த பாட்டு ஒலிக்கிறதோ, அதை கேட்கும்போது அல்லது ஹெட்போன் மூலம் கேட்கும்போது அல்லது வேறு ஏதாவது ஒன்றை கேடகும்போது அல்லது பார்க்கும்போது நாம் நிராகாரி அல்லது பரிஸ்தா நிலையின் அனுபவத்தில் இருக்கிறோமா, அந்த நேரத்தில் நாம் நிராகாரி அல்லது பரிஸ்தா நிலையை அனுபவம் செய்ய முடியுமா?**

இல்லை, ஏனெனில் நிராகாரி நிலையில் நிலைத்த ஆத்மாவோ கேட்பதையும் பார்ப்பதையும் கடந்து இருக்கும் மேலும் பரிஸ்தாவிற்கு இவைகளை பார்க்கவோ கேட்கவோ அவசியமே இல்லை, ஏனெனில் அவர்கள் எப்போதும் நிறைவாகவும், முழுமையாகவும் இருக்கிறார்கள் மேலும் அவர்கள் எப்போதும் உலக நன்மை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இது சம்மந்தமாக பாபா ஒரு முரளியில் சொல்லியதாவது – முரளி கேட்பதுகூட யோகமாகாது, அது நீங்கள் செல்வம் சேர்ப்பதாகும், யோகத்திலோ கேட்பது – பாப்பது எல்லாம் நின்றுபோய்விடுகிறது.

எதுவரை நமது புத்தி பார்ப்பதில் – கேட்பதில் இருக்கிறதோ அதுவரை நமக்கு நிராகாரி நிலை ஏற்பட முடியாது அதாவது எதுவரை ஸ்தூல இந்திரியங்கள் மூலமாக ஏதேனும் இரசனை உள்ளே வருகிறதோ, அதுவரை அந்த நிலை நிராகாரி நிலையும் இல்லை, பரிஸ்தா நிலையும் இல்லை. நிராகாரி நிலை மற்றும் பரிஸ்தா நிலையின் அனுபூதி ஸ்தூல இந்திரிய இரசனைகளின் அனுபூதியைக் கடந்ததாக இருக்கிறது.

இது சம்மந்தமாக நாம் சிந்திக்க வேண்டியது என்னவென்றால் எதுவரை ஸ்தூல இந்திரியங்கள் மூலமாக சுகத்தின் ஈர்ப்பு உள்ளே வருகிறதோ அதுவரை உலக நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்படி வெளியே வரமுடியும் ஏனெனில் எதுவரை நமக்கு நன்மை நடக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறதோ, நமக்குள் வெறுமை இருக்கிறதோ, நம்மிடம் இருந்து உலகிற்கு நன்மை விளைய வேண்டும் என்ற எண்ணம் வெளிவருவதில்லையோ அதுவரை நமது நிலை எப்படி பரிஸ்தாவாக ஆகமுடியும், ஏனெனில் பரிஸ்தாக்களின் நேரம், எண்ணம், சக்தி முதலிய எல்லாம் எப்போதும் உலக நன்மைக்காகவே இருந்து வருகிறது.

பிரம்மா பாபாவின் சாகார புருஷார்த்தி வாழ்வைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அவர் தனது முயற்சிக்காக ஏதாவது ஸ்தூல வழிகளை ஆதாரமாகக் கொண்டிருந்தாரா என்ன? அவர் எப்போதும் தேகம் மற்றும் தேகஉலகின் சிந்தனையில் இருந்து விலகி ஞானத்தின் சிந்தனையிலும், உலக நன்மைக்கான சிந்தனையிலும் மூழ்கி இருந்தார். எனவே அவர் சாகார தேகத்தில் இருந்தபோதும் தேகத்தைக் கடந்த பரிஸ்தா நிலையில் இருந்தார், அதோடு மற்ற ஆத்மாக்கள் அவருடைய சம்பந்தம் – தொடர்பில் வந்தபோது, அவர்களுக்கும் அதை அனுபவம் செய்ய வைத்தார். இப்போதோ அவர் உண்மையாகவே பரிஸ்தா ரூபத்தில் இருந்து வருகிறார். எனவே இப்போது அவர் ஞான சிந்தனையில் இருந்தும் விலகி இருந்து, எப்போதும் உலக நன்மையை கருத்தில் கொண்டு அனைத்து ஆத்மாக்களுக்கும் அதிலும் விசேசமாக ஒவ்வொரு பிராமண குடும்ப ஆத்மாவிற்கும் மற்றும் அட்வான்ஸ் பார்ட்டியில் உள்ள ஆத்மாக்களுக்கும் விசேசமாக சக்திகளை அளிப்பதற்காக அவர் பறந்துகொண்டே இருக்கிறார். ஏனெனில் பரிஸ்தாக்கள் பூமியின் கவர்ச்சியில் இருந்து விடுபட்டு எப்போதும் பறக்கும் கலையில் இருந்து வருகிறார்கள். அவர்கள் எங்கும் நிற்பதே இல்லை மேலும் எங்கும் நிற்பதற்கான அவசியமும் அவர்களிடம் இருப்பதில்லை.

நான் அமிர்தவேளையில் விசேசமாக குழந்தைகளுக்கு சக்திகளைத் தருகிறேன் என்று பாபா சொல்கிறார். உலகின் எந்த மூலையிலாவது அமிர்தவேளை நடைபெறாத மேலும் அங்கே குழந்தைகள் பாபாவை நினைவு செய்யாத நேரம் என்ற ஒன்று ஏதாவது இருக்கிறதா என்று இப்போது கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். இந்த உண்மையின் மீது சிந்தனை செய்தீர்கள் என்றால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும் மேலும் பாபா எப்படி ஒவ்வொரு கணமும் உலக நன்மைக்காக பறந்துகொண்டே இருக்கிறார் என்பதை உணரவும் முடியும். ஒருபோதும் ஒரு நொடி கூட நிற்பதும் இல்லை மேலும் நிற்கவும் முடியாது.

எதுவரை ஸ்தூல இந்திரியங்களின் மூலம் சுகம் உள்ளே வருகிறதோ, அதுவரை இந்த இரண்டு நிலைகளின் அனுபவம் ஏற்படமுடியாது அதாவது நம்முடைய நிலை அந்த நிலைகளாக இல்லை. நிராகாரி நிலையின் அனுபூதி மற்றும் நிலையைப் பார்த்தோமென்றால் எப்போது பாப்தாதா அவர்கள் குல்ஜார் தாதியின் உடலில் வருகிறார்களோ மேலும் திருஷ்டி தருகிறார்களோ, அதன்மூலம் நாம் இந்த சாகார தேகம் மற்றும் சூட்சும தேகம் இரண்டில் இருந்தும் விடுபட்டு விதைரூப நிலையில் நம்மை நாம் அனுபவம் செய்கிறோம், அதுவே சாகார தேகத்தில் இருந்துகொண்டே நிராகாரி நிலையை அனுபவம் செய்வதன் உண்மையான அனுபவமாகும். அந்த நேரத்தில் பாடலும் ஒலிப்பதில்லை.

அதேபோல எப்போது மதிப்பிற்குரிய ஜானகி தாதி அவர்கள் யோகம் செய்ய வைக்கிறார்களோ மேலும் யோகத்திற்குப் பிறகு திருஷ்டி தருகிறார்களோ அப்போது நாம் அந்த நிலையின் அனுபவம் பெறுகிறோம். அதேபோல நமது யோகத்தின் நிலை நன்றாக இருக்கும் பட்சத்தில் அவ்வப்போது இப்படிப்பட்ட அனுபவம் கிடைக்கிறது.

எதுவரை ஸ்தூல இந்திரியங்களின் சுகம் நமக்குள் வருகிறதோ அல்லது ஏதாவது கொடுக்கல் வாங்கலில் ஆசை இருக்கிறதோ, அதுவரை இந்த நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலையின் அனுபவம் ஏற்பட முடியாது அதாவது நமது இந்த டிரில் சரியானதாக இல்லை என்று அர்த்தம். நாம் சிவபாபாவிடம் இருந்தோ அல்லது பரிஸ்தா ரூபதாரி பாப்தாதாவிடம் இருந்தோ கூட பெற வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருக்கலாம். நீங்கள் உங்கள் நிலையை ஆசை என்றால் என்னவென்று அறியாதபடி செய்ய வேண்டும் என பாபா அவர்கள் அனேக முறை சொல்லி இருக்கிறார். பாபாவிடம் இருந்தும் எதையும் கேட்கக்கூடாது ஏனெனில் அவர் வள்ளலாக இருக்கிறார் மேலும் அவர் நமக்கு அனைத்தையும் தந்துவிட்டார் மேலும் அவர் தாமாகவே தரக்கூடியவர் நாம் அவைகளைக் கண்டு அதனை அனுபவம் செய்ய வேண்டும். பாபாவிடம் இருந்து ஒருக்கால் கேட்டுக்கொண்டிருந்தீர்கள் என்றால் பாபாவையும் மனிதனாக்கி விட்டீர்கள் என்று அர்த்தம், ஏனெனில் கேட்டுக் கொடுப்பவன் மனிதன் அல்லவா, நானோ வள்ளலாக இருக்கிறேன், கேட்காமலேயே எல்லாவற்றையும் கொடுத்து விடுகிறேன், கேட்பதற்கான அவசியமே இல்லை. இந்த தேகத்தில் இருக்கும்போதே அடையும் நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலையானது வள்ளல் – வரவள்ளலின் நிலையாக இருக்கிறது.

நினைவும் நிலையும் ஒன்றல்ல என்பதே இங்கே விளங்கிக்கொள்ள வேண்டிய கருத்து, இரண்டிற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. நினைவு என்பது முயற்சியாக இருக்கிறது, அதேவேளை நிலை என்பது இலக்காக இருக்கிறது. நிலையில் அனுபூதி கலந்திருக்கிறது அதாவது தானே ஏற்படுகிறது. சரி யாராவது புரிந்து கொண்டார்கள் என்று வைத்துக் கொள்வோம் அதாவது மேற்சொன்ன வழிகளைக் கையாண்டு இந்த அனுபவங்கள் கிடைக்கிறது அல்லது கிடைக்க முடியும் என்றால் அது சிந்திக்க வேண்டிய விசயமாக இருக்கிறது. சரி ஒருவர் புரிந்து கொள்ளவில்லை அல்லது அப்படி நடக்க முடியாது என்றால் அது எப்படி சாத்தியம், அதையும் சிந்திக்க வேண்டியது மிக அவசியமாகும்.

**கேள்வி: அமைதியில் நிலையாக நிலைத்திருந்து தனது ஆன்மீக சொரூபத்தை அதாவது புள்ளி வடிவத்தை தியானம் செய்வது அல்லது பரிஸ்தா ரூபத்தை தியானம் செய்வது அல்லது எந்த நிலை பாபா பயிற்சி செய்ய சொன்னாரோ அதை தியானம் செய்வது என்பது சரியான பயிற்சியா?**

இல்லை, உண்மையில் பாபா அவர்கள் எந்த டிரில் சொல்லியிருந்தாரோ, அதற்காக இவைகள் முயற்சி மட்டுமே ஆனால் அது நிலை அல்ல. பாபா அவர்கள் நிராகாரி நிலை மற்றும் பரிஸ்தா நிலைக்காக 10—10 நிமிடங்கள் அதன் நினைவு அல்லது தியானம் செய்வதற்காகச் சொல்லவில்லை ஆனால் அந்த நிலையில் நிலையாக இருப்பதற்காகச் சொன்னார். இந்த உண்மையைப் புரிந்து கொள்வதற்காக ஹடயோகத்தின் இரண்டு வார்த்தைகள் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. அஷ்டாங்க யோகம் எனப்படும் ஹடயோகத்தில் இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் மற்றும் சமாதி என்று விவரிக்கப் பட்டுள்ளது. அதன்படி ஏழாவது நிலை தியானமாக இருக்கிறது அதன்பிறகு வருவது சமாதி. பாபா அவர்கள் சொன்ன நிலையானது சமாதி நிலை, தியானம் என்பது அந்த நிலையை எட்டுவதற்கான முயற்சி மட்டுமே. சமாதி என்றால் அந்த நிலையில் நிலையாக இருந்து, அதன் குணங்களின் அனுபவத்தில் மூழ்கிப்போவதே உண்மையான நிலையாக இருக்கிறது.

**கேள்வி: இப்போது நாம் இந்த நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலையின் பயிற்சியை முழுநாளில் 12—12 முறை எப்படி செய்யவது?**

நாம் இந்த நிலையை பயிற்சி செய்வதற்காக எப்போதும் விசேசமான எண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டும் அதாவது எப்போது நமது டிராபிக் கண்ட்ரோல் பாடல் ஒலிக்கிறதோ அப்போது அந்த நேரத்தில் நாம் விசேச கவனம் கொடுத்து இந்த பயிற்சியை அதிகப்படுத்த வேண்டும், ஏனெனில் எதுவரை நமது புத்தி, எந்த பாடல் ஒலிக்கிறதோ, அதைக் கேட்பதில், அதன் வார்த்தைகளில் இருக்கிறதோ, அதுவரை நாம் சரியானபடி நிராகாரி மற்றும் பரிஸ்தா ரூப நிலையில் இருப்பதில்லை. அந்த பாடல் நமக்கு இந்த பயிற்சிக்கான நினைவூட்டலாக இருக்கிறது, அதைக் கேட்டு தனது தினசரி நடவடிக்கைகள், இடம், நேரம் ஆகியவைகளைப் கருத்தில்கொண்டு இந்த நிலைகளை பயிற்சி செய்வதற்காக விசேச முயற்சி செய்ய வேண்டும் ஏனெனில் இடத்தையும் நேரத்தையும் பார்த்து நாம் பாடலுக்குப்பிறகு அந்த இடத்தில் நாம் 10 நிமிடம் வரை நிற்கவோ அல்லது அமரவோ முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும் பிறகு பயிற்சி செய்ய வேண்டும். இருந்தும் பாடல் ஒலிக்கும்போது, அந்த நேரம் நினைவு கொள்வது, டிராபிக் கண்ட்ரோல் செய்ய சரியான எண்ணத்தை எழுப்புவது, அதைபயிற்சி செய்வது ஆகியவை நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூப பயிற்சியில் வெற்றி அவசியம் கிடைக்கச் செய்யும்.

இந்த நிராகார மற்றும் பரிஸ்தா நிலையை வெற்றிகரமாக பயிற்சி செய்வதற்கும், மனம்விரும்பிய வெற்றிறை அடைவதற்கும் சாகார பிரம்மா பாபா மற்றும் அவ்யக்த பாப்தாதா அவர்களால் அவ்வப்போது உச்சரிக்கப்பட்ட மகாவாக்கியங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"இதுவே சத்தமற்ற ஜபம். வாயைத்திறந்து எதையும் சொல்லக்கூடாது. பாடல்கூட ஸ்தூலமானதாக இருக்கிறது. குழந்தைகள் பாபாவை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். இல்லை என்றால் பாட்டு முதலியவைகள் நினைவிற்கு வந்துகொண்டே இருக்கும். நீங்களோ சப்தத்தை கடந்து செல்ல வேண்டும். மன்மனாபவ என்பது மட்டுமே பாபாவின் டைரக்சன். பாட்டு பாடுங்கள், சத்தம் போடுங்கள் என்று பாபா சொல்வதேயில்லை. எனது புகழைப் பாடுவதற்கும் அவசியமே இல்லை".சா.பாபா 11.11.05

நான் சிவபாபாவை மட்டுமே நினைவு செய்தேன் என்று சொல்கிறார்கள், ஆனால் உண்மையில் சிவபாபாவின் நினைவு மட்டுமே இருந்ததா? ஆழ்ந்த அமைதியில் இருப்பதன் மூலம் இந்த உலகமும் மறந்து விடுகிறது. நான் சிவபாபாவின் நினைவிலேயே இருந்தேன் என தன்னை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். நினைவில் இருக்கும்போது தேகத்தின் எல்லா தர்மங்களும் மறந்து போக வேண்டும். நம்மை சிவபாபா கவர்ந்து இழுத்து முழு உலகையும் மறக்கச் செய்கிறார். ... தம்மை எல்லாம் அறிந்தவராகக் கருதி ஏமாற்றிக் கொள்ள வேண்டாம்.

சா.பாபா 7.5.04

“அகந்தையற்றவராக ஆவதே பரிஸ்தாவாவதற்கோ அல்லது நிராகாரி கர்மாதீத் நிலையை எட்டுவதற்தோ விசேச சாதனமாக இருக்கிறது. அகந்தையில்லாதவரே நிராகாரி ஆகமுடியும். எனவேதான் பாபா அவர்கள் பிரம்மா மூலமாக கொடுத்த கடைசி மந்திரத்தில் நிராகாரியோடு நிர்அகங்காரி என்பதையும் சொன்னார். (நிராகாரி நிலையில் தேகம் மற்றும் தேகஉலகம் மறந்திருக்கும்) அ.பாப்தாதா 15.12.02

பாப்தாதா அவர்கள் ஒருநொடியில் அசரீரி பவ என்ற பயிற்சியை பார்க்க விரும்புகிறார். கடைசியில் பாஸாக வேண்டும் என்றால் இந்த பயிற்சி மிகவும் உபயோகமாக இருக்கும். எனவேதான் இப்போது இத்தனை பெரிய கூட்டத்தில் அமர்ந்திருக்கும்போது ஒரு நொடியில் தேக உணர்வைக் கடந்த நிலையில் நிலைத்து விடுங்கள். எந்தக் கவர்ச்சியும் கவர்ந்து இழுக்கக் கூடாது. அ.பாப்தாதா 30.11.15

தான் ஒரு ஆத்மா என்பது எல்லோருக்கும் தெரியும் ஆனால் ஆத்மா நான் எப்படிப்பட்ட ஆத்மாவாக இருக்கிறேன்? நான் செய்ய வைக்கக்கூடிய ஆத்மா, இந்த கர்மேந்திரியங்கள் செய்யக்கூடியவைகள், நான் செய்ய வைக்கக்கூடியவன் என்ற சுயமரியாதை காரியங்கள் செய்யும்போது நினைவு ரூபத்தில் இருக்க வேண்டும். ... ஆனால் நான் செய்யவைக்கக் கூடியவன், நான் அதிகாரி – என்ற இந்த இருக்கையில் செட்டாகி இருந்தீர்கள் என்றால் ஒவ்வொரு கர்மேந்திரியமும் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். சீட்டில் செட்டாகாதபோது யாரும் யார் சொல்வதையும் கேட்கமாட்டார்கள். அ.பாப்தாதா 18.01.10

பார்க்க வேண்டியது என்னவென்றால் இங்கே பாபா அவர்கள் தேக அபிமானம் என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை ஆனால் தேக பானம் என்ற வார்த்தையை உபயோகப்படுத்தி இருக்கிறார். எப்போது அவ்யக்த பாப்தாதா முரளியின் நடுவே டிரில் செய்ய வைக்கிறார்களோ அப்போது எந்தப் பாடலையும் ஒலிக்கச் செய்வதில்லை, பாபா அமைதியாக திருஷ்டி கொடுக்கிறார், நாம் அந்த நிலையில் மனம் ஒன்றி இருக்கிறோம், அந்த நேரத்தில் ஆத்மாக்கள் பரம சாந்தி மற்றும் பரம சக்தியை அனுபவம் செய்கிறார்கள்.

பிரம்மா பாபாவை யாரெல்லாம் சாகார வாழ்வில் பார்த்திருந்தார்களோ அல்லது அவரது விசயங்களை கேட்டிருந்தார்களோ அவர்கள் சொல்வது என்னவென்றால் பாபா போகும்போதும் வரும்போதும் தனது நிறைந்த, முழுமையான பரிஸ்தா சொரூபத்தில் ஜீவன் முக்தி நிலையில் இருந்து வந்த போதும் இடையிடையே நிராகாரி சொரூபத்தில் அதாவது தேக செயல்களைக் கடந்து ஆழ்ந்த அமைதியை நோக்கி சென்றுகொண்டிருந்தார்.

## நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூப பயிற்சிக்கான சாதனங்களும் முயற்சியும்

பாபா எந்த பயிற்சியைச் செய்யச் சொல்லி இருந்தாரோ, அதைச் செய்வதற்கான சாதனங்கள் மற்றும் சாதனைகள் யாவை அதாவது அதற்குரிய முயற்சிகள் எவை?

### சாதனங்கள்

நம்பிக்கை– அ) இது வெறும் முயற்சி மட்டுமல்ல, பிராப்தியாகவும் இருக்கிறது என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும் அதாவது இதில் பரமானந்தத்தின் அனுபவம் கலந்திருக்கிறது அதாவது ஆத்மாவிற்கு பரமானந்தத்தின் அனுபவம் கிடைக்கிறது. 2. இந்த முயற்சி தற்போதய நேரப்படி மிகவும் அவசியமாக இருக்கிறது ஏனெனில் நாலாபுறமும் துக்க–அசாந்தியின் சூழ்நிலையே காணப்படுகிறது. 3. வருங்காலங்களில் இந்தப் பயிற்சி நம்மைக் காக்கும் கருவியாக விளங்குவதோடு எதிர்கால பிராப்திக்கு ஆதாரமாகவும் இருக்கிறது. 4. பாபா கொடுக்கின்ற ஞானத்தின்மீது நம்பிக்கை அதாவது ஆத்மா, பரமாத்மா, டிராமா மற்றும் ஈஸ்வரிய குடும்பம் முதலிய விசயங்களின் மீது முழு நம்பிக்கை.

ஆ) நம்பிக்கை உடையோருக்கு வெற்றி கிட்டுகிறது என்பது பாடல். இந்தப் பயிற்சிக்காக நாம் எவ்வளவு நேரத்தை செலவழிக்கிறோமோ அதன்மூலம் எந்தச் செயலும் நின்று விடவோ,

கெட்டுப்போகவோ முடியாது என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். பதிலாக இந்த நிலையை சிறப்பாக பயிற்சி செய்வதன் மூலம் நமது எல்லாச் செயல்களும் மிகச் சிறப்பாக இருப்பதோடு வெற்றிகரமாக குறிப்பிட்ட நேரத்தில் நிறைவும் பெறும். ஏனெனில் இது சர்வசக்திவான் ஞானக்கடல் பரமாத்மாவின் ஸ்ரீமத்தாகவும் அதுவே தற்போதய காலத்தின் அழைப்பாகவும் இருக்கிறது. கட்டளையை மதித்து நடப்பவர்களுக்கு கட்டளை கொடுப்பவரின் உதவி தானகவே கிடைக்கிறது. இதில்தான் நமக்கும் உலகிற்கும் நன்மை அடங்கியிருக்கிறது.

இ) நிராகார் மற்றும் பரிஸ்தா சொரூபத்தின் பயிற்சிக்காக இந்த விசயத்தின்மீதும் நம்பிக்கை கொள்வது மிகவும் அவசியமானதாகும் அதாவது இந்தப் பயிற்சியைச் செய்வதால் அதாவது இதற்கு நேரங் கொடுப்பதால் நம்முடைய எந்தவொரு செயலிலும் தடை ஏற்பட முடியாது. மேலும் இந்தப் பயிற்சியைச் செய்வதால் நமது விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூப்தில் நிலைத்திருப்பதன் மூலமாக, பயிற்சி செய்வதன் மூலமாக ஆத்ம சக்தி அதிகரிக்கிறது, அதன்மூலம் ஆத்மாவிற்கு அவசியமான அனைத்தும் தானாகவே நிறைவேறுகிறது. எனவே அதைக்குறித்து எந்தவிதமான சிந்தனையோ அல்லது கவலையோ கொள்ள அவசியமே இல்லை. ஏனவே தான் நம்பிக்கை உடையோருக்கு வெற்றி என்று பாடப்படுகிறது.

சாதனா (முயற்சி)

1. பாப்தாதாவிடம் இருந்து பெற்ற ஞானத்தை சிந்தனை செய்வதோடு அதை சரியானபடி நடைமுறையில் கொண்டுவருவது, 2. அந்த சொரூபம் மற்றும் நிலையை அடிக்கடி நினைவில் கொள்வது, 3. உணவு விசயத்தில் மிகத் தூய்மையாக இருப்பது, 4. கெட்ட சகவாசம் இல்லாமல் இருப்பது, 5. அகநோக்கில் இருப்பதற்கான விசேச முயற்சி அதாவது சாகார பிரம்மா பாபாவிற்குச் சமமாக கேட்டாலும் பார்த்தாலும் கேட்பது–பார்ப்பதிலிருந்து விலகிய நிலையில் நிலையாக இருப்பதற்கான பயிற்சி மேலும் இந்தப் பயிற்சிக்கான முக்கிய முயற்சி –சாகார பாபாவிற்குச் சமமாக தேகத்தில் இருந்தபோதும், தேகத்தைக் கடந்த நிலையில் நிலையாக இருப்பதற்கான பயிற்சி. பிரம்மா பாபா அவர்கள் முதன்முதலில் தான் ஆத்ம சொரூபத்தில் நிலையாக இருப்பதற்காக என்னென்ன பயிற்சிகள் செய்தாரோ, அவைகளே அவரது வெற்றிக்கு மூலாதாரமாக இருந்தது என்று அவ்யக்த பாப்தாதா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பயிற்சிகள் ஒவ்வொரு முயற்சியாளருக்கும் மிகவும் அவசியமானதாகும்.

பாபா மற்றும் தாதாவிற்கு சமமாக நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தை பயிற்சி செய்வதற்கும் மேலும் அந்த நிலையில் நிலையாக இருப்பதற்கும் நாம் பி ர ம்மா பாபாவிற்குச் சமமாக கேட்டாலும் பார்த்தாலும் அவைகளில் இருந்து விலகி இருக்கக்கூடிய பயிற்சி செய்ய வேண்டும். சிவபாபாவோ நிராகாரராகவே இருக்கிறார், அவர் எதைச் சொன்னாலும் அல்லது எதைச் செய்தாலும் அவர் அதற்கு முன்பாகவும் யோசிப்பதில்லை, பின்னரும் யோசிப்பதில்லை, எனவே அவர் யோசனைகளையும் எண்ணங்களையும் கடந்தவராய் எப்போதும் எண்ணமற்ற நிலையில் இருக்கிறார். சிவபாபா அவர்கள் சொன்னபிறகு அல்லது செய்தபிறகு அவைகளை நினைத்துப் பார்ப்பதே இல்லை. டிராமாவின் கடிகார முள் தனது நேரத்தில் வந்துவிடுகிறது அப்போது சிவபாபா மூலமாக காரியங்கள் நிறைவேறுகிறது. நிராகாரி நிலையும் அப்படிப்பட்ட நிலைதான். பாபா நம்மையும் அந்த நிலையை அடைவதற்கான உற்சாகம் தருகிறார், எனினும் ஞானத்தை சரியானபடி தாரணை செய்வதற்காக மனசிந்தனை செய்வதும் மிகவும் அவசியமானது என்று சொல்கிறார். நீங்கள் கடந்த காலத்தைப்பற்றியும் கவலைப்படக்கூடாது, எதிர்காலத்தைப் பற்றியும் கவலைப்படக்கூடாது, நீங்கள் இப்போது பாபாவின் நினைவில் இருந்தீர்கள் என்றால் எதிர்காலம் மிக நன்றாக இருக்கும், அதற்காகவே பாபா அவர்கள் நாடகத்தின் ஞானத்தைத் தந்திருக்கிறார்.

மனிதர்களுடைய துன்பத்திற்கு மூல காரணம் மற்றும் இந்தப் பயிற்சியை நல்லபடியாக செய்யமுடியாமல் போவதற்கு தடையாக இருப்பது எதிர்காலத்தைப் பற்றிய கவலை மேலும் எதிர்காலம் இருளாக இருக்கிறது என நம்புவதால் அதிலிருந்து தோன்றும் சந்தேக

எண்ணங்கள். இந்த தேகம் மற்றும் தேக உலகத்தில் இருந்து விலகிச் செல்வதற்கான பயிற்சி மற்றும் பரமாத்மாவின் நினைவு மூலமாகவே நாம் நமது கடந்த காலங்களில் செய்த தீவினைகளின் பலனாக வரும் கர்மசுமைகளை சகித்துக்கொள்வதற்கான வலிமை கிடைக்கும், அதோடு தற்போதும் எதிர்காலத்திலும் எந்த பாவமும் ஏற்படாது, அதிலிருந்து பாதுகாப்பாக இருப்போம், அந்த நிலையில் இருப்பதன் மூலம் இப்போதே பரமானந்தத்தின் அனுபவத்தில் இருப்போம் அதோடு கடைசி காலத்திலும் பரமாத்மாவின் நினைவு இருக்கும். அதன் மூலமாக சிறந்த செயல்களைச் செய்வதற்கான சக்தி வரும், பிறகு நாம் எப்போது சிறந்த செயல்களைச் செய்கிறோமோ அப்போது எதிர்காலம் நிச்சயம் நன்றாக இருக்கும் ஏனெனில் அனைத்துப் பிராப்திகளுக்கும் ஆதாரமாக இருப்பது நமது செயல்களே. எப்போது தற்காலத்தில் நமது செயல்கள் நன்றாக இருக்கிறதோ அப்போது நமக்கு இருண்ட எதர்காலத்தைப்பற்றிய சந்தேகமோ அல்லது கவலையோ தோன்ற முடியாது. எப்போது நமக்கு சந்தேகம் அல்லது கவலை இல்லையோ அப்போதே நாம் சரியான நேரத்தில் சரியான வழியில் இந்தப் பயிற்சியைச் செய்ய முடியும். அதிகாலையிலேயே சந்தேகம் தோன்றினால் அது நமது முயற்சியில் மிகப் பெரிய தடையை ஏற்படுத்திவிடுகிறது, அதற்கு மூலகாரணம் நமது அறியாமை, அது ஞானக்கடல் பரமாத்மா கொடுத்த சரியான ஞானத்தை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் இருந்து நம்மை அகற்றி விடுகிறது. இப்போது பிரம்மா பாபா பரிஸ்தா ரூபத்தில் இருக்கிறார், உலகிற்கு நன்மையானவற்றை செய்து வருகிறார், அதற்காக அவர் அட்வான்ஸ் பார்ட்டி மற்றும் பிராமண ஆத்மாக்களை பராமரிப்பது, அவர்களுக்கு சக்திகளை வழங்குவது மேலும் விஞ்ஞானிகள் முதலியவர்களுக்கு பிரேரணை கொடுப்பது ஆகியவைகளுக்காக அவர் எண்ணங்களை எழுப்பத்தான் வேண்டும் எனினும் அவரது எந்தவொரு எண்ணமும் வீணாவதில்லை. ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு நொடியும் உலக நன்மைக்காகவே இருந்து வருகிறது அதாவது அவரது நிலை எப்போதும் விருப்பு–வெறுப்பின்றி இருக்கிறது. பிரம்மா பாபாவிற்கும் சிந்தனை செய்வதற்கான அவசியம் எதுவும் இருப்பதில்லை என்று விவேகம் சொல்கிறது, நாடகப்படி சிவபாபாவிற்குச் சமமாக அவர்மூலமாகவும் நேரப்படி எல்லாக் காரியங்களும் தாமாகவே நடைபெற்று வருகின்றன.

நிராகாரி ஆத்மீக சொரூபமானது பரம சாந்தி மற்றும் சர்வ சக்திகள் நிறைந்தது. நிராகாரி நிலையில் நிலையாக இருப்பதன் மூலமாக ஆத்மாவிற்கு தனக்கும் பரம சாந்தி மற்றும் பரம சக்தியின் அனுபவம் ஏற்படுகிறது அதோடு அவரது அருகில் வரக்கூடிய ஆத்மாக்களுக்கும் அவர் மூலமாக அந்த அனுபவங்கள் கிடைக்கிறது. பரிஸ்தா சொரூபம் எல்லோருக்கும் நன்மை செய்யக்கூடிய மேலும் பரமானந்தத்தை தரக்கூடிய நிலையாக இருக்கிறது.

பாபா அவர்கள் 10–10 நிமிடங்கள் 12 முறை நிராகாரி மற்றும் 12 முறை பரிஸ்தா நிலையில் நிலையாக இருப்பதற்கான பயிற்சி செய்ய சொல்லியிருந்தார், அதை உறுதியோடு செய்ய வேண்டும். பாபா அவர்கள் நிராகாரி அல்லது பரிஸ்தா நிலையை நினைப்பதற்காகச் சொல்லவில்லை, அந்த நிலையில் நிலையாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சொன்னார். நிலையில் நிலையாக இருப்பதும், நிலையை நினைவு செய்வதும் வெவ்வேறானது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் மேலும் அதனை புத்தியில் வைத்து பயிற்சி செய்வது மிகவும் அவசியமானது.

பாபா அவர்கள் இந்தப் பயிற்சியை அவ்வப்போது இடைவெளி விட்டு செய்ய சொல்லியிருக்கிறார்கள். அப்படியல்லாமல் 12–12 முறை 10–10 நிமிட கணக்குப்படி ஒரே நேரத்தில் 4 மணி நேரம் அமர்ந்து செய்து விட்டால் இலக்கு முடிந்தது என நினைக்கக்கூடாது. பாபாவின் நோக்கமோ 12–12 முறை அவ்வப்போது இடைவெளி விட்டு இந்தப் பயிற்சியை செய்வதன் மூலமாக அது நிரந்தரமாகிவிடும், ஏனெனில் ஒருமுறை செய்வதன் அனுபவம் நீண்ட நேரம் வரை இருக்கிறது. எனவே அவ்வப்போது இடைவெளிவிட்டு முழு 24 மணி நேரத்திற்குள் செய்ய வேண்டும், அதன்மூலம் நமது அந்த நிலையானது நிரந்தரமாவதோடு கடைசி நேரத்தில் அந்த நிலையிலேயே நாம் நமது தேகத்தை தியாகம் செய்யவும் முடியும்.

சார ரூபத்தில் சொல்வதானால் சாதனம் என்பது சரியான ஞானம், சாதனை அல்லது முயற்சி என்பது அதனை சரியாக சிந்தனை செய்து அதனை வாழ்வில் கடைப்பிடிப்பதோடு இடைவிடாத பயிற்சி செய்ய வேண்டும். நமது முயற்சி தொடர்ச்சியாக இருக்க வேண்டும் அதற்காக பாபா 12–12 முறை செய்யச் சொல்லி இருக்கிறார்.

கேள்வி: பாபா அவர்கள் நமக்கு பரம சத்தியத்தின் ஞானத்தைக் கொடுத்திருக்கிறார், அதற்கு இந்த நிராகாரி நிலை மற்றும் பரிஸ்தா நிலை பயிற்சியில் என்ன மகத்துவம் இருக்கிறது? மேலும் அந்த ஞானத்தைப் பெறுவதால் நமது செயல் எண்ணவாகும் அதாவது நமது முயற்சி எப்படி இருக்கும் மேலும் எப்படி இருக்க வேண்டும்?

பாபா அவர்கள் இந்த உலக நாடகத்தின் உண்மையான ஞானத்தை கொடுத்திருக்கிறார், அதில் எல்லா விதமான ரகசியங்களின் ஞானமும் அடங்கி இருக்கிறது. அந்த ஞானத்தைப் பெற்று நமது செயல்கள் மேம்படுகின்றன அதாவது அந்த ஞானத்தை நல்லபடியாக உணர்ந்து, அதனை நடைமுறையில் கொண்டுவந்து, நமது அந்த ஆத்ம ரூபத்தில் நிலையாக இருக்க வேண்டும். ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருக்கும் ஆத்மா கெட்ட சிந்தனைகள், பயம்–கவலை, துக்கம்–அசாந்தி, பொறாமை–வெறுப்பு, ஆசை–கவர்ச்சி, பெருமை–சிறுமை, சுபம்–அசுபம் ஆகியவைகளின் பயத்திலிருந்து சதா விடுபட்டு இருக்கும் அதாவது அவரிடத்தில் இவை அனைத்தும் இல்லாமல் இருக்கும், எப்போது இந்த எல்லாம் இல்லாமல் இருக்கிறதோ அப்போதே ஆத்மா தனது நிராகாரி ஆத்ம சொரூபத்தில் அல்லது பரிஸ்தா சொரூபத்தில் நிலையாக இருக்க முடியும். உலக நாடகத்தின் உண்மை நிலையைப் பார்த்தோமென்றால் அதில் பயம்–கவலை, துக்கம்–அசாந்தி, பொறாமை–வெறுப்பு , ஆசை–கவர்ச்சி, பெருமை–சிறுமை, முதலிய எந்தவிதமான சிக்கலுக்கும் இடமேயில்லை. இவைகளில் இருந்து விடுபட்ட ஆத்மாவிற்கே எண்ணமற்ற, விருப்பு–வெறுப்பற்ற நிலை ஏற்படும் அதாவது நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபம் ஏற்படும், அதுவே அனைத்து பிராப்திகளுக்கும் ஆதாரமாகவும் அனைத்து முயற்சிக்கும் மூலமாகவும் இருக்கிறது. சாகார சொரூபத்தைவிட உயர்ந்தது பரிஸ்தா சொரூபம் மேலும் பரிஸ்தா சொரூபத்தைவிட உயர்ந்தது நிராகாரி சொரூபம் அதாவது கர்மாதீத நிலை. பரிஸ்தா சொரூபம் மற்றும் நிராகாரி சொரூபம் என்பது எல்லாம் நிறைந்த முழுமையான சொரூபம். அந்த நிலையில் ஆத்மாவிற்கு எந்தவிதத்திலும் பெற வேண்டும் என்ற எண்ணம் எழமுடியாது. எதுவரை பெற வேண்டும் என்ற இச்சை இருக்கிறதோ, அல்லது பெற்று பிறருக்குக் கொடுக்கலாம் என்ற ஆசை இருக்கிறதோ, அது பரமாத்மா அதாவது பாப்தாதாவிடம் இருந்து அன்பையும் சக்தியையும் பெறுவதற்கான ஆசையாக இருந்தாலும் சரி, ஆசையிருக்கும்வரை அவரை நிறைந்த, முழுமையான பரிஸ்தா என்று சொல்ல முடியாது. ஏனெனில் பரிஸ்தா நிலை நிறைந்த நிலை மேலும் நிராகாரி நிலையில் எதையும் பெறவேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. சத்யுகத்தில் தேவதைகளாக இருக்கும்போது, சாகார தேகதாரிகளாக இருக்கிறார்கள், அவர்களுக்குக்கூட யாரிடமிருந்தும் எதையும் பெறவேண்டும் என்ற ஆசையோ, ஈர்ப்போ இருப்பதில்லை. பரிஸ்தாவாக இருப்பவர்கள் எப்போதும் லைட்–ஹவுஸ், மைட்–ஹவுஸ் சொரூபத்தில் நிலையாக இருந்து எல்லோருக்கும் கொடுக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். பரமாத்மா அல்லது பாப்தாதாவிடம் இருந்து சக்தி பெற்று உலகில் உள்ள ஆத்மாக்களுக்கு கொடுப்பவர்கள் பிராமணர்கள் அதாவது முயற்சியாளர்கள், பரிஸ்தா அல்லது நிராகாரி நிலையில் இருப்பவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல, ஏனெனில் நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலை எல்லாம் நிறைந்த முழுமையான நிலையாக இருக்கிறது. யார் எல்லாம் நிறைந்த முழுமையான நிலையில் இருக்கிறார்களோ, அவர்கள் உலகில் துன்பப்படும் ஆத்மாக்களுக்கு கட்டாயம் சேவை செய்வார்கள். கொடுப்பவர்களிடம் ஞானம், குணம், சக்திகள் எல்லாம் தாமே பெருகும்.

கேள்வி: அந்தி சாயும் வேளையில் அதாவது மாலை வேளையில் பரிஸ்தாக்கள் வலம் வருவதாக சொல்கிறார்கள், அந்தப் பரிஸ்தாக்கள் யார்? அவர்கள் உணர்வுள்ள ஆத்மாக்களா, அவர்களால் சுதந்திரமாக சுற்றிவர முடியுமா அல்லது அது வெறும் சொல் மட்டும்தானா? இப்படிச் சொல்லப்படுவதற்கு ஆதாரம் எது அதாவது இந்தப் பரிஸ்தாக்களின் விசயம் எங்கிருந்து உருவானது?

சிவபாபா பிரம்மாவின் உடலில் வந்தபோது பிரம்மா பாபாவின் பரிஸ்தா சொரூபக் காட்சி ஆரம்பமானது மேலும் பிரம்மாபாபா அவர்கள் சாகார உடலில் இருந்தபோதும் அவர் மூலமாக எதிர்கால சொர்க வாழ்வைப்பற்றி, தற்கால முழுமை நிலையைப்பற்றி அனேக விதமான காட்சிகள் கிடைத்துக்கொண்டே இருந்தது. அதேபோல எப்போது தர்மபிதாக்கள் தமது தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக பரகாய பிரவேசம் செய்கிறார்களோ அப்போது அவர்களுடைய பரிஸ்தா ரூபக் காட்சிகள் அனேகருக்குக் கிடைக்கிறது, அதைக் குறித்து அனேக தர்மங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் தர்மத்தைப் படைக்கும் ஆத்மா எந்த உடலில் பிரவேசமாகிறதோ, அவருடைய சூட்சும உருவத்தின் காட்சி அனேகருக்குக் கிடைக்கிறது, அதன்மூலம் அவர்மீது ஆத்மாக்களுக்கு கவர்ச்சி அதிகமாகிறது. தற்போது பிரம்மா பாபா அப்படிப்பட்ட பரிஸ்தா ரூபத்தில் இருந்துகொண்டு ஆத்மாக்கள் நம்மை உலக சேவை செய்ய பிரேரணை கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

பக்தியில் பெரும்பாலும் எல்லா தர்மத்தைச் சேர்ந்த ஆத்மாக்களும் காலையிலும் மாலையிலும் பக்தி செய்து வருகிறார்கள், ஏனெனில் இந்த இரண்டு சந்தியாகாலங்களிலும் ஆத்மாக்களுக்கு மனம் ஒருமுகப்படுவதற்கான சூழ்நிலை நன்றாக உள்ளது. எனவேதான் தர்மங்களை ஸ்தாபிக்க பொறுப்பேற்ற தர்மபிதாக்கள் மற்றும் அவர்கள் பிரவேசமாகும் ஆத்மாக்கள்கூட சந்தியாகாலமான சாயங்கால வேளையில் மற்ற ஆத்மாக்களுக்கு பிரேரணை செய்வதற்கான முயற்சி கட்டாயம் செய்திருப்பார்கள் அப்போது அந்த ஆத்மாக்களுக்கு காட்சிகள் கிடைத்திருக்கும், எனவே அங்கிருந்து இந்தப் பழக்கம் தோன்றியிருக்கக்கூடும். பல்வேறுவிதமான தர்மங்கள் ஸ்தாபிக்கப்பட்டபோது இந்தப் பரிஸ்தாக்கள் தோன்றிய விசயங்கள் வர்ணிக்கப்பட்டுள்ளது. பாபா அவர்கள்கூட இரவும் பகலும் இணையும் வேளையில் அதாவது அமிர்தவேளை மற்றும் சாயங்காலத்தில் குறிப்பாக யோகம் செய்ய வேண்டும் என்ற நியமத்தை உருவாக்கித் தந்திருக்கிறார். நமது சர்வதேச தியானம்கூட மாலைவேளையில் தான் நடைபெறுகிறது. அந்த வேளையில் பயிற்சி செய்வதன்மூலமாக ஆத்மா எளிதாக தேகத்தில் இருந்து விடுபட்டு தனது ஆத்மீக சொரூபத்தில் இருந்து ஆழ்ந்த அமைதியையும் பேறாற்றலையும் அனுபவம் செய்கிறது. அமிர்தவேளையில் ஞானத்தை சிந்தனை செய்யுங்கள், மாலையில் சூட்சும ரூபத்தில் உலகை சுற்றி வந்து உலக அமைதிக்காக மன சேவை செய்யுங்கள் என்றும் பாபா சொல்லியிருக்கிறார்.

சந்தியா காலம் மற்றும் சங்கமிக்கும் இடங்கள் ஆத்மாவிற்கு தேகம் மற்றும் தேக உலகை மறந்து பக்தி செய்ய அல்லது ஞான மார்கத்தில் யோகப்பயிற்சி மற்றும் ஞானசிந்தனை செய்ய அதிகம் உதவி செய்யக்கூடியதாக இருக்கிறது. இரவு–பகலின் சந்திப்பு, பருவ காலங்களின் சந்திப்பு, கல்பங்களின் சந்திப்பு, வருடங்களின் சந்திப்பு, நதிகளின் சங்கமம், ஆறு கடலோடு சந்திக்கும் இடம், மலையும் சமதளமும் சந்திக்கும் இடம் முதலிய பல இடங்களில் அந்த நேரத்தில் ஆத்மாவிற்கு விசேசமாக அமைதி மற்றும் சக்தியின் அனுபவம் கிடைக்கிறது. எனவேதான் பாரதத்தில் அப்படி கூடும் இடங்களுக்கு விசேச மகத்துவம் தரப்படுவதோடு அங்கே விசேசமான தீர்த்த ஸ்தலங்களும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

**கேள்வி : சூட்சும வதனத்தில் பரிஸ்தாக்கள் இருக்கிறார்கள், அப்படி என்றால் ஆத்மாக்கள் எல்லோரும் பரிஸ்தா சொரூபத்தில் சூட்சும வதனத்திற்குப் போவார்களா அல்லது பிரம்மாபாபா மற்றும் சில குறிப்பிட்ட ஆத்மாக்களுக்கு மட்டும்தான் அந்த பார்ட் இருக்கிறதா?**

உண்மையில் பிரம்மா பாபா எப்படி சூட்சும வதனத்தில் பரிஸ்தா ரூபத்தில் இருக்கிறாரோ, அதேபோல எல்லா ஆத்மாக்களும் பரிஸ்தா ரூபத்தில் சூட்சும வதனத்திற்குப் போக வேண்டும், ஏனெனில் சூட்சும வதனத்திற்கு பரிஸ்தா ரூபத்தில் சென்ற பிறகுதான் ஆத்மாக்கள் நிராகாரி ரூபம் பெற்று பரந்தாமத்திற்குச் செல்கிறார்கள். அதாவது ஒவ்வொரு ஆத்மாவும் சூட்சும வதனத்தை பரிஸ்தா ரூபத்தில் கடந்து சென்றே ஆகவேண்டியதாக இருக்கிறது. எனினும் அங்கே சென்று இருக்கும் நேரம் சிலருக்கு ஒரு நொடி நேரமாகவும் சிலருக்கு 40–50 வருடங்களாகவும் இருக்கிறது. எப்படி பிரம்மா பாபா 40–45 ஆண்டுகளாக சூட்சும வதனத்தில் இருந்து வருகிறார். அங்கிருந்து புது உலக ஸ்தாபனையை செய்து வருகிறார். மற்ற சில ஆத்மாக்கள் பரந்தாமம் செல்லும் வழியில் ஒரு நொடியில் அதை கடந்து செல்கிறார்கள்.

சாகாரத்தில் பிராமண வாழ்வில் இருந்துகொண்டே பரிஸ்தா சொரூபத்தை பயிற்சி செய்து, அதே நிலையில் இருந்து செயல்களைச் செய்வதே சூட்சும வதனத்தில் பரிஸ்தா ரூபத்தில் பாகத்தை நடிக்க ஆதாரமாக இருக்கிறது. இரண்டு நிலைகளுக்கும் ஆழமான சம்பந்தம் இருக்கிறது. பிரம்மா பாபா அவர்கள் சாகாரத்தில் முயற்சி செய்து தனது பரிஸ்தா ரூபத்தைக் காட்டினார் அதாவது காரியங்கள் செய்துகொண்டிருந்தபோதும் பரிஸ்தா ரூபத்தில் இருந்து வந்தார், அதன் பலனாகவே அவர் 40 – 45 ஆண்டுகளாக சூட்சும வதனத்தில் பரிஸ்தா ரூபத்தில் இருந்து தனது நடிப்பை நடித்து வருகிறார், புதிய உலகை உருவாக்கும் காரியத்தைச் செய்து வருகிறார்.

**கேள்வி : ஆத்மாமீது உள்ள சுமைகள் யாவை? தனது சுமைகளை பாபாவிடம் கொடுப்பதற்கான வழிவகைகள் யாவை?**

இந்த உலக நாடகத்தில் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் இயற்கையின் ஐந்து தத்துவங்களினால் உருவாக்கப்பட்ட பொருட்கள் மற்றும் செல்வங்களை எந்த அளவிற்கு உபயோகிக்க தேவை உள்ளதோ அந்த அளவிற்கே பயன்படுத்த அதிகாரம் உள்ளது. அதனால் அவரது செயல்திறம் அதிகமாகிறது. ஒருவேளை எந்த ஆத்மாவாவது அவசியத்திற்கும் அதிகமாக இயற்கையின் சாதனங்களை, செல்வங்களை உபயோகப்படுத்தினால் அல்லது அவைகளை தவறாகப் பயன்படுத்தினால் அதன்மூலம் ஆத்மாமீது சுமை ஏறுகிறது. சத்யுகத்தில்கூட இயற்கையின் சாதனங்களை, செல்வங்களை நாம் உபயோகப்படுத்துகிறோம், அதன் மூலமாகவும் ஆத்மா சேர்த்து வைத்திருந்த செல்வத்தின் அளவு அவசியம் குறைந்து போகிறது. ஆனால் அங்கு ஆத்மாமீது சுமை ஏறுவதில்லை ஏனெனில் சங்கம யுகத்தில் ஆத்மா செய்த முயற்சியின் பலனாக கிடைத்த செல்வம் அது, ஆத்மாவிற்கு பாபாவிடம் இருந்து செல்வம் கிடைத்திருக்கிறது மேலும் அங்கே அனைத்தும் அளவின்றி கிடைத்தபோதும் எந்தவொரு ஆத்மாவும் தன் தேவைக்கு அதிகமாக எதையும் உபயோகிப்பதில்லை என்பது சிந்திக்க வேண்டிய விசயமாக இருக்கிறது. துவாபர யுகத்தில் இருந்து எப்போது ஆத்மாக்கள் தேகாபிமானத்திற்கு ஆளாகி, பயம் – கவலை, துக்கம் – அசாந்தி, பொறாமை – வெறுப்பு, பெருமை – சிறுமை சுபம் – அசுபம் ஆகியவைகளின் ஆளுகைக்கு வசமாகி வீண்எண்ணங்களை நினைக்கிறதோ, தீவினைகளைச் செய்கிறதோ அப்போது ஆத்மாவின்மீது சுமை ஏற ஆரம்பிக்கிறது.

எந்த ஆத்மா உண்மையான உள்ளத்தோடு பாபாவை தனது இதயத்தில் வைத்திருக்கிறாரோ அதாவது நினைவு செய்கிறாரோ, அவர் எளிதாக தனது ஆத்மீக சொரூபத்தில் நிலையாக இருக்கிறார், அதுமட்டுமல்லாமல் ஞானம் அனைத்தும் தக்க சமயத்தில் அவரது புத்தியில் வெளி வந்துகொண்டே இருக்கும், அதன்மூலம் அவர் எப்போதும் தனது வாழ்வை இலேசாக உணர்வார். ஏனெனில் ஆத்ம சொரூபம் இலேசானதாகத்தான் இருக்கிறது, அதில் எந்தவிதமான சுமையும் இருப்பதில்லை. அதோடு யதார்த்தமாக ஞானத்தை கடைப்பிடிக்கக்கூடியவர்களுக்கு இந்த உலகம் ஒரு விளையாட்டாக அனுபவம் ஆகும், எனவே அவர்களுடைய வாழ்க்கையில் எந்தவொரு சுமையும் இருப்பதில்லை.

எண்ணமில்லா நிலைமாறா சமாதி அதாவது நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தை சரியாக பயிற்சி செய்வதால் ஆத்மாவிற்கு முக்தி – ஜீவன்முக்தியின் அனுபவம் ஏற்படுகிறது. அதேபோல நிராகாரி நிலையில் நிலையாக இருக்கும் ஆத்மாவிற்கு அமைதியும் சக்தியும் அனுபவம் ஆகிறது, அதன்மூலம் ஆத்மா பயமின்றியும், கவலையின்றியும், எண்ணமற்ற நிலையை அனுபவம் செய்கிறது. சூட்சும பரிஸ்தா ரூபத்தில் பாப்தாதாவின் கூடவே சேவை செய்வதால் ஆத்மா இலேசாக இருப்பதோடு ஆனந்தத்தையும் அனுபவம் செய்கிறது. உலக நாடகத்தை, சரியான ஞானத்தை சரியாகப் புரிந்துகொண்டு சாட்சியாக இருந்து இந்த உலக நாடகத்தை பார்ப்பதோடு டிரஸ்டியாக இருந்து பாகத்தை நடிப்பதால் ஆத்மாவிற்கு பரம சுகத்தின் அனுபவம் கிடைக்கிறது. எனவே ஆத்மா எப்போதும் இலேசாக இருப்பதை அனுபவம் செய்கிறது.

ஆத்ம சொரூபமானது, பயம் – கவலை, துக்கம் – அசாந்தி, பொறாமை – வெறுப்பு, ஆணவம் – அடிமைத்தனம், சுபம் – அசுபம் முதலியவைகளின் பிடியில் இருந்து சதா விலகி இருக்கும் பரமானந்தமயமானது. நாடகத்தின் சரியான ஞானத்தை கடைப்பிடிப்பது நம்மை இந்த அனைத்தில் இருந்தும் விலக்கி விடுகிறது. பரமபிதா பரமாத்மா நம்மை அனைத்தில் இருந்தும்

விடுபட வைக்கவே ஞானம் தருகிறார் அதோடு சக்தியும் தருகிறார், அதாவது முயற்சி செய்ய வைக்கிறார், யார் செய்கிறார்களோ அவர்கள் அடைகிறார்கள் அதாவது அவர்கள் சங்கம யுகத்தின் சரியான சுகத்தை அதாவது அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்கிறார்கள். யார் உளமாற பாபாவை நினைவு செய்கிறார்களோ, அவர்களுக்கு பாபாவின் உதவி தானகவே கிடைக்கிறது, அவர்கள் அதை கேட்பதற்கும் அவசியமே இருப்பதில்லை.

**வீண் எண்ணங்களே ஆத்மாவிற்கு எல்லாவற்றையும்விட அதிகமான சுமையாக இருக்கிறது, அது ஆத்ம சக்தியை மிக வேகமாக இழக்கச் செய்கிறது, அதனால் ஆத்மா தன்னை சோர்வாக உணர்கிறது.** ஆத்மா – பரமாத்மா – டிராமாவின் ஞானம் மற்றும் பரமாத்மாவிடம் கொள்ளும் மாறாத அன்பு ஆத்மாவை வீண் எண்ணங்களில் இருந்து விடுபட வைத்து சக்திசாலி ஆக்குகிறது.

ஆத்மா, பரமாத்மா மற்றும் டிராமாவை சரியானபடி சிந்தித்துப் பார்க்கும்போது ஆத்மாவிற்கு எந்த விதத்திலும் சுமை ஏற்றிக்கொள்வதற்கான அவசியமே இல்லை, அதாவது ஆத்மாமீது எந்தவிதமான சுமையும் இல்லை என்பது தெளிவாகிறது, ஏனெனில் ஆத்ம சொரூபம் இயல்பில் மிகவும் இலேசானது, பரமானந்தமயமானது அதோடு உலக நாடகமும் பரமானந்தமயமானது, பரமாத்மா அவர்களே இந்த சத்திய ஞானத்தைத் தந்திருக்கிறார் அதோடு எல்லா வகையிலும் குழந்தைகளுக்கு உதவி செய்துகொண்டும் இருக்கிறார். ஆத்மா தனது ஆன்ம நிலையில் நிலையாக இருக்க வேண்டியதே இப்போது அவசியமாக இருக்கிறது. யார் பாபாவுடைய இந்த மகாவாக்கியங்களின் மீது நம்பிக்கைக் கொண்டு அவரை உளமாற நினைவு செய்கிறார்களோ அவர்கள் எளிதாக இலேசான நிலையை அதாவது நிராகாரி ஆத்மீக சொரூபத்தை அல்லது பரிஸ்தா ரூபத்தை அனுபவம் செய்வார்கள்.

பரிஸ்தா ஒருபோதும் சுமையை ஏற்றிக்கொள்வதில்லை மேலும் சுமை உடையவர்கள் ஒருபோதும் பரிஸ்தாவாகவும் முடியாது, அதாவது சுமையுடைய ஆத்மாக்கள் பரிஸ்தா சொரூபத்தை அனுபவம் செய்ய முடியாது. நிராகாரி அல்லது பரிஸ்தா சொரூபத்தில் சுமையை ஏற்றிக்கொள்வதற்கான கேள்வியே எழுவதில்லை. எனவே உடல் – மனம் – செல்வம் – மனிதர்கள் மற்றும் உற்றார் – உறவினர் முதலிய எல்லாவிதமான கவர்ச்சியின் சுமையில் இருந்தும் விடுபட்ட ஆத்மா நிராகாரி சொரூபம் அல்லது பரிஸ்தா சொரூபத்தில் நிலையாக இருக்க முடியும். அதாவது இரண்டு சொரூபங்களையும் வெற்றிகரமாக பயிற்சி செய்ய முடியும் மேலும் இரண்டு சொரூபங்களையும் அடையப் பெற்றவர்கள் ஆனந்தம், அமைதி, சக்திகளை எல்லாம் அனுபவம் செய்துகொண்டு இருக்க முடியும்.

இந்திரியங்களின் இரசனை, ஆத்மாவுடைய சுபாவ – சமஸ்காரம், லௌகீக சம்பந்தங்களுடைய கவர்ச்சியின் பந்தனம் என பல வகையாக சுமைகள் இருக்கிறது, அவைகள் ஆத்மாவை நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலையில் நிலையாக இருக்க விடுவதில்லை. எந்த ஆத்மாக்கள் இதை சரியாகப் புரிந்துகொண்டு அவைகளில் இருந்து ஒதுங்கி இருக்கிறார்களோ, அவர்கள் எளிதாக இந்தப் பயிற்சியை செய்ய முடியும். பாபா அவர்கள் இந்த நிலைகளில் நிலையாக இருப்பதற்கான பயிற்சிகளைச் சொன்னார், அதில் வரக்கூடிய தடைகளைப் புரிந்துகொண்டு அவைகளை அகற்றுவது நமது முயற்சியைப் பொருத்தது, அதற்காக பாபா உதவி செய்து வருகிறார் எனினும் அந்த உதவியைப் பெறுவது நமது கையில்தான் இருக்கிறது. உலக நாடகத்தின் ஞானத்தை நன்றாக புரிந்துகொண்டு அதனை சரியாக கடைப்பிடிப்பதன் மூலமாக இந்தத் தடைகள் எல்லாம் தாமாகவே தூரப்போய்விடும் மேலும் எப்போது இந்தத் தடைகள் எல்லாம் தூரப்போய்விடுகிறதோ அப்போது நிராகாரி நிலை மற்றும் பரிஸ்தா நிலையை பயிற்சி செய்வது எளிதாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும்.

சாகாரத்தில் வந்திருக்கக்கூடிய பரமாத்மாவை சரியானபடி அறிந்துகொண்டு அவருடையவராக ஆவதோடு உடல் – மனம் – பொருள் – மக்களோடு அவர்மீது அர்ப்பணமாவது அதாவது உண்மையான உள்ளத்தோடு அர்ப்பணமாகி அனைத்தும் அவருடையது என உணர்ந்து அவருடைய ஸ்ரீமத்படி டிரஸ்டியாகி எல்லா காரியத்தையும் செய்வதே சுமையை பாபாவிடம் ஒப்படைப்பதாகும்.

“பாபாவுடைய அன்பிற்கு அடையாளம் என்னவென்றால் குழந்தைகளுக்கு என்ன வேண்டுமோ அதைக் கொடுப்பது, எல்லா மன ஆசைகளையும் நிறைவேற்றுவது. சுகத்தின் பொக்கிஷங்களுக்கு எல்லாம் எஜமானன் ஆக்குவது, கிடைக்காத ஏதாவது இருக்கிறதா? பின்னர் கொஞ்சம் சக்தி கொடுங்கள் என்று சொல்லக்கூடாது. கொடுத்தாகிவிட்டது எனவே கொடுங்கள் என்று சொல்வதற்கு அவசியமே இல்லை. பாபா கொடுத்துவிட்டார்கள் அதை காரியத்தில் கொண்டுவருவதற்கான விதி தேவை” அ.பாப்தாதா 17.11.94

“பாபா சொல்கிறார் – இப்போது நான் உங்களை எவ்வளவு ஞான ரத்தினங்களால் அலங்கரிக்கிறேன், பிறகு நீங்கள் லட்சுமி–நாராயணன் ஆகிவிடுகிறீர்கள். ... பாபா எப்படி அதிகாலை எழுந்து ஞான சிந்தனை செய்கிறாரோ அதை குழந்தைகளும் பின்பற்ற வேண்டும். இந்த வெற்றி–தோல்வியின் அதிசய நாடகம் உருவாக்கப் பட்டிருக்கிறது என்பது குழந்தைகள் உங்களுக்குத் தெரியும், இதைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைய வேண்டும். இதன்மீது உங்களுக்கு ஒருபோதும் வெறுப்பு வருவதில்லை.” சா.பாபா 19.01.10

“பாபாவுடைய ஆஸ்திக்கு அதிகாரிகள் எல்லா கவலைகளையும் கடந்து பாபா மூலமாக கிடைத்திருக்கும் கஜானாக்களை சதா எண்ணி மகிழ்ந்திருப்பார்கள், அவர்களுக்கு மற்ற வேறு விசயங்களை நினைப்பதற்கும் நேரம் இருப்பதில்லை, ஏனெனில் அவர்கள் பாபா மூலமாக கிடைத்திருக்கும் கஜானாக்களை தமக்குள் கொண்டுவருவதிலோ அல்லது அவைகளை மற்ற அனைத்து ஆத்மாக்களுக்கும் பகிர்ந்து கொடுப்பதிலோ பிஸியாக இருக்கிறார்கள். அனைத்திலும் மிகப்பெரிய தொழில், மிகப்பெரிய தானம் அல்லது மிகப்பெரிய புண்ணியம் இதுதான்.

அ.பாப்தாதா 2.5.74

“ இது மரண நேரம், இப்போது எல்லோரும் கணக்கு–வழக்குகளை முடித்து வீடு திரும்ப வேண்டும் இதில் சிலர் யோகபலத்தால் தமது கணக்கு–வழக்குகளை தீர்க்கிறார்கள், மற்ற சிலர் தண்டனை பெற்று கணக்கு–வழக்குகளை முடிக்கிறார்கள். பாவத்தின் கணக்கு–வழக்குகளை எல்லோரும் முடித்து புனிதமான பிறகேதான் திரும்ப போகமுடியும். ... நான் அனைவரது ஜோதியையும் ஏற்றியபின் திரும்பச் செல்வேன், பின்னர் எல்லோரும் அவரவர் நேரத்தில் வந்து தங்கள் பாகத்தை நடிப்பார்கள். சா.பாபா 31.01.12

## நிராகாரி நிலை என்றால் சதா லைட்–ஹவுஸ், மைட்ஹவுஸ் நிலை

**நிராகார நிலை மேலும் சாகார உடலில் இருக்கும்போது நிராகாரி நிலையின் பிரபாவம் இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் சிந்தனைக்குரியது. பரந்தாமத்தில் ஆத்மா தனது நிராகாரி நிலையில் இருக்கும்போது அதில் எதுவும் கூடவோ, குறையவோ செய்யாது ஆனால் எப்போது சாகாரத்தில் இருந்துகொண்டு நிராகாரி நிலை அதாவது லைட்–ஹவுஸ், மைட்–ஹவுஸ் நிலையில் இருக்கிறதோ அப்போது அதிலிருந்து லைட்–மைட் பரவுகிறது அதோடு அது சூழ்நிலையில் பிரபாவத்தை ஏற்படுத்துகிறது.** ஏனெனில் எதுவரை ஆத்மா தேகத்தில் இருக்கிறதோ, அதுவரை அதற்குள் சூட்சும எண்ணங்கள் இருந்து வருகின்றன, தான் எண்ணமற்ற நிலை அல்லது எண்ணமற்ற சமாதியில் இருப்பதாகச் சொல்லலாம் எனினும் பரந்தாமத்தில் உள்ள நிராகாரி நிலையில் எந்தவித எண்ணமும் இருப்பதில்லை அதனால் அதன் பிரபாவம் எந்த மனிதனின் மீதோ அல்லது சூழ்நிலையின் மீதோ ஏற்படுவதில்லை, எனவே அதில் எந்த கூடுதலோ அல்லது குறைதலோ ஏற்படுவதில்லை. சாகார தேகத்தில் இருக்கும் போது உருவாகும் நிராகாரி நிலையானது ஆத்மாவிற்கு பரம சாந்தியையும் சக்தியையும் அனுபவம் செய்ய வைக்கிறது, அந்த அனுபவத்தின் ஆதாரத்தில் சுற்றுப்புற சூழ்நிலையில் எண்ண அலைகள் பரவுகின்றன அது சூழ்நிலையின் மீது பிரபாவத்தை ஏற்படுத்துகிறது அதன் மூலம் மற்ற ஆத்மாக்களும் பிரபாவத்திற்கு ஆளாகிறார்கள். அதனால் ஆத்மாவில் கொஞ்சம் சேருகிறது அதாவது ஆத்மீக சக்தி அதிகமாகிறது, அது பரந்தாமத்தில் ஏற்படுவதில்லை. அதோடு எப்போது ஆத்மா தேகாபிமானத்திற்கு வசமாகி தீயவைகளைச் செய்கிறதோ அப்போது தன் செயலின் காரணத்தினால் ஆத்மாவின் சேமிப்பில் குறைவு ஏற்படுகிறது.

சத்யுகத்தில் ஆத்மாக்கள் எந்த பாவமும் செய்வதில்லை, இருந்தும் ஆத்மாவின் சேமிப்பில் குறைவு ஏற்படுகிறது என்பது சிந்தனைக்குரிய விசயம். உண்மையில் ஆத்மா தேகத்தை பெற்றபிறகு இந்த உலகில் அது எந்த சாதனத்தை அல்லது செல்வத்தை உபயோகிக்கிறதோ, அதன்மூலம் அதன் ஆத்மீக சக்தியின் இருப்பில் குறைவு ஏற்படவே செய்கிறது. எப்போது ஆத்மா துவாபர யுகத்தில் இருந்து சாதனங்கள் அல்லது செல்வங்களை தாறுமாறாக பயன்படுத்துகிறதோ அல்லது தவறாகப் பயன்படுத்துகிறதோ அல்லது தனது செயல்கள் மூலமாக மற்ற ஆத்மாக்களுக்கு துக்கத்தை விளைவிக்கிறதோ அப்போது இந்த குறையும் வேகம் அதிகரிக்கிறது, எனவேதான் சத்யுகம் மற்றும் திரேதாயுகத்தில் குறைந்த அளவே சக்திகளின் இழப்பு ஏற்படுகிறது, மற்ற யுகங்களில் அதன் இழக்கும் வேகம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகிறது.

**பரிஸ்தா நிலை என்றால் பாப்தாதாவிற்குச் சமமான பிரகாசமய உடல் மற்றும் பாப்தாதா கூடவே இருக்கும் நிலை. சூட்சும வதனத்தின் பரிஸ்தா நிலை மற்றும் சாகார தேகத்தில் இருக்கும்போது உணரும் பரிஸ்தா நிலையின் பிரபாவம் மற்றும் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு**

**சூட்சும வதனத்தின் பரிஸ்தா நிலை எல்லாம் நிறைந்த முழுமையான நிலை, அதாவது அந்த நிலை சாகார உலகத்தின் பாகத்தில் இருந்து வேறுபட்டது அதாவது சாகார தேகத்தைக் கடந்த கர்மாதீத நிலை, அதில் ஆத்மாவிற்கு எதுவும் தேவைப்படுவதில்லை ஆனால் ஆத்மாவிடம் உலக நன்மைக்கான எண்ணங்கள் இருக்கும், அது லைட்–ஹவுஸ், மைட்–ஹவுஸ் ரூபத்தில் முழு உலகிற்கும் பரவிக்கொண்டிருக்கும் மேலும் ஆத்மாக்கள் அந்த எண்ணங்களில் இருந்து தனது நிலை மற்றும் தேவைக்கேற்ப எண்ண அலைகளை கிரகித்துக் கொள்வார்கள் அதாவது பயன் பெறுவார்கள். சூரியனது சக்தி எப்படி பல்வேறு காரியங்களைச் செய்கிறதோ அதாவது அது பழங்களை பழுக்க வைக்கிறது, கிருமிகளை அழிக்கிறது மனித வாழ்வுக்குத் தேவையான சக்தியைத் தருகிறது முதலியவைகள். அதேபோல பரிஸ்தா ரூபத்தில் இருந்து எந்த அலைகள் பரவுகிறதோ, அதிலிருந்து விஞ்ஞானிகள் தமக்குத் தக்கபடி அலைகளை அல்லது பிரேரணைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள், பிராமணர்கள் தமக்குத் தக்கபடி பிரேரணை அல்லது அலைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள், அட்வான்ஸ் பார்ட்டியைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குத் தக்கபடி அலைகள், பிரேரணைகள் மற்றம் சக்திகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். அதன் மூலம் அந்த அலைகளைப் பரப்பும் ஆத்மாவிற்கு ப்ளஸ் ஆகிறது ஏனெனில் அவர்மூலம் எந்த உலக நன்மைக்கான காரியம் நடக்கிறதோ, அதன் ஆதாரத்தில் அந்த ஆத்மாவிடம் ஆத்மீக பலம் அவசியம் அதிகரிக்கும், அவருடைய சேமிப்பும் அதிகமாகும்.**

பரிஸ்தா எப்போதும் பறந்துகொண்டே இருக்கிறது மேலும் அதனுடன் பரமாத்மா அல்லது பாப்தாதா சூட்சுமத்தில் எப்போதும் கூடவே இருக்கிறார்கள். அது நர்–நாராயணன் என சொல்லப்படுகிறது, ஆனால் அங்கே மனித ரூபத்தில் அர்ஜுனனையும் நாராயணர் ரூபத்தில் பரமாத்மாவையும் காட்டி இருக்கிறார்கள். எந்த பிராமண ஆத்மாக்கள் இந்த பரிஸ்தா ரூபத்தில் நிலையாக இருக்கிறார்களோ பாப்தாதா அந்த எல்லா பிராமண ஆத்மாக்களோடும் கூடவே இருக்கிறார், அவர்களுக்கு தக்க சமயத்தில் உதவிசெய்துகொண்டே இருக்கிறார்.

**சாகார தேகத்தில் இருக்கும்போது உருவாகும் பரிஸ்தா சொரூப நிலையில் ஆத்மாவிற்கு பரமானந்தத்தின் அனுபவம் ஏற்படுகிறது, அதிலிருந்து எந்த உலக நன்மைக்கான எண்ணங்கள் பரவுகிறதோ, அதிலிருந்து அனைத்து ஆத்மாக்களும் தமக்குத் தக்கபடி பிரேரணைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் எனினும் அந்த நேரத்தில் ஆத்மாவிற்கு ஆனந்தத்தின் அனுபவம் ஏற்படுகிறது. ஏனெனில் அந்த நேரத்தில் ஆத்மா சாகார தேகத்தில் இருக்கிறது மேலும் அதனுடைய பிரபாவம் அவருடைய தொடர்பில் வரக்கூடிய மற்ற ஆத்மாக்களின் மீது தெளிவாகப் படுகிறது, அதிலிருந்து அவர்களும் அதை அனுபவம் செய்கிறார்கள்.** சாகார பாபாவை சந்தித்தவர்கள் செய்தார்கள் அல்லவா அப்படி. அந்த நேரத்தில் ஆத்மாவிற்கு சிவபாபாவிடம் இருந்து பலவிதமான குணங்கள் மற்றும் சக்திகள் கிடைப்பது அனுபவம் ஆகிறது எனினும் அந்த நேரத்தில் ஆத்மா ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலையில் இருக்கிறது அதாவது அந்த ஆத்மா எல்லாம் நிறைந்த நிலையை அனுபவம் செய்கிறது. சிவபாபா அல்லது பிரம்மா

பாபாவிடம் இருந்து சக்திகளைப் பெறுவது பிறகு அதை மற்றவர்களுக்கு கொடுப்பது பிராமணனாக இருக்கும் நிலை. பிராமண வாழ்க்கையில் பெறுவது மற்றும் கொடுப்பது இரண்டு செயல்களும் நடைபெறுகிறது. பிராமண வாழ்க்கையில் மாஸ்டர் ஞானக்கடல், மாஸ்டர் சர்வ சக்திவான் முதலிய அனுபவங்கள் கிடைக்கிறது. **பிராமண வாழ்வு அனைத்திலும் உத்தம வாழ்வு, அதில் நிராகாரி நிலை மற்றும் பரிஸ்தா சொரூப நிலை விசேசமானது, அது பரந்தாமத்தின் நிராகாரி நிலையிலும் சூட்சும வதனத்தின் பரிஸ்தா சொரூப நிலையிலும் கிடைக்க முடியாது. சாகாரத்தில் பரிஸ்தா சொரூப நிலையில் உலக நன்மைக்கான எண்ணங்கள் நிச்சயம் இருக்கிறது ஆனால் சூட்சும வதனத்தில் சுபாவ ரூபத்தில் உலக நன்மை செய்யும் செயல் நடைபெறுகிறது, அங்கே எண்ணங்களை உருவாக்குவதற்கு அவசியம் இருப்பதில்லை.**

பக்தி என்றால் கேட்பது. பக்தர்கள் எப்போதும் பரமாத்மாவிடம் கேட்பவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் பிறருக்காக கேட்பதில்லை. யார் பரமாத்மாவுடையவராக ஆகிவிடுகிறார்களோ அதாவது பிராமணனாகி விடுகிறார்களோ, அப்போது கேட்பதிலிருந்து அதாவது பக்த நிலையில் இருந்து விடுபட்டுவிடுகிறார்கள் ஏனெனில் அவர்கள் பரமாத்மா யார் என்று அறிந்து கொள்கிறார்கள், அதனால் அவர்களுக்கு பரமாத்மாவிடம் சம்மந்தம் உண்டாகிவிடுகிறது, அதனால் அவர்களுக்கு பரமாத்மாவிடம் இருந்து கேட்காமலேயே எல்லாம் கிடைக்கிறது. அவர்களுக்கு தனது ஆத்மா, பரமாத்மா, உலக நாடகம் முதலிய எல்லாவற்றைப் பற்றிய சிறந்த அறிவு கிடைத்து விடுகிறது மேலும் பரமாத்மாவிடம் இருந்து உலக நன்மைக்காக என்ன எண்ணங்கள் கிடைக்கிறதோ, அந்த எண்ணங்கள் மற்றும் செயல்கள் அவர்களை உலக நன்மை செய்யும் செயலை செய்வதற்கு அவசியம் பிரேரணை தருவதாக இருக்கிறது.

### நிராகாரி–பரிஸ்தா நிலையின் பயிற்சி மற்றும் உலக–நாடகத்தின் ஞானம்

உண்மையைப் பார்த்தோமென்றால் உலக–நாடகத்தின் ஞானமே நம்மை இந்த இரண்டு நிலைகளிலும் சகஜமாக நிலைத்திருப்பதற்கு சக்தி தருவதாக இருக்கிறது, ஏனெனில் நிராகார ஆத்மாக்கள்தான் இந்த உலக நாடகத்தில் நடிகர்களாக இருக்கிறார்கள், தேகமோ ஒரு ஆடைபோல இருக்கிறது, எனவே யாருக்கு உலக–நாடகத்தின் ஞானம் சரியான வகையில் உள்ளத்தில் பதிந்திருக்கிறதோ, அவர்கள் எளிதாக நிராகாரி நிலையில் நிலைத்து விடுவார்கள் மேலும் நிராகாரி நிலைக்குப் பிறகு பரிஸ்தா சொரூப நிலையை பயிற்சி செய்வது எளிதாக இருக்கும். அதாவது நிராகாரி நிலையை சிறப்பாக பயிற்சி செய்யக்கூடியவர்களுக்கு பரிஸ்தா நிலை அவசியம் ஏற்படும், ஏனெனில் எதுவரை ஆத்மா தேகத்தில் இருக்கிறதோ, தேகத்தின் மூலமாக தனது பாகத்தை நடிக்கிறதோ, அதுவரை சூட்சும சரீரம் என்பது எப்போதும் கூடவே இருந்து வருகிறது. இதற்காகவே பரமாத்மா அவர்கள் ஆத்மா மற்றும் பரமாத்மாவின் ஞானத்தோடு உலகநாடகத்தின் ஞானத்தையும் தந்திருக்கிறார். ஆத்மாக்களுக்கு பரமாத்மா செய்த மிகப்பெரிய உபகாரம் இந்த உலக நாடகத்தின் ஞானமாகும்.

உலக நாடகத்தின் ஞானத்தை பரமாத்மாவே தந்திருக்கிறார், எனவே அதனோடு பரமாத்மாவின் நினைவும் அவசியம் இருக்கும். அதேபோல ஞானக்கடல் பரமாத்மாவை சரியானபடி நினைவு செய்தால் உலகநாடகத்தின் ஞானமும் புத்தியில் அவசியம் எழவே செய்யும். உலகநாடகத்தின் குணாதிசயங்களை உள்ளத்தில் கொள்வது, நம்மை இந்த தேகம், தேகத்தின் சம்மந்தங்கள் மற்றும் இந்த தேகஉலகத்தை எளிதாக மறக்கச் செய்கிறது. ஏனெனில் உலகநாடகத்தின் சகஜ ஞானம் ஆத்மாவை சகஜமாகவே மோகமற்ற நினைவு சொரூபத்தில் இருக்க வைத்துவிடுகிறது அதனால் ஆத்மா எளிதில் பயம்–கவலை, துக்கம்–அசாந்தி, பொறாமை–வெறுப்பு, ஆணவம்–அடிமை, ஆசை–கவர்ச்சி, சுபம்–அசுபம் ஆகியவைகளில் இருந்து விடுபட்டு விடுகிறது. இவைகள் எல்லாம் வீண் எண்ணங்களுக்கு மூல காரணமாக இருக்கிறது மேலும் வீண் எண்ணங்களே இந்த நிலைகளில் இருப்பதற்கு பாதகமாகவும் இருக்கிறது. உலக நாடகத்தின் ஞானமே நமக்கு இந்த நாடகத்தின் துவக்கத்தையும் முடிவையும் நினைவூட்டுகிறது அதாவது இப்போது நாம் வீடு திரும்ப வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது. ஏனெனில் கல்பத்தின் முடிவிலேதான் எல்லா ஆத்மாக்களும் பரமாத்மாவோடு வீடு திரும்புகிறது மற்றும் புதிய கல்பத்தில் நடிப்பதற்காக வரிசைப்படி வருகிறது. நிராகார வடிவிலேயே ஆத்மா வீட்டிற்குப்

போகிறது, அதற்கு முன்பாக சூட்சும வதனத்தை கடந்தே தீரவேண்டும், அதன்மூலம் பரிஸ்தா சொரூபம் நினைவிற்கு வந்தே தீரவேண்டும். எனவே உலக நாடகத்தின் ஞானத்தை சரியாக தாரணை செய்யக்கூடியவர்கள் எளிதில் நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தில் நிலைத்துவிட முடியும்.

எந்த ஆத்மா தனது தேகம் மற்றும் தேக உலகை மறந்து நிராகார சொரூபத்தை அல்லது பரிஸ்தா சொரூபத்தை பயிற்சி செய்கிறாரோ அவரது மனமும் புத்தியும் அவசியம் பரமாத்மாவிடமே இருக்கும் அதனால் புத்தியில் உலக நாடகத்தின் ஞானமும் அவசியம் இருக்கும், அதனால் நாடகத்தின் ஆழமான ரகசியங்கள் அவரது புத்தியில் எளிதில் தெளிவடைந்து கொண்டே இருக்கும்.

**நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூப நிலையும் நோய்நொடியும் (கர்மசுமையும்)**

நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலையை நல்லபடியாக பயிற்சி செய்பவர்களுக்கு நோய்நொடி வருவதில்லை எனினும் பூர்வஜென்ம பலனாக ஏதாவது கர்மசுமை வந்தாலும் அதை சகித்துக் கொள்வதற்கோ அல்லது அதை சமாளிப்பதற்கோ தேவையான பலம் பெற்றிருப்பார்கள். எனினும் அந்த சக்தி நோய்நொடி இருக்கும் சமயத்தில் செய்யும் முயற்சியால் வருவதில்லை மேலும் அந்த நேரத்தில் அதை செய்யவும் முடியாது. அதற்காக முதலில் இருந்தே முயற்சி செய்தாக வேண்டும் மேலும் யார் முதலில் இருந்தே இந்த பயிற்சியைச் செய்து ஆன்மீக சக்திகளை சேமித்து வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கே அந்த நேரத்தில் அந்த சக்தி பயனளிக்கும்.

ஏதாவது ஆத்மா தனது பரிஸ்தா சொரூபத்தில் அதாவது சூட்சும தேகத்தில் நிலையாக இருந்து பரமபிதாவின் நினைவில் தனது கர்ம சுமையின்மீது சுபபாவனையின் எண்ண அலைகளை பாய்ச்சுவார்களேயானால் அவர்கள் அந்த நோயிலிருந்து விடுபடமுடியும் அதாவது அப்போது நிவாரணத்தை உணர்வார்கள் மேலும் குறித்த நேரத்தில் அதிலிருந்து சுகம் பெறுவார்கள்.

**கேள்வி. நிராகார் மற்றும் பரிஸ்தா சொரூப பயிற்சிக்கும் நமது கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்காலத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?**

இந்தப் பயிற்சியின் மூலமாக நாம் நமது கடந்த காலத்தில் செய்த முயற்சியையும் கடந்த கால நிலையையும் உணர முடியும் மேலும் தற்காலத்தில் என்ன முயற்சி செய்ய வேண்டும், அதற்கான வழி வகை மற்றும் வேகத்தை முடிவெடுக்க முடியும்.

நிராகார நிலையில் உறுதியாக இருக்கும் பயிற்சியை செய்வதற்காக பாபா அவர்கள் என்ன சொன்னாரோ அதன் உண்மை நிலையை சிந்திக்க வேண்டும் மேலும் அதனை அனுபவம் செய்ய வேண்டும். அதுவே இந்த நிகழ் காலத்தில் பரமசாந்தி, பரமசக்தி தரும் நிலையாகும், மேலும் பரமானந்தத்தை அனுபவம் செய்யவைக்க கூடியதாகும் மேலும் இந்தப் பயிற்சி எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளை எதிர்கொண்டு அல்லது அதனை சகித்துக்கொண்டு பரமானந்தத்தில் இருப்பதற்கான சாதனமாகிவிடும். இந்தப் பயிற்சியின் ஆதாரத்திலேயே நாம் வருங்கால புது உலகத்தில் ஸ்தூல பிராப்திகள் கிடைக்கும். நிராகார நிலையை வெற்றிகரமாக பயிற்சி செய்யக்கூடியவர்களே பரிஸ்தா சொரூபத்தில் நிலையாக இருக்க முடியும். இது சம்மந்தமாக பாபா அவர்கள் **மூன்று வார்த்தைகளை நினைவூட்டி இருக்கிறார் – திடீரென, எவரெடி மற்றும் நீண்டகாலம்.**

பரிஸ்தா எப்போதும் கொடுப்பவராக இருப்பார், அவருக்கு யாரிடமிருந்தும் பெறவேண்டும் என்ற ஆசை இருக்காது ஏனெனில் அவர் எப்போதும் நிறைவாகவும் முழுமையாகவும் இருப்பார். அவருக்கு பரமாத்மாவிடமிருந்தும் பெறுவதற்கான அல்லது கேட்பதற்கான எண்ணங்கள் இருக்காது. அவரோ பாப் சமான் நிலையில் இருப்பார், எப்போதும் பாபாவுக்கு சமமாக அவருடனே இருப்பார். எனினும் எப்போது ஆத்மா அந்த நிலையில் நிலைத்து விடுகிறதோ அப்போது பரமாத்மாவிடமிருந்து பிராப்தி கிடைக்கிறது அல்லது கிடைத்துக் கொண்டிருக்கிறது என்ற சூட்சும் அனுபவம் ஏற்படும். இந்தப் பயிற்சி செய்பவரின் மனம் மற்றும் புத்தி எப்போதும்

நல்ல காரியங்களிலேயே இணைந்திருப்பதால் அவரது எதிர்காலம் நிச்சயமாக நன்றாக இருக்கும், அந்த நம்பிக்கை தற்காலத்திலும் அவரை கவலையற்றவராக வைத்திருக்கும்.

**கேள்வி. நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூபத்தை நல்லபடியாக பயிற்சி செய்ய வேண்டும் என்றால் முதலில் எதை பயிற்சி செய்வது அப்போது அது அடுத்ததற்கும் உதவியாக இருக்கும்?**

முதலில் நிராகாரி நிலையில் நிலைத்திருக்கும் பயிற்சியில் வெற்றி பெறுவீர்கள், அப்போதே பரிஸ்தா நிலையை பயிற்சி செய்ய முடியும். அதனால் ஹடயோகத்தில் முதலில் எண்ணமற்ற (நிர் சங்கல்ப) சமாதி நிலை கிடைக்கிறது, அதன்பின்னர் கெட்ட எண்ணமற்ற (நிர்விகல்ப) சமாதி கிடைக்கிறது என சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல முதலில் நிராகாரி உலகத்திற்குச் செல்ல வேண்டும், பிறகு தேவதையாக வேண்டும், அங்கே கெட்ட எண்ணங்களின் ஞானமே இருப்பதில்லை மேலும் இயல்பாகவே நல்ல எண்ணங்கள் இருக்கும்.

பிரம்மா பாபா அவர்கள் ஆரம்பத்தில் தமது ஆன்மீக சொரூபத்தில் நிலைத்திருப்பதற்காக, ஆத்மாவை தேகத்திலிருந்து தனித்துப் பார்க்க, அந்த நிலையில் நிலையாக இருக்க நன்கு பயிற்சி செய்தார், அந்தப் பயிற்சியால்தான் அவர் இந்த உலகில் இருந்தபோதும் பரிஸ்தா ரூபத்தில் இருந்தார், அதை அவர் அருகில் வந்த அனைவரும் உணர்ந்தார்கள். அவர் முதலில் மனிதனாக இருந்தார், பின்னர் மனித நிலையில் இருந்து நிறைவான மற்றும் முழுமையான அவ்யக்த பரிஸ்தா நிலையை அடைந்தார்.

**கேள்வி. நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலையை சரியாக பயிற்சி செய்கிறோமா இல்லையா என சரியாக அதற்கான கண்ணாடி எது?**

எந்த ஆத்மா இந்த இரண்டு நிலைகளையும் நல்லவிதமாக பயிற்சி செய்கிறார்களோ அவர்களுடைய உடல், மனம், செல்வம், சொந்தம், பந்தம் எல்லாம் திருப்திகரமாக இருக்கும். அவர் தனக்குத்தானே எப்போதும் திருப்தியாக இருப்பார் மேலும் பிறர்மீதும் திருப்தியாக இருப்பார். மற்றவரும் அவர்மீது திருப்தியாக இருப்பார்கள் மேலும் அவருடைய திருப்தியான நிலையிலிருந்து மற்றவர்கள் பிரேரணை பெறுவார்கள். திருப்தியாக இருப்பதற்கு ஆதாரம் முழுமைநிலை அதாவது எல்லாப் பிராப்திகளாலும் நிறைந்த நிலை. நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலை எல்லாப் பிராப்திகளாலும் நிறைந்த முழுமை நிலையாக இருக்கிறது. இந்த நிலையை பயிற்சி செய்பவர்கள் தனது வாழ்வில் எப்போதும் திருப்தியை அனுபவிப்பார்கள், அதன்மூலம் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அவர்கள் தானும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் பிறருக்கும் மகிழ்ச்சியை கொடுப்பார்கள்.

இந்த நிலையை பயிற்சி செய்பவர்களுடைய மனம் புத்தி எப்போதும் ஒரு நிலையில் இருக்கும், அதன் மூலம் அவருக்கு வரப்போகும் சிரமங்கள் மற்றும் தடைகள் முன்கூட்டியே தெரியவரும், அதனால் அவர் எந்தப் பிரச்சனையையும் பார்த்து ஆச்சரியமடையவும் மாட்டார், எந்தத் தடையைப் பார்த்து பயப்படவும் மாட்டார்.

தடைகள்கூட அவருக்கு விளையாட்டாக அனுபவமாகும். முதலில் அவருக்கு முன்பாக எந்த தடையும் வரவே வராது, அப்படி வந்தாலும் அவைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து வைத்திருப்பார் அதாவது அவருக்கு தடைகள், தடைகளாக இருக்காது. தடைகளில் இருந்தும் பாடம் கற்று முன்னேறிச் சென்றுகொண்டே இருப்பார்.

**நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூப நிலையை ஒப்பிட்டு அறிவது**

தேகத்தில் இருந்தாலும் லைட்–மைட் ஹவுஸ் நிலை நிராகார நிலை மேலும் பரிஸ்தா சொரூபத்தில் ஆத்மா லைட்–மைட் ஹவுஸ் நிலையோடு கூடவே சர்ச் லைட்டின் காரியத்தையும் செய்கிறது. பரிஸ்தா சொரூப நிலை இயங்கும் நிலை ஏனெனில் பரிஸ்தா எப்போதும் உலக நன்மையின் பொருட்டு லைட்–மைட் அலைகளை பரப்பிக்கொண்டே பறந்துகொண்டே இருக்கும். அதற்கு எல்லா ஆத்மாக்களுக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். இவ்வுலகில் இருந்துகொண்டே ஆத்மா நிராகார நிலையில் நிலைத்திருப்பதன் மூலம் பரப்பக்கூடிய லைட்–

மைட்டின் அலைகள் சூரியனுக்குச் சமமாக இருக்கும், அதிலிருந்து ஒவ்வொரு ஆத்மாவும் தனது செயல் மற்றும் நிலைக்குத் தக்கபடி லைட்–மைட்டை பெற்றுக்கொள்ளும், அது அவருக்கும் அனுபவமாகும். பரிஸ்தா சொரூப நிலையில் சர்ச் லைட்டின் அனுபவமும் கிடைக்கிறது. சிந்தனைக்குரிய விசயம் என்னவென்றால் எப்போது ஆத்மா நிராகாரி ரூபத்தில் பரந்தாமத்தில் இருக்கிறதோ, அப்போது அதனிடமிருந்து லைட்–மைட் பரவுவதில்லை. எப்போது தேகத்தில் இருந்துகொண்டே நிராகாரி ரூபத்தில் இருக்கிறதோ அப்போது லைட்–மைட் பரப்புகிறது ஏனெனில் எப்போது ஆத்மாவில் எண்ணம் விழிப்பாக இருக்கிறதோ அப்போதே லைட்–மைட்டை பரப்புகிறது. எனினும் பரிஸ்தா ரூபத்தில் எப்போது ஆத்மா சூட்சும வதனத்தில் இருக்கிறதோ அப்போதும் லைட்–மைட்டை பரப்புகிறது ஏனெனில் சூட்சும வதனம் வரை ஆத்மாவின் சூட்சும தேகம் இருக்கவே செய்கிறது, அதனால் அதில் எண்ணம் இருந்தே தீரும்.

நிராகாரி நிலை விதைரூப, எண்ணமற்ற, பரமசாந்தி மற்றும் பரமசக்தி நிரம்பிய நிலை, ஆனால் பரிஸ்தா நிலை என்பது அசுப எண்ணமற்ற அமைதி மற்றும் சக்தியால் நிறைந்த பரமானந்தமய நிலை.

நிராகார ரூபம் மற்றும் பரிஸ்தா ரூபத்தின் மூல நிலைக்கும் தேகத்தில் இருந்து அந்த நிலைகளை அனுபவம் செய்வதற்கும் உள்ள வேறுபாடு

| ஆத்மா பரந்தாமத்தில் இருக்கும்போது நிராகார நிலையின் அனுபவம் | தேகத்தில் இருந்தபடியே பரந்தாம நிராகார நிலையின் அனுபவம் |
|---|---|
| பிரகாசமய புள்ளி வடிவம், அமைதி மற்றும் சக்தி வடிவம் எனினும் **எண்ணமற்ற, அனுபவமற்ற நிலை எனவே ப்ளஸ் மைனஸ் எதுவுமற்ற ஒருமித்த நிலை அதாவது பிரபாவமில்லா நிலை** | எண்ணமற்ற, அமைதி மற்றும் சக்தி நிறைந்த சொரூபம் ஆனால் **அமைதி மற்றும் சக்தியின் சூட்சும செயலற்ற நிலை. ஆத்மா தேகத்தில் இருப்பதால் அவற்றின் பிரபாவம் ஏற்படுகிறது. தேகத்திலிருந்து விலகிய லைட்–மைட் சொரூபத்தின் அனுபவம் வாயுமண்டலத்திலும் அதன் பிரபாவத்தை ஏற்படுத்துகிறது.** |
| ஆத்மா பரந்தாமத்தில் இருக்கும்போது பரமாத்மாவுடன் இருந்தபோதும் அவருடன் இருக்கும் அனுபவம் இருப்பதில்லை | |

| சூட்சும வதன பரிஸ்தா சொரூபத்தின் அனுபவம் | தேகத்தில் இருந்தபடி சூட்சும வதன பரிஸ்தா சொரூபத்தின் அனுபவம் |
|---|---|
| **பிரகாசமய ஒளி உடல், பூமிக்கு மேலே பறக்கும் கலையில் லைட்–மைட்ஹவுஸ் சொரூபம், எப்போதும் உலக நன்மையைக் குறித்த எண்ணங்கள் மற்றும் செயல்கள், பந்தனமற்ற, நிறைந்த முழுமையான நிலை.** ஆத்ம நிலையில் ப்ளஸ் இருக்கும் மைனஸ் இருக்காது ஏனெனில் பரிஸ்தாவின் எண்ணங்கள் எப்போதும் உலக நன்மைக்காகவே இருக்கும். உலகீய மனக் கிலேசங்களில் இருந்து விலகிய எதையும் பற்றாத நிலை. **பாபாவிற்குச் சமமாக நிறைந்த முழுமையான நிலை. ஆன்மீக சுகத்தின் அனுபவம். பரிஸ்தா களைப்பற்று இருப்பார், எண்ணங்களின் சுமை இருப்பதில்லை எனவே களைப்பே ஏற்படுவதில்லை.** | பரமானந்தமய நிலை, தேக மற்றும் தேக உலகின் கவர்ச்சியில் இருந்து விலகிய நிலை, **உலக நன்மைக்கான எண்ணங்கள், பந்தனமில்லா, நிறைந்த மற்றும் முழுமையின் அனுபவம். ஆசையில்லா ஆனந்தமய நிலை கருணை உள்ளம். மனக்கிலேசங்களில் இருந்து விலகிய நிலை.** தேகத்தில் இருக்கும்போது இந்த நிலை எப்போதும் இருப்பதில்லை எனவே இந்த நிலை இல்லாதபோது மைனஸ் ஆகிறது. பெற வேண்டும் கொடுக்க வேண்டும் என்ற இரண்டு எண்ணங்களும் இருக்கிறது. தேகத்தில் இருந்துகொண்டே பரிஸ்தா சொரூபத்தில் இருப்பவர் மிகவும் குறைவு. வீண் எண்ணங்களின் சுமை இருப்பதில்லை எனவே களைப்பு என்பது மிகக் குறைவாகவே இருக்கும். |

பிராமணனான பிறகு நாம் நிராகார நிலையை பயிற்சி செய்தாலோ அல்லது பரிஸ்தா நிலையை செய்தாலோ அதுவும் பிராமண நிலைதான். பிராமண வாழ்வில் இருக்கும்போது சுகம், சாந்தி, ஆனந்தத்தின் அனுபவம் தேகத்தில் இருந்தபோதும் கிடைக்கிறது. பிராமண வாழ்வில்தான் பரமாத்ம பிராப்திகளையும், ஞானம் குணம் சக்திகளையும் அனுபவம் செய்ய முடியும் மேலும் ஞானம் குணம் சக்திகளை மற்ற ஆத்மாக்களுக்கு கொடுக்கவும் அதாவது சேவையில் ஈடுபடுத்தவும் முடியும். பிராமணனாக இருக்கும்போதே பரமாத்ம குடைநிழலின் அனுபவம் மேலும் அவ்யக்த பாப்தாதாவிடமிருந்து சக்தியை பெறும் அனுபவத்தைப் பெற முடியும்.

எதுவரை பிராமண ஜீவன் இருக்கிறதோ அதுவரை நிராகார நிலை மற்றும் பரிஸ்தா நிலையில் லயித்தபோதும் சூட்சுமத்தில் பாபாவின் நினைவு இருக்கிறது, அதன் அனுபூதி இருக்கிறது ஆனால் நிராகாரி உலகத்தில் மற்றும் சூட்சும வதனத்தில், கூட இருந்தபோதும் அனுபூதிக்கான விசயம் இருப்பதில்லை அதாவது இயல்பாகவே கூட இருக்கிறோம்.

இந்த மனித உலகத்தில் யாருக்கு இந்த கல்பத்தின் பாகம் எல்லாம் முடிவடைந்து விட்டதோ அவர்களே சூட்சும வதனத்திற்கு பரிஸ்தா ரூபத்தில் போகமுடியும். எனவே சூட்சும வதனத்திற்கு மேலே செல்வதற்கு முன்னால் அங்கு வருகிறார்கள்.

**எரிமலையின் சொரூபம் மற்றும் அதற்கான சரியான முயற்சி**

**கேள்வி: எரிமலை யோகப் பயிற்சி மேலும் நிராகாரி மற்றும் பரிஸ்தா சொரூப டிரில்மீது பாபா ஏன் அதிகம் வலியுறுத்துகிறார், அதற்கு நமது இந்த வாழ்வில் என்ன விசேச மகத்துவம் இருக்கிறது?**

எரிமலை யோகம் என்றால் தேகம் மற்றும் தேக உலகை மறந்து ஒரு பாபாவை மட்டும் நினைப்பது மேலும் எரிமலை நிலை என்றால் தனது மூல சொரூபம் அதாவது நிராகாரி ஆத்ம சொருபத்தில் இலயித்திருப்பது, அது பரமசாந்தி, பரமசக்தி நிறைந்த எண்ணமற்ற, பயமற்ற, கவலையற்ற நிலையில் இருப்பது. எரிமலை யோகத்தின் மூலமாக நமது எரிமலை நிலை உருவாகும், அதன்மூலம் நாம் திடீரென்று வரும் சோதனைகளில் பாஸாக முடியும். எரிமலை நிலையை சரியாகப் பயிற்சி செய்வதன் மூலம் கடைசி நேரத்தில் எளிதாக தேகத்தை தியாகம் செய்ய முடியும் அதாவது மரணபயம் மற்றும் மரண துக்கத்தில் இருந்து விடுபட்டு இருக்க முடியும்.

எரிமலை நிலையில் நாம் இப்போதும் முக்தி—ஜீவன் முக்தியை அனுபவம் செய்வோம் மேலும் எதிர்காலத்திலும் முக்தி—ஜீவன் முக்தி நிலையை பெறுவோம். எரிமலை நிலையாலேயே நாம் மற்ற ஆத்மாக்களுக்கும் முக்தி—ஜீவன் முக்தி நிலையை அனுபவம் செய்ய வைக்க முடியும் அதாவது அவர்களை துன்ப வேதனையிலிருந்து விடுபடச் செய்து பரமசுகம்—சாந்தியை அனுபவம் செய்ய வைக்க முடியும். தற்போது அது ஆத்மாவிற்கு பரமானந்தத்தின் அனுபூதியைத் தருகிறது மேலும் எதிர்காலத்தில் கர்ம சுமையை தாங்கிக்கொள்வதற்கான சக்தியையும் தருகிறது.

நிராகாரி மற்றும் பரிஸ்தா நிலை பயிற்சியை எந்த அளவு நாம் வெற்றிகரமாக முயற்சி செய்கிறோமோ, அந்த அளவே நமது எரிமலை யோகம் வெற்றி பெறும் மேலும் நமது எரிமலை நிலை உருவாகும் அதாவது நாம் நமது நிறைவான முழு நிலையில் நிலைத்து இருக்க முடியும். கடைசியில் நாம் நிறைந்து முழுமையான பிறகே வீடு திரும்ப முடியும் மேலும் அதற்கு முன்பாக சூட்சும வதனத்திற்கும் கட்டாயம் போக வேண்டும்.

கடைசி நேரத்தில் எப்போது அழிவு நேருமோ, அந்த நேரத்தில் உலகத்தில் நிறைய கூக்குரல் இருக்கும், பயம்—கவலை, துக்கம்—அசாந்திக்கான வாயுமண்டலம் இருக்கும், அந்த துக்க—

அசாந்திக்கான நேரத்தில் நாம் உறுதியாக இருக்க வேண்டும், அதற்காக இப்போது அமைதியான நேரத்தில் இந்த எரிமலை யோகத்தை பயிற்சி செய்வது மிகவும் அவசியமாகும்.

## எரிமலை யோகம் மற்றும் எரிமலை நிலை

ஆத்மாவின் நிராகாரி சொரூபம் ஜுவாலை சொரூபமாகவே இருக்கிறது ஏனெனில் ஆத்மா லைட் – மைட் சொரூபமானது. அந்த நிலையை உருவாக்க அல்லது அதில் நிலையாக இருக்க எரிமலையோகம் அவசியமாக இருக்கிறது. எரிமலை நிலையை உருவாக்க எரிமலையோகம் மிகவும் அவசியமாக இருக்கிறது.

நாளுக்குநாள் நிலைமை மோசமாகியே தீர வேண்டும். எனவே அப்படிப்பட்ட நேரத்தை எதிர் கொள்வதற்காக இப்போதிருந்தே எரிமலையோகம் தேவை. … ஒவ்வொரு குழந்தையும் பரிஸ்தா அனுபவத்தில் இருக்க வேண்டும். அதற்காக எரிமலை யோகம் வேண்டும், வீணானவை எதுவும் இருக்கக்கூடாது. லைட் மற்றும் மைட் சொரூப யோகத்தால் வீணானவைகளை எரித்துவிடுங்கள். எப்போதும் பரிஸ்தா சொரூபத்திலேயே இருக்க வேண்டும், இதைத்தான் தீவிர முயற்சி என்று சொல்லப்படுகிறது.31.12.11

பழைய தேகாபிமான சமஸ்காரங்களை சாம்பலாக்கி இந்த சங்கமயுக ஈஸ்வரிய வாழ்வின் அரும்பெரும் பிராப்திகளை அனுபவம் செய்வதற்கு, எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கு மேலும் உலகில் உள்ள துன்ப வேதனையுடைய ஆத்மாக்களுக்கு உதவி செய்வதற்காக தற்போது எரிமலை யோகம் மிகவும் அவசியமாக இருக்கிறது.

யோகம் வெறும் முயற்சி மட்டுமல்ல ஆனால் அது ஒரு விசேச பிராப்தியாக இருக்கிறது, அது ஆத்மாக்களுக்கு புருஷோத்தம சங்கம யுகத்தில் மட்டுமே கிடைக்கிறது, அப்போது பரமபிதா பரமாத்மா இந்த பூமியில் அவதரித்து யோகத்தின் ஞானத்தைத் தந்து யோகத்தை கற்பிக்கிறார். யோகத்தின் மூலமாக ஆத்மாவிற்கு அதீந்திரிய சுகம் அல்லது பரமானந்தத்தின் அனுபூதி கிடைக்கிறது, அது முழு கல்பத்திலும் கிடைப்பதில்லை. அதன்மூலம் முழு கல்பமும் பாகத்தை நடிப்பதற்கான சக்தி சேர்ந்துவிடுகிறது மேலும் அரைகல்ப பாவ சுமைகளை சாம்பலாக்கி விடுகிறது. அதன்மூலம் ஆத்மா லேசாகி பரமசாந்தியின் அனுபவம் பெறுகிறது.

நெருப்பில் போடும்போது எந்தப் பொருளின் வடிவமும் மாறிவிடுகிறது. தங்கத்தை நெருப்பில் புடம் போடும்போது அதில் உள்ள அழுக்குகள் எல்லாம் எரிந்துவிடுகிறது மேலும் அது சொக்கத் தங்கம் ஆகிவிடுகிறது. நெருப்பின் பிரபாவம் நாலாபுறமும் பரவுகிறது அதாவது அது சூழ்ந்த இடம் தானாகவே சூடாகிவிடுகிறது.

எப்போது ஸ்தாபனை காரியத்திற்காக யாகம் உருவாக்கப்பட்டதோ, அப்போதிருந்தே ஸ்தாபனையின் கூடவே யாகக் குண்டத்திலிருந்து வினாசத்திற்கான ஜுவாலையும் தோன்றியுள்ளது. எனவே வினாசத்தை வேகப்படுத்தக்கூடியவர்களாக இருப்பவர் யார்? பாபாவும் நீங்களும் இணைந்துதானே! எனவே யார் வேகப்படுத்தக் கூடியவரோ, அவரே அதை முடித்து வைக்கவும் வேண்டும், அது சங்கருடைய வேலையல்ல. சங்கருக்கு சமமாக ஜுவாலா ரூபமாகி பற்றவைத்த வினாசத் தீயை முடித்து வைக்க வேண்டும். … எண்ணத்தின் மூலமாக இந்த வினாசத் தீயை வேகப்படுத்த வேண்டும். என்ன இந்த மாதிரி நெருப்பு ரூபமாகி வினாசத் தீயை வேகமாக்கும் எண்ணம் தோன்றுகிறதா? 03.02.74.

அழிவை ஏற்படுத்தும் ஆத்மாக்களுக்கு நன்மை செய்யும் ஆத்மாக்களுடைய உதவி தேவை. அவர்களுக்கு உங்கள் எண்ணத்தின் சைகை தேவைப்படுகிறது. எதுவரை நீங்கள் ஜுவாலாரூபம் ஆகவில்லையோ, அதுவரை சைகை காட்ட முடியாது. … வினாசம் ஆகுமா, ஆகாதா, என்னவாகும், எப்படியாகும் என்றெல்லாம் நினைப்பதற்குப் பதிலாக இப்போது அது நம்மூலமாகத்தான் நடக்க வேண்டும் என புரிந்துகொள்ளுங்கள். இதை அறிந்து ஒவ்வொரு

விசயத்திலும் நம்பிக்கை கொண்டு இப்போது தன்னை சக்திரூபமாக்குங்கள், தன்னை லைட் – ஹவுஸ் மற்றும் பவர் ஹவுஸ் ஆக்குங்கள்.03.02.74

**கேள்வி: எரிமலை யோகத்திற்கும் எரிமலை நிலைக்கும் இடையே ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த வித்தியாசம் எது?**

எரிமலை யோகம் என்றால் ஒரு பரமபிரிய பரமாத்மாவை மட்டும் நினைக்கும் நினைவு, ஆனால் எரிமலை நினைவிற்குப் பிறகு எந்த நிலை உருவாகிறதோ அது எரிமலை நிலை, அதில் எந்த எண்ணமும் இருப்பதில்லை. ஆத்மா பரமசாந்தி, பரமசக்தியின் அனுபவத்தில் மூழ்கி விடுகிறது. நினைவில் பரமாத்ம அன்பின் அனுபவம் கிடைக்கிறது. நினைவு முயற்சியாகவும், நிலை இலக்காகவும் இருக்கிறது. எரிமலை நிலையில் எந்த நினைவும் இருப்பதில்லை. அதற்காக அவ்யக்த பாப்தாதா ஒரு நிமிடம் அல்லது மூன்று நிமிடங்கள் முரளியின் நடுவே அனுபவம் செய்ய வைக்கிறார் அதோடு எந்த எண்ணமும் வரக்கூடாது என்று பாபா சொல்கிறார். பரமாத்மாவை நினைத்து நினைத்து எப்போது ஆத்மா எரிமலை நிலை அதாவது எண்ணமற்ற நிலைக்கு சென்று விடுகிறதோ அப்போது பரமாத்மாவின் நினைவு சூட்சுமாக இருக்கிறது ஏனெனில் ஆத்மா அந்த நினைவில் எண்ணமில்லாமல் ஆகிவிட்டது.

பாப்சமான் இருப்பவரின்அடையாளம் – ஒரு நொடியில் எங்கு, எப்படி வேண்டுமோ, எது வேண்டுமோ அதைச் செய்ய முடியும். … சமமானவர்கள் ஞானதானம், குணதானம் முதலியவற்றின் மகத்துவம் அறிந்த ஞானசொரூபத்தில் இருப்பார்கள். எவ்வளவு வாணி கேட்க மற்றும் சொல்ல ஆர்வம் இருக்கிறது, ஆசை இருக்கிறது, வாய்ப்பையும் உருவாக்குகிறீர்கள், என்ன அதே போல வார்த்தையைக் கடந்த நிலையில் இருப்பதற்கான வாய்ப்பை உருவாக்க மற்றும் பெற ஆர்வம் இருக்கிறதா? … அப்படிப்பட்ட ஆத்மாவிற்கு, இந்த அனுபூதியின் நிலையில் மூழ்கி இருக்கக்கூடிய காரணத்தால் எந்தவித பெருமையோ அல்லது எந்தவிதமான பிராப்தியின் கவர்ச்சியோ அவர்களை எண்ணத்தில்கூட தொட முடியாது. *அ.பாப்தாதா 23.05.74*

**பாப்தாதாவை எப்படி சாகார், ஆகார் மற்றும் நிராகார் ஆக அனுபவம் செய்கிறீர்களோ, அப்படி தன்னை பாப்சமான் சாகாரத்தில் இருந்த போதும் ஆகாரி மற்றும் நிராகாரி என சதா அனுபவம் செய்கிறீர்களா? இந்த அனுபவம் நிரந்தரமாக இருந்தால் இந்த சாகார உடல் மற்றும் இந்த பழைய உலகத்திலிருந்து தானாகவே விலகி இருப்பீர்கள்.** அதாவது மேலேயிருந்து சாட்சியாக இந்த பழைய உலகை விளையாட்டைப்போல பார்ப்பீர்கள். அந்தமாதிரி நிலையில் நிலைத்திருக்கும் ஆத்மாவை பார்க்கும்போது எது கண்ணுக்குத் தெரியும். லைட் ஹவுஸ் மற்றும் பவர் ஹவுஸ் 03.02.74

அப்படிப்பட்ட லைட் –ஹவுஸ், மைட்ஹவுஸ் ஆத்மாக்கள் பாபாவிற்குச் சமமாக உலக நன்மை செய்பவர் என சொல்லப்படுவார்கள். யார் முன்னால் வந்தாலும் ஒவ்வொருவரும் லைட் மற்றும் மைட் அனுபவம் செய்துகொண்டே போவார்கள். … அப்படி மாகாதானி, வரதானி, சர்வகுணதானி, குருடருக்கு மூன்றாவது கண் கொடுக்கக்கூடியவர் … சுகம், அமைதி, ஆனந்த மூர்த்தி ஆக்கக்கூடிய ஆத்மாவாகி விட்டீர்களா? என்ன இந்த அடையாளத்தின் போதையில் இருக்கிறீர்களா? *அ.பாப்தாதா 03.02.74*

நாங்கள் சிவபாபாவைத்தான் நினைவு செய்தோம் என்று சொல்கிறார்கள் ஆனால் உண்மையில் நினைவில் இருந்தீர்களா? முழுமையாக அமைதியில் இருப்பதன் மூலம் இந்த உலகமே மறந்து விடுகிறது. நான் சிவபாபாவின் நினைவில் இருந்தேன் என தன்னை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். நினைவில் தேகத்தின் தர்மங்கள் அனைத்தும் மறந்துபோக வேண்டும். நம்மை சிவபாபா கவர்ந்து முழு உலகையும் மறக்க வைக்கிறார். … தன்னை மேதாவியாக நினைத்து ஏமாற்றிக் கொள்ள வேண்டாம் *7.5.04 சாகார் பாபா*

## சுயமரியாதை மற்றும் நிலைகளின் அனுபூதி மற்றும் அவைகளின் அத்தாரிட்டி

அமிர்தவேளை நினைவில் அமர்கிறீர்கள் ஆனால் நினைவு சொரூபத்தின் அனுபவம் இருக்க வேண்டும். அனுபவ அதிகாரத்தின் ஆனந்தம் மிகக்குறைந்த நேரமே ஏற்படுகிறது. ... ஆனால் சொரூபத்தின் நினைவை சொரூபத்தின் அனுபவ மூர்த்தியாவதில், அனுபவத்தில் மூழ்கிப்போவதில் இப்போது இன்னும் அதிகமாக்க வேண்டியிருக்கிறது ஏனெனில் அனுபவத்தின் அத்தாரிட்டியே அனைத்தையும்விடப் பெரியது. நினைவு சொரூபத்தில் இருக்க வேண்டும், அதையே அனுபவம் என்று சொல்லப்படுகிறது. எனவே சொரூபத்தின் நினைவை அனுபவத்தில் மூழ்க வைகக வேண்டும். அ.பாப்தாதா. 02.02.12

சப்தத்தில் வருவதற்கும் மேலும் சப்தத்தை கடந்து செல்வதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது, என்ன எல்லோரும் இதன் அனுபவி ஆகிவிட்டீர்களா? இயந்திரத்தில் கொஞ்சம் சிக்கல் இருந்தாலும் அது எழுப்பும் ஒலி கேட்க உகந்தாக இருக்காது அல்லவா! அதேபோல உங்களது இயந்திரமான வாய் மைக்காக இருக்கிறது. இந்த வாய் மூலமாக எப்போது சரியான அல்லது உத்தியான வார்த்தைகள் வரவில்லையோ, அப்போது எல்லோருக்கும் என்ன அனுபவம் ஏற்படும், என்ன அந்த நேரம் உங்களுக்கு இது தெரியவருகிறதா என்ன? அ.பாப்தாதா 27.05.74

பரந்தாமத்தில் ஆத்மா பாபாவுடன் இருக்கிறது எனினும் அதன் அனுபவம் அங்கு இருப்பதில்லை.

சத்யுகத்தில் எல்லா பிராப்திகளும் இருக்கிறது, இயற்கையை வென்றிருக்கிறார்கள் அதாவது இயற்கை பணியாளராக இருக்கிறது, ஜீவன்முக்தி நிலையில் அமரராக இருக்கிறார்கள்... எனினும் அதன் சரியான அனுபூதி இருப்பதில்லை ஏனெனில் அதற்கு மாறான நிலைகளைப் பற்றிய ஞானம் அந்த நேரத்தில் இருப்பதில்லை மேலும் அதன் அனுபவங்களும் இருப்பதில்லை ஏனெனில் ஆத்மா பரந்தாமத்தில் இருந்து நேரடியாக வருவதால் அப்படிப்பட்ட அனுபவங்களைப் பற்றிய கேள்வியே எழுவதில்லை.

துவாபர யுகத்தில் இருந்து லஷ்மி—நாராயணர், சீதா—ராமரின் மூர்த்திகளை கோயிலில் பிரதிஷ்டை செய்து, அவைகளுக்கு விதிபூர்வமாக பூஜைகள் செய்கிறார்கள், அதன்மூலம் பக்தர்களின் ஆசைகள் நிறைவேறுகிறது. எனினும் தமக்கு பூஜை நடைபெறுகிறது என்பது அந்த மூர்த்திகளுக்குத் தெரியுமா? அவைகளால் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏதும் ஏற்படுகிறதா? என்பது சிந்தனைக்குறிய விசயமாக இருக்கிறது. அந்த மூர்த்திகளின் உருவங்களை மலர்ந்த முகமுடையதாக, அவர்கள் கண்கள் மற்றும் தோற்றத்தை அன்பு சொரூபமாக, சக்தி சொரூபமாக உருவாக்குகிறார்கள். அவர்களுக்கு என்ன புகழ் பாடுகிறார்களோ, அவைகள் உண்மையில் சத்யுகத்தை சேர்ந்ததில்லை ஆனால் அந்த புகழெல்லாம் சங்கம யுகத்தில் பரமாத்மா எந்த ஞானம் கொடுத்தாரோ, அனுபவம் செய்ய வைத்தாரோ, உலகநன்மைக்காக சேவை செய்யவைத்தாரோ அவைகளே. பார்க்கப்போனால் உருவங்கள் சத்யுகத்தை சேர்ந்ததாகவும் செயல்கள் மற்றும் புகழெல்லாம் சங்கம யுகத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கிறது.

இப்போது சங்கம யுகத்தில் பரமாத்மா தன்னுடையவராக்கி அதாவது பிராமணனாக்கி நமக்கு ஞானமளிக்கிறார், அதன்மூலம் நாம் நமது இயல்புகளை அறிந்து மாஸ்டர் சர்வசக்திவான், முக்கண்ணன், முக்காலமறிந்தவர், சுயதரிசனசக்ரதாரி, ... எல்லாமாகி புருவமத்தியின் சிம்மாசனதாரி சுயராஜ்ய அதிகாரியாகி பரமாத்மாவுடன் உலக நன்மை செய்கிறோம். பரந்தாமத்தில் இருந்து தொடங்கி திரும்பச் செல்லும்வரை உள்ள எல்லா அனுபவங்களும் இப்போது இந்த பிராமண வாழ்வில் ஏற்படுகிறது. எனவே இந்த அனுபவங்களின் அதிகாரம் உடையவர் ஆகுங்கள் என பாபா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் மேலும் எப்போது நீங்கள் தானே ஆகிறீர்களோ அப்போதே மற்றவர்களுக்கும் அந்த அனுபவங்களைத் தரமுடியும். சத்யுகத்து தேவர்கள் யாருடைய விருப்பங்களையும் நிறைவேற்றுவதில்லை மேலும் யாருக்கும் அங்கே அப்படிப்பட்ட ஆசைகளும் இருப்பதில்லை. விருப்பப்படுவது மேலும் அவைகளை

நிறைவேற்றுவது எல்லாம் இப்போது இந்த சங்கம யுகத்தில்தான் இருக்கிறது மேலும் அந்த செயல்களை இப்போது நாம் செய்யவேண்டியதாக இருக்கிறது.

நமது திரும்பும் பயணம் வினாசத்திற்குப்பிறகு ஆரம்பமாகிறது ஏனெனில் அங்கிருந்துதான் ஆத்மா சூட்சும வதனத்திற்குச் சென்று பரந்தாமம் சேர்கிறது, சாகாரத்தில் நாடகமேடையில் நடிப்பு முடிகிறது எனினும் அதன் ஞானம் அதன் சரியான அனுபூதி இப்போதுதான் ஏற்படுகிறது.

### சுயமரியாதை

பாபா அவர்கள் நம்மை சுயமரியாதையிலும், அனுபவத்தின் அத்தாரிட்டி உடையவராகவும் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார், எனவே முழு கல்பத்திலும் நமது முக்கிய சுயமரியாதைகள் எவையெவை, என்ற ஞானம் எப்போது நமது புத்தியில் தெளிவாகிறதோ அப்போதே நாம் அந்த சுயமரியாதைகளில் இருக்க முடியும் மேலும் அனுபவத்தின் அத்தாரிட்டி பெறமுடியும். அவ்வப்போது நமது சுயமரியாதை எது என்பதைக்குறித்து சிந்தனை செய்வதும் அவசியமாக இருக்கிறது.

### அனாதி (முதலும் முடிவும் இல்லாத) சொரூப சுயமரியாதை

பரந்தாமத்தில் பரமபிதாவோடு இருக்கும் பிரகாசமான அதிஷ்ட நட்சத்திரம்

அமைதியும் சக்தியும் நிறைந்த ஆத்மா

புனிதமான ஆத்மா

### ஆதிசொரூப சுயமரியாதை

அனைத்து குணங்களும் நிறைந்த

பதினாறு கலைகள் முழுமையான

முற்றிலும் விகாரமற்ற

அஹிம்சையை பிரதான தர்மமாகக் கொண்ட

அனைவருக்கும் மரியாதை அளிக்கும் ஆத்மா

உலகை ஆளும் அதிகாரி

இயற்கையின் தலைவன்

தன – தானியங்களால் நிறைந்தவன்

அமரன்

யோகபலத்தால் பிறந்த, உறுதியான உடல் உடையவன்

எல்லோருடனும் இணக்கமாகவும் இன்புற்றும் வாழ்பவன்

### மத்திய காலம்

கோவில்களின் எனது மூர்த்திக்கு பூஜை நடைபெறுகிறது

எனது மூர்த்தி பக்தர்களின் ஆசைகளை நிறைவேற்றுகிறது

பக்தர்களின் இஷ்ட தேவனாக இருக்கிறேன்

### சங்கமயுக பிராமண சொரூப சுயமரியாதை

அனைத்திலும் மகத்துவம் வாய்ந்தது சங்கம யுகத்தின் சுயமரியாதை, அதுவே முழுகல்பத்தின் சுயமரியாதைகளுக்கு ஆதாரமாக விளங்குகிறது.

சச்சிதானந்த சொரூபம்

மாஸ்டர் ஞானக்கடல்

மாஸ்டர் சர்வ சக்திவான்

அமைதி நிறைந்த ஆத்மா

சுயராஜ்ஜிய அதிகாரி – கர்மேந்திரியங்களின் தலைவன்

முக்கண்ணன்

முக்காலம் அறிந்தவன்

மூன்று உலகின் அதிபதி

பிரம்மாவின் ஞானக் குழந்தை பிராமணன்

பரமாத்மாவின் நேரடிக் குழந்தை

பிராமணனில் இருந்து பரிஸ்தாவாகவும் பின்னர் தேவராகவும் ஆகக்கூடியவன்

சுயதரிசன சக்கரதாரி

ராஜயோகி

மாஸ்டர் வள்ளல்

மகாதானி – வரதானி

இறைவனின் இதயசிம்மாசனதாரி

ஹீரோ நடிகர்

இறைவனோடு இணைந்து செயல்படுபவர்

சாட்சி மற்றும் டிரஸ்டியாக இருப்பவர்

சிவசக்தி பாண்டவ சேனையின் உறுப்பினர்

மாஸ்டர் விஸ்வகல்யாணகாரி

இறைவனின் நம்பிக்கை நட்சத்திரம்

கவலையற்ற பேரரசர்

கடவுளின் உதவியாள்

உலகின் அனைத்து ஆத்மாக்களுக்கும் முன்னோர்

சுப சிந்தனை மணி

கல்ப மரத்தின் வேர்

கடவுளின் நண்பன்

கோடியில் ஒருவன்

இறைவனின் மாணவன்

உலகின் ஒளி – கலங்கரை விளக்கு

**பரிஸ்தா சொரூப சுயமரியாதை**

பிரகாசமயமான உடலோடு பிரகாசமயமான உலகத்தில் இருந்து உலக நன்மைக்காக பூமியெங்கும் லைட் – மைட்டின் கிரணங்களைப் பரப்பிக்கொண்டு பாப்தாதாவோடு சுதந்திரமாக உலா வருபவர்

பரமபிதா பரமாத்மாவோடு சமமான துணையாகி வீட்டிற்குப் செல்பவர். தர்மராஜர் மரியாதை தந்து வழியனுப்பி வைப்பவர்.

## சிந்தனைக்குரிய உண்மைகள்

**அனாதி சொரூபத்தில் உங்கள் சுயமரியாதை எவ்வளவு பெரியது – நினைத்துப்பாருங்கள். ... ஒன்று தந்தையோடுகூட பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஆத்மா. பாபாவுடன் இருப்பதால் பிரகாசித்துக்கொண்டிருப்பது விசேசமாக தெரியவருகிறது. ... உலக நாடகச் சக்கரத்தின் ஆரம்பத்தில் அதாவது சத்யுகத்தின் ஆரம்பத்தில் உங்கள் சொரூபத்தைப் பாருங்கள், எவ்வளவு சிறந்த சுக சொரூபமாக இருக்கிறது, எந்த அளவு அனைத்து பிராப்திகளின் சொரூபமாக இருக்கிறது. இயற்கையும்கூட எந்த அளவு அழகாக சதோகுணத்தோடு இருக்கிறது. தனது தேவ சொரூபத்தை அனுபவம் செய்யுங்கள். ... பின்னர் கீழே வாருங்கள் அப்போது துவாபர யுகத்திலும் உங்கள் சுயமரியாதை பூஜைக்குரியதாக இருக்கிறது அதாவது பூஜைக்குரிய சொரூபமாக இருக்கிறது. ... எல்லோரும் எத்தனை பாவனையோடு முறையாக பூஜை செய்கிறார்கள். அப்படி முறையான பூஜை வேறு யாருக்கும் செய்யப்படுவதே இல்லை. ... இப்போது சங்கமயுகத்திற்கு வாருங்கள், எல்லோரும் சக்கரத்தைச் சுற்றி வருகிறீர்களா? பாருங்கள் சங்கம யுகத்தில் பகவான் தானே உங்களுடைய வாழ்க்கையில் புனிதத்தன்மையை நிரப்புகிறார், அந்தப் புனிதம் (பவித்திரம்) உங்கள் அனைத்து அழியாத சுகங்களின் சுரங்கமாக இருக்கிறது. ... புனிதத்தின் சொத்து இப்போது பாபா மூலமாக கிடைக்கிறது மேலும் புனிதமே அனைத்து பிராப்திகளுக்கும் ஆதாரமாக இருக்கிறது.** அ.பாப்தாதா 02.02.12

## ஞானப் பகுதி

பாபா அவர்கள் நமக்கு எந்த விசயங்களைப் பற்றிய ஞானத்தை கொடுத்திருக்கிறாரோ அந்த அனைத்தின் குணநலன்களையும் சொல்லியிருக்கிறார், அவைகளில் முக்கியமானவை –

1. ஆத்ம ஞானம்
2. பரமாத்ம ஞானம்
3. உலக நாடகத்தைப் பற்றிய சரியான ஞானம்
4. மூன்று காலத்தைப் பற்றிய ஞானம்
5. மூன்று உலகைப் பற்றிய ஞானம்
6. கல்ப மரத்தைப் பற்றிய ஞானம்
7. கர்மத்தின் ஆழமான விளைவுகளைப் பற்றிய ஞானம்
8. யோகத்தைப் பற்றிய சரியான ஞானம்
9. புனிதத் தன்மையைப் பற்றிய ஞானம்
10. மற்ற பல உலக நாடகத்தின் இரகசியங்களைப் பற்றிய ஞானம்

## அனுபவப் பகுதி

- ஆத்மாவின் சரியான சொரூபத்தின் அனுபவம்
- பரமானந்தம் அதாவது அதீந்திரிய சுகத்தின் அனுபவம்
- உண்மையான சுகம் – சாந்தி – புனிதத்தின் அனுபவம்
- புகழ்–இகழ், லாப–நட்ட ... இரட்டை நிலைகளின் அனுபவம்
- சாட்சி நிலையின் அனுபவம்
- முக்தி ஜீவன் முக்தியின் அனுபவம்
- பரமாத்ம அவதாரம் அதாவது பரகாயப் பிரவேசத்தின் அனுபவம்
- பரமாத்மாவின் அருகில் இருக்கும் அனுபவம்
- பரமாத்ம அன்பு மற்றும் வளர்ப்பின் அனுபவம்
- பரமாத்ம உறவின் (தாய், தந்தை, ...) அனுபவம்
- அரூபியாம் பரமாத்மாவின் உருவின் (பாப்தாதா) அனுபவம்
- பரமாத்மாவிடம் இருந்து அனைத்து பிராப்திகளின் அனுபவம்

- பரமாத்ம உதவியின் அனுபவம்
- இறைவனை தோழனாக அனுபவம்
- இறைவனது மடியின் அனுபவம்
- ஈஸ்வரிய பிறப்புரிமையின் அனுபவம்
- இறைவனது வாரிசாக அனுபவம்

இப்போது நமக்கு முழு கல்பத்தின் ஞானம் இருக்கிறது, எனவே நமக்கு கலியுகத்தின் தமோபிரதான நிலையைப் பற்றியும், பக்திமார்க ஞானத்தைப் பற்றியும், சத்யுகத்தின் சதோபிரதான சுகத்தைப் பற்றியும் தெரிவதோடு அவற்றின் சூட்சும அனுபவங்களும் இருக்கிறது. எனவே நாம் முழு கல்பத்தின் சுக–துக்கங்களின் வித்தியாசங்களைப் புரிந்துகொண்டு சங்கம யுகத்தின் உண்மையான சுகத்தை நாம் அனுபவம் செய்கிறோம். அதீந்திரிய சுகம், பரமானந்தம், முக்தி–ஜீவன் முக்தி ஆகியவைகளின் சரியான அனுபவங்கள் ஆத்மாவிற்கு இப்போதுதான் கிடைக்கிறது. **பரமபிதா பரமாத்மாவின் ஞானம் ஆத்மாவிற்கு அனைத்திலும் சிறந்த வரதானமாக இருக்கிறது, அது அனைத்து வரதானங்கள், பிராப்திகள் மற்றும் அனுபவங்களுக்கு ஆதாரமாக விளங்குகிறது.**

### அமுதபாகம் – பேருண்மை

எது நடந்ததோ அதை மாற்ற முடியாது மேலும் எது நடக்கவில்லையோ அது நடந்திருக்க முடியாது என்பது அழியாத பேருண்மை. எது நடந்ததோ அது நன்றாக நடந்தது, எது நடந்துகொண்டிருக்கிறதோ அது நன்றாக நடந்துகொண்டிருக்கிறது மேலும் எது நடக்க விருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும் ஏனெனில் இந்த உலக நாடகம் சத்தியமானது, நியாயமானது மேலும் நன்மை தருவது. பவித்திரமே வாழ்க்கை. பவித்திரம் என்றால் ஆத்மீக சொரூபத்தில் நிலையாக இருப்பது, ஆன்ம நிலை, ஆன்ம பார்வை மற்றும் ஆன்ம உணர்வில் இருப்பது. எங்கே உளத்தூய்மை (பவித்திரம்) உள்ளதோ அங்கே எல்லாப் பிராப்திகளும், எல்லா சுகங்களும் தானாகவே இருக்கும், ஆசை என்பது அறியாததாகிவிடும், அனைத்து சம்பந்தங்களும் மதுரமாக இருக்கும், பிரம்மச்சரியம் இயல்பாக இருக்கும், ஆசை–கோபம், பயம்–கவலை, துக்கம்–அசாந்தி, பொறாமை–வெறுப்பு ஆகியவைகளின் பெயர் அடையாளங்கள் இருக்காது, மானம்–அவமானம், இகழ்–புகழ், சுகம்–துக்கம், பிராப்தி–அபிராப்தி ஆகியவைகளில் சமமான பார்வை மற்றும் மனநிலை இருக்கும். பவித்திர ஆத்மாவில் தக்க சமயத்தில் செய்ய வேண்டிய செயல்களின் எண்ணங்கள் தாமாகவே தோன்றும், அவர்களுக்கு நல்லதில் நாட்டமும் கெட்டதில் விருப்பமின்மையும் தானக இருக்கும், எனவே எப்போதும் எண்ணமின்றி இருப்பார். அனைத்து ஆத்மாக்களிடமும் அவர் நல்லெண்ணங்களையும் நல் விருப்பங்களையும் கொண்டிருப்பார், அதன் விளைவாக அனைத்து ஆத்மாக்களும் அவர்மீது நல்லெண்ணங்களையும் நல்விருப்பங்களையும் கொண்டிருப்பார்கள்.

உலகம் ஒரு நாடகம் அதில் ஆத்மாக்கள் அனைவரும் நடிகர்கள், இதில் நம்முடையவர் என்று யாருமில்லை அதேபோல் பிரத்தியார் என்றும் யாருமில்லை. யாரும் நமது நன்பரும் இல்லை, யாரும் நமது விரோதியும் இல்லை. நடிப்பிற்குத் தக்கபடி எது இன்று நமதோ, அது நாளை இன்னொருவருடையதாகிறது மேலும் பிறருடையது நம்முடையதாகிறது. யாரும் நமக்கு எதையும் கொடுக்கவும் முடியாது, யாரும் நம்மிடம் இருந்து எதையும் பெறவும் முடியாது. யாரும் நமக்கு எதையும் தருவதும் இல்லை, யாரும் நம்மிடம் இருந்து எதையும் பெறுவதும் இல்லை. ஒவ்வொரு ஆத்மாவும் தனது முதலும் முடிவும் இல்லாத அழியாத பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறது மேலும் தனது செயல்களின்படி சுகத்தையோ துக்கத்தையோ பெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே யார் மீதும் ஆசை–கோபம், பயம்–கவலை பற்றிய கேள்வியே எழமுடியாது. இந்த உலக நாடகத்தில் எவை கிடைத்திருக்கிறதோ, அவை நடிப்பதற்காக மட்டுமே கிடைத்திருக்கிறது, அதை தனது என்று நினைப்பது மனப்பிரம்மையாகும்.

வள்ளல் ஒரு பரமாத்மாதான், அவர் நமக்கு எதைத் தருகிறாரோ, அதுவே நம்முடையதாகும். பகவான் வாக்கு – குழந்தையே, நீ பரந்தாமத்தில் இருக்கக்கூடியவன், இந்த உலகத்திற்கு

நடிக்க வந்திருக்கிறாய், இப்போது நீ வீடு திரும்ப வேண்டும். இந்த உண்மையை நீ உணர்ந்துகொண்டு தேகம் மற்றும் தேக உலகில் இருந்து விடுபட்டு தனது ஆன்மீக சொரூபத்தில் நிலைத்திருந்து ஆழ்ந்த அமைதியையும், பேறாற்றலையும் அனுபவம் செய்வாயாக, தந்தையோடு கூடவே உலக நன்மைக்கான சேவை செய்து பரமானந்தத்தை அனுபவம் செய்வாயாக, மேலும் உலக நாடகத்தின் உண்மைநிலையை அறிந்து சாட்சியாக இருந்து உலக நாடகத்தைப் பார்த்து, டிரஸ்டியாக இருந்து பாகத்தை நடித்துக்கொண்டே ஈஸ்வரிய பிராப்திகளிலும் அனுபவங்களிலும் திளைத்திருந்து பரம சுகத்தை அனுபவம் செய்வாயாக. இதுவே சுக–சாந்திமய வாழ்விற்கான சரியான பாதையாகும்.

எப்போது இந்த சத்தியத்தின்மீது மாறாத நம்பிக்கை உண்டாகிறதோ மேலும் இடைவிடாத பயிற்சியின் மூலமாக சகஜநிலை உருவாகிறதோ அப்போதே நாம் நமது இறுதி இலக்கான சுகமய வாழ்க்கை மற்றும் மகிழ்ச்சியான மரணத்தை எளிதில் பெற முடியும். அதாவது ஆசை–கோபம், பயம்–கவலையில் இருந்து விடுபட்டு இருக்க முடியும். இதுவே வாழ்க்கையின் மிகப்பெரிய பிராப்தியாகும், பரமாத்மாவின் அரிய வரமாகும், இந்த பிராமண வாழ்க்கையின் உயர்ந்த முயற்சி மற்றும் இந்த வாழ்க்கையின் அரிய செயலாகும்.

**“எப்படி கர்மத்தின் விளைவு ஆழமானதென்று சொல்லப்படுகிறதோ, அதேபோல பவித்திரத்தின் விவரமும் மிக ஆழமானது. பவித்திரம் மாயாவின் அனேக பிரச்சினைகளில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான குடைநிழலாக இருக்கிறது. பவித்திரத்தையே சுகம்–அமைதிக்கான தாய் என்று சொல்லப்படுகிறது. … எந்தக் காரணத்தாலும் கொஞ்சமேனும் துக்கம் அனுபவமானால் அது முழுமையான பவித்திரத்தில் உள்ள குறையாக இருக்கிறது.”** அ.பாப்தாதா 14.01.84

**“பிராமணன் என்றால் நம்பிக்கை மேலும் நம்பிக்கை என்றால் வெற்றி. எனவே ஒவ்வொரு ஆத்மாவும் எந்த அளவு நம்பிக்கை மற்றும் எந்த அளவு வெற்றியோடு இருக்கிறது. ஏனெனில் பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரமே நம்பிக்கைதான் மேலும் நம்பிக்கையின் காரணத்தால் வெற்றி.”** அ.பாப்தாதா 15.04.92